விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

★

பக்கங்கள் : 28

# உதயன்

சுடர் 27
கதிர் 199


வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 30 செவ்வாய்க்கிழமை (12/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### வந்தது ஜெனரேற்றர் நயினாதீவுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 12
நயினாதீவுக்கு 24 மணி நேரம் மின்சாரம் வழங்குவதற்காக 500 கே.வி. ஜெனரேற்றர் ஒன்று நேற்று பிரத்தியேக கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டது. அதனை இறக்குவதற்கு நேற்று 04↘

## இலங்கைத் தமிழரின் தீர்வு தெளிவான நிலையில் டில்லி

### சுதர்சன நாச்சியப்பன் கருத்து



புதுடில்லி, ஜூன் 12
இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில் டில்லி தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மீள்குடியேற்றம் தொடர்பில் இந்தியா மிகுந்த அவதானம் செலுத்தி வருகின்றது என்று காங்கிரஸின் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்தார்.

ஆகவே இலங்கை அரசு வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் 04↘

## முள்ளிவாய்க்காலிலும் 17.5 ஏக்கரை முழுங்குகின்றது இலங்கைப் படை

முல்லைத்தீவு, ஜூன் 12
இலங்கைப் படையினர் வடக்கில் தாம் தற்போது நிலைகொண்டுள்ள இடங்களிலுள்ள காணிகளைக் கையகப்படுத்தி வரும் நிலையில், இறுதிப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்காலில் மட்டும் 17.5 ஏக்கர் நிலத்தை அபகரிக்க உள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

இதற்கான அனுமதியை வழங்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திடம் கோரியுள்ளனர்.

போரின் இறுதி நாள்களில் தமிழ் மக்கள் அடைக்கப்பட்டிருந்த இடம் முள்ளிவாய்க்கால். இன்று சர்வதேச ரீதியில் எழுப்பப்படும் இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களில் அனேகமானவை இந்தப் பகுதியிலேயே இடம்பெற்றன. 04↘

### சயனைட் குப்பி வைத்திருந்த இராணுவ சிப்பாய்

கொழும்பு, ஜூன் 12
சயனைட் குப்பி ஒன்றை வைத்திருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலனறுவை புலஸ்திபுர பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சிப்பாயிடமிருந்து கைத்துப்பாக்கி மற்றும் துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட் 04↘

### கட்டுத் துவக்கு வெடித்ததில் காயமடைந்தவர் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 12
சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்ட கட்டுத் துவக்கு வெடித்து படுகாயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் வடமராட்சி 04↘

# சரணடைந்த போராளிகளின் நிலைகுறித்து ஐ.நா. விசாரணை

## ஆணைக்குழுவில் சாட்சியமளித்தவர்களிடம் தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை



ஜெனிவா, ஜூன் 12
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளித்த மக்களுடன் கலந்துரையாட ஐ. நா மனிதஉரிமைகள்ஆணையர் நவநீதம்பிள்ளையின் அலுவலகம் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவந் துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது சரணடைந்த விடுதலைப் புலிகளின் போராளிகள் காணாமற் போயுள்ளதாகநல்லிணக்கஆணைக் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளித்த காணாமல் போனவர்களின் உறவினர்களுடன் கலந்துரையாட ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உண்மை 04↘

## ஐ.நாவில் அடுத்த வாரம் என்ன செய்வது? இருளில் தட்டுத்தடுமாற வைத்துவிட்டார்களே



### தமரா குணநாயகம் புலம்பல்

ஜெனிவா, ஜூன் 12
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 20ஆவது அமர்வு அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தக் கூட்டத் தொடருக்கான தயாரிப்பு ஏற்பாடுகள் தொடர்பாகத் தமக்குத் தகவல் ஏதும் தெரிவிக்காமல் இலங்கை வெளிவிவகார அமைச்சு தன்னை இருளில் விட்டுள்ளதாக ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி தமரா குணநாயகம் குற்றம் சாட்டியுள்ளார். 04↘

### பௌத்தம் சீரழிந்தது பிக்குகளால்

கொழும்பு, ஜூன் 12
பிக்குகள் நாடாளுமன்றம் சென்ற பின்னரே பௌத்த மதம் சீரழிந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார். 04↘

## புதிய தூதுவரின் கருத்து உண்மையானதுதான்

### அமெரிக்கத் தூதரகம் பதிலடி

கொழும்பு, ஜூன் 12
இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் மிச்சல் சிசனின் கருத்து அமெரிக்க ராஜாங்கக் கொள்கைகளுக்கு அமைவானது எனக் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்த கருத்துக்குப் பதிலளித்தே தூதரகம் இவ்வாறு கூறியுள்ளது.

புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட சிசன் அண்மையில் இலங்கை தொடர்பில் 04↘

## தேர்தல் நீதியாக நடந்தால் அரசு வீட்டுக்கு அனுப்பப்படும்

### ஐ.தே.க. கூறுகிறது

கொழும்பு, ஜூன் 12
தமது இயலாமையை மறைப்பதற்காக மக்கள் எம்பக்கமே என இறுமாப்புடன் இருக்கும் அரசு, மாகாணசபைத் தேர்தல்களை சில்லறைத்தனமாக நடத்துகின்றது. தேர்தலைக் கண்டு அரசு அஞ்சவில்லையென்றால், அதற்கு துணிவிருக்கின்றதென்றால் அனைத்து துறைகளையும் சுயாதீனப்படுத்தி ஒன்பது மாகாண சபைத் தேர்தல்களையும் 04↘

## மூதூர் பச்சநூர் மலையில் சிங்கள பௌத்த நிலையம்

### அரசின் மற்றொரு நில ஆக்கிரமிப்பு

திருமலை, ஜூன் 12
திருகோணமலை - மூதூர் பகுதியில் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பச்சநூர் மலையில் பாதுகாப்பு அமைச்சினால் பௌத்த நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளதுஇலங்கை அரசின் மற்றொரு நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக இது அமைந்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சேருவெல சரணகித்தி நாயக்க தேரரின் வேண்டுகோளின் 04↘

## சுடலையையும் விட்டுவைக்காது சுருட்ட முனைகிறது இராணுவம்

### வழங்க முடியாது என்கிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஜூன் 12
யாழ்ப்பாணம், கரவெட்டி பிரதேச சபையின் கீழ்வரும் சுடலைகளில் ஒன்றைக் கையளிக்குமாறு இராணுவத்தினர் நேற்று அடாவடித்தனம் செய்திருப்பதாகத் தெரிவித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மக்கள் எவரும் தமது காணிகளை இராணுவத்திடம் கொடுக்கத் தேவையில்லையென்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இது தொடர்பில் நேற்றிரவு உதயனிடம் கருத்து வெளி 04↘

# புலிகளுக்கு நிதி சேகரித்தவர்கள் குறித்து சுவிஸில் விசாரணைகள்

ஜெனிவா, ஜூன் 12

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்களுக்காக நிதி திரட்டியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 12 பேர் மீது சுவிற்ஸர்லாந்துச் சட்டத்தரணிகள் விசாரணைகளை நடத்தவுள்ளனர்.

இவர்கள் இலங்கை மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு அனுப்புவதற்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுவிற்ஸர்லாந்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்களிடம் விசாரணைகளை நடத்தவுள்ளனர். அத்துடன் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 25 விடுதலைப்புலி சந்தேக உறுப்பினர்களிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சுவிற்ஸர்லாந்தில் உள்ள தமிழர்களைப் பயன்படுத்திப் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்துக் கடன்களை பெறுவதன் மூலம் நிதிச்சேகரிப்புகள் இடம்பெற்றுள்ளதாகச் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

இதன்படி 73 ஆயிரம் டொலர்கள் முதல் 104 ஆயிரம் டொலர்கள் வரை கடன்களாகப் பெறப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இலங்கையில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று சுவிற்ஸர்லாந்தின் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளிடம் விசாரணைகளை நடத்த 2011 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு இலங்கை அரசும் அனுமதியளித்தது.

எனினும் சிறையில் உள்ள விடுதலைப்புலிச் சந்தேக நபர்களைச் சுவிற்ஸர்லாந்து மற்றும் நெதர்லாந்து சட்டத்தரணிகள் விசாரணை செய்யும்போது இலங்கைப் பொலிஸார் சமுகமளிக்க முடியாது என்ற அடிப்படையிலேயே இலங்கை அதிகாரிகளுக்கும் சுவிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. (த)

## கிராம அலுவலருக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 12

கொடிகாமத்தில் கடந்த வருடம் 7 வயதுச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பான வழக்கு மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரதேச கிராம அலுவலருக்கும் கடும் எச்சரிக்கை விடுத்து அறிக்கை சமர்ப்பிக்க சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

இந்த வழக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நீதிவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

இந்தக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அதே இடத்தைச் சேர்ந்த சந்தேக நபர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். சாட்சிகளுக்கு எந்த விதத்திலும் இடையூறு விளைவிக்கக் கூடாது என்ற அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

எனினும் சந்தேகநபர் சிறுமி கற்கும் பாடசாலையின் முன்புறமாக உலாவித் திரிகிறார். அது சிறுமிக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக மன்றில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதனையடுத்து இனிமேல் அவ்வாறான குற்றச்சாட்டு சுமத்தப்படும் பட்சத்தில் பிணை நிராகரிக்கப்பட்டு மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்படும் என சந்தேகநபர் எச்சரிக்கை செய்யப்பட்டார்.

**நீதிமன்ற உத்தரவுகளை உரிய முறையில் நடைமுறைப் படுத்த வேண்டும். தவறின் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்கு ஆளாக நேரிடும் என எச்சரிக்கை செய்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தர விட்டது.**

தவிர சந்தேகநபர் தொடர்பான மேலதிக அறிக்கைகளை மன்றில் சமர்ப்பிக்க அந்தப் பகுதி கிராம அலுவலருக்கு கடந்த முறை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால் அவர் நேற்று அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. அதனால் அந்தக் கிராம அலுவலரைக் கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிமன்றம், நீதிமன்ற உத்தரவுகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். தவறின் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்கு ஆளாக நேரிடும் என கடுமையாக எச்சரிக்கை செய்து அடுத்த முறை அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டது மன்று. இந்த வழக்கு எதிர்வரும் 28ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (த-4)

## குழந்தைகள் பால்மா அதிக விலைக்கு விற்பனையா?

கொழும்பு, ஜூன் 12

குழந்தைகளுக்கான பால்மா உற்பத்தியாளர்கள் சிலர், நுகர்வோர் விவகார அதிகாரசபை அங்கீகரித்த விலைக்கு முரணான விலையில் பால்மாவை விற்பனை செய்வதாக கூறப்பட்டபோதிலும் அது தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு இதுவரை முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை என அவ்வதிகார சபையின் தலைவர் ரூமி மர்ஸூக் தெரிவித்தார்.

இந்த வதந்திகள் குறித்து நாம் கேள்விப்பட்டுள்ளோம். இவ்விடயத்தை நாம் தீவிரமாக கருத்திற்கொண்டுள்ளோம். எனினும் இது தொடர்பாக பாவனையாளர்களிடமிருந்து எமக்கு முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை என அவர் கூறினார்.(த)

## கூடங்குளம் பாதிப்புக் குறித்து இலங்கை - இந்தியா ஆராய்வு

கொழும்பு, ஜூன் 12

கூடங்குளம் அணு விபத்து பேரிடர் மேலாண்மை தொடர்பாக இந்திய அணு சக்தி அதிகாரிகளை இலங்கை அதிகாரிகள் ஜூலை 9 ஆம் திகதி முதல் 15ஆம் திகதிக்குள் புதுடில்லியில் சந்தித்துப் பேச இருக்கின்றனர்.

கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அதேபோல், கூடங்குளம் அணு உலையில் விபத்து ஏற்பட்டால் அது இலங்கையையும் பாதிக்கும் என்று அங்குள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

இதையடுத்து, இந்தியாவுடன் அணு விபத்து பேரிடர் மேலாண்மை தொடர்பாக உடன்பாடு செய்து கொள்ள இலங்கை விரும்பியது. இதன் ஒருபகுதியாகவே இந்திய அதிகாரிகளுடன் இலங்கை அதிகாரிகள் பேச்சு நடத்துகின்றனர்.

புதுடில்லியில் நடக்க இருக்கும் சந்திப்பின்போது இரு நாட்டு அதிகாரிகளும் இருதரப்பு உடன்பாடு தொடர்பாக ஆலோசிப்பார்கள் என்று ஞாயிற்றுக்கிழமை தேசிய இலங்கையின் அணுசக்தி ஆணைய தலைவர் ரஞ்சித் விஜயவர்த்தன தெரிவித்தார்.

இலங்கையின் மின்சாரத்துறை அமைச்சராக சம்பிக்க ரணவக்க பொறுப்பேற்ற பிறகு, இதற்கான பணிகளை மீண்டும் முடுக்கி விட்டார். இதையடுத்து, திருத்தப்பட்ட ஆவணம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த இந்திய அதிகாரிகள், எங்களைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தனர். உத்தேசமாக ஜூலை 9 ஆம் திகதி முதல் 15ஆம் திகதிக்குள் இரு நாட்டு அதிகாரிகளும் சந்திக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்றார் விஜயவர்த்தன. (த)

## இந்த ஆண்டில் தேர்தல் சாத்தியமில்லை

### மஹிந்த தேசப்பிரிய கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 12

இந்த ஆண்டில் தேர்தல்கள் நடத்தப்படக் கூடிய சாத்தியம் கிடையாது என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். தேர்தல் திணைக்கள நாள்காட்டியின் அடிப்படையில் இந்த ஆண்டில் இடைத்தேர்தல்கள் எதனையும் நடத்தக் கூடிய வாய்ப்பு கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



சில மாகாணசபைகள் கலைக்கப்பட்டுத் தேர்தல் நடத்தப்பட உள்ளதாக வெளியாகும் தகவல்கள் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் நடத்துவது குறித்து இதுவரையில் அரசு எதனையும் அறிவிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று மாகாண சபைகள் கலைக்கப்பட்டுத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாகச் செய்திகள் வழியாக அறிந்து கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.(த)

## குடிவரவுத் திணைக்களம் இன்ரபோலுடன் இணைவு

கொழும்பு, ஜூன் 12

இலங்கையின் குடிவரவு, குடியகல்வு திணைக்கள மையத்தைச் சர்வதேச இன்ரபோல் பொலிஸாரின் தரவு மையத்தையும் இணைக்கும் நிகழ்ச்சித் திட்டம் கொழும்பில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் கனடாவுக்கான உயர்ஸ்தானிகரும் பங்கேற்றார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இலங்கையில் சுற்றுலாத்துறை மற்றும் முதலீட்டுத் துறை அதிகரித்துள்ளமையை அடுத்து சர்வதேச மோசடிகளை தடுக்கும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதே வேளை இந்தத் தரவுகளை இணைக்கும் நிகழ்ச்சித் திட்டம் மூலம் சர்வதேச இன்ரபோல் பொலிஸ் வசமிருக்கும் 35 மில்லியன் காணாமல் போன கடவுச்சீட்டுக்களின் தகவல்களை இலங்கை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் பெற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## சிறைத்தண்டனை முடிந்தும் நாடு திரும்ப முடியாத இலங்கையர்

டுபாயில் கடந்த ஐந்து ஆண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்து வந்த இலங்கையருக்குத் தனது தண்டனைக் காலம் முடிந்த பின்பும் நாடு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவர் தனது கடவுச்சீட்டினைத் தவறவிட்ட காரணத்தால் மீண்டும் இலங்கை திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சிங்களவரான சிந்தன சம்பத் என்பவர் தற்போது இஸ்லாமிய மதத்துக்கு மாறி தனது பெயரை அப்துல் ரகுமான் என மாற்றியுள்ளார்.

சிறைத் தண்டனைக் காலம் முடிவடைந்த போதிலும் அவருடைய கடவுச்சீட்டு இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நான் இன்னும் எவ்வளவு காலங்கள் சிறையில் இருக்கப் போகிறேன் என்று தெரியவில்லை. என்னால் இலங்கைத் தூதரகத்தைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என அவர் அரபு ஊடகம் ஒன்றின் மூலம் கேள்வி எழுப்பியுள்ளார். (த)

## புலனாய்வுப் பிரிவினர் எமது வீட்டை அபகரித்துள்ளனர்

### சுவிஸில் உள்ள இலங்கையர் இருவர் வழக்கு

ஜெனிவா, ஜூன் 12

சுவிற்ஸர்லாந்தில் வாழ்கின்ற இரண்டு இலங்கையர்கள், வெள்ளவத்தையில் உள்ள தமக்குச் சொந்தமான கட்டடத்தைச் சட்ட விரோதமாகப் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றி வைத்திருப்பதாகக் குற்றம் சுமத்தி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் வழக்கை உயர்நீதிமன்றம் டிசெம்பர் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

மனுதாரர்களாக சண்முகம் சிவராஜா, சிவராஜா சரோஜினிதேவி ஆகியோருக்காக அற்றோனித் தத்துவம் பெற்றுள்ள வளர்மதி சுந்தரலிங்கம், இந்த வீட்டை பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றி வாழ்ந்தபோதும் முழு கட்டடத்துக்கான மின், நீர் கட்டணங்களைத் தானே செலுத்தியதாகவும், வழக்குத் தாக்கல் செய்தபின் அவர்கள் தனியாக மின், நீர் இணைப்புகளை பெற்றதாகவும் கூறினார். ஆயினும் சகல மாடிகளுக்கும் நீர் வழங்கும் நீர் பம்பிக்கான மின் கட்டணத்தைத் தானே இன்னும் செலுத்துவதாகவும் இங்கு 16 பெண் புலனாய்வாளர்கள் வசிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சொத்தை 2 ஆவது மனுதாரரின் மைத்துனரான சிவப்பிரகாசம் விஜயநேசன் என்பவரே வாங்கிக் கொடுத்தார் எனவும், அப்போதைய சட்டத்தின்படி சொத்தை வாங்கிய சுவிற்ஸர்லாந்தில் வசித்த மனுதாரர் சிவராஜா உறுதியில் கையொப்பமிடத் தேவையில்லை எனவும் கூறினார்.

''நம்பிக்கையின் பேரில் இந்த வீட்டை பொறுப்பேற்ற விஜயநேசன், இந்த வீட்டை ஆரோக்கிய நிலையத்துக்கு குத்தகைக்குக் கொடுத்தார். பின்னர் விஜயநேசன் 2008 இல் ஆஸ்திரேலியாவில் குடியேறிவிட்டார்.

முதலாவது பிரதிவாதியான பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியும் அவரது உத்தியோகத்தர்களும் இந்த வீடு பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்பட்டதாகக் கூறுவது ஏற்கமுடியாதது' என மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார். அவ்வாறு பயன்பட்டிருந்தால் அங்கு பணியாற்றியவர்களை விசாரணையின் பின் விடுவித்திருக்க மாட்டார்கள் என அவர் கூறினார்.

இங்கு வேலை செய்தவர்களை விடுவித்தபின் சொத்தைக் கைப்பற்றியிருப்பது ஏற்க முடியாதது என அவர் முறைப்பட்டுள்ளார். இந்த வீட்டில் பெண் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் இருப்பதற்கு அதிகாரமளிக்கும் முறையான ஆவணம் ஏதும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

இந்த வீட்டில் ஒரு பகுதியில் தான் குடும்பமாக வசிப்பதாகவும், முதல் மாடியில் உள்ள பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களைச் சந்திக்க இரவில் கூட ஆள்கள் வருவதாகவும் இதனால் வீட்டை இரவில் கூடத் திறந்து வைக்க வேண்டியுள்ளது என அவர் கூறினார்.

இந்த உரிமை மனுவை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டு விசாரணையை டிசெம்பர் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.(த)

# சட்டவிரோதமாக விகாரைகள்; நடவடிக்கை எடுக்க முடியுமா?

### வலி.மேற்குப் பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் கேள்வி எழுப்பினார் தலைவர்

வலி.தென்மேற்கு, ஜூன் 12

சட்டவிரோதமான கட்டடங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியுமானால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுவரும் விகாரைகள் குறித்தும் நடவடிக்கை எடுக்க முடியுமா? என்று வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் அ.ஜெபநேசன் கேள்வி எழுப்பினார்.

வலி.மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அமைதியாக இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின் இடையில் சூடு பறந்தது.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சபையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை அடுத்தே குழப்பநிலை ஏற்பட்டது.

''சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட கட்டடங்களுக்குச் சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமானால் எமது பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட விகாரைகள் மீதும் எம்மை மீளக்குடியமர அனுமதி மறுப்பவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா?'' என்று கேள்வி எழுப்பியதுடன் அது தொடர்பிலான பிரேரணையையும் ஆதரிக்க மறுத்தார் தலைவர்.

இந்த நிலையில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறினர். இதனையடுத்துக் கோரமில்லாமல் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் எல்லைப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

இதில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமும் அனுமதி பெறப்படாது அமைக்கப்படுகின்றமை குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலையில் இவ்வாறு சட்டவிரோதமாக அமைக்கப்படும் கட்டடங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர் கே.கௌரிகாந்தனால் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்தே சபையில் குழப்ப நிலை தோன்றியது. (ம-115)

# பொதுமக்களின் காணிகளை விடுவித்து நகரின் அபிவிருத்திக்கு உதவ வேண்டும்

### படையினரைக் கோருகிறார் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஜூன் 12

*வல்வெட்டித்துறையில் படையினர் அபகரித்துள்ள பொதுமக்களின் காணிகளையும் வீடுகளையும் விடுவித்து நகர அபிவிருத்திக்கு உதவ வேண்டும். இவ்வாறு வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் எஸ். சேவியர் குலநாயகம் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-*

சுமார் 80 குடும்பங்களின் காணிகளையும் வீடுகளையும் படையினர் அபகரித்து வைத்துள்ளனர்.

நீண்ட காலமாக வல்வெட்டித்துறை பிரதான சந்தியில் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் அபிவிருத்தி என்பது பின்னோக்கியே சென்று கொண்டு இருக்கிறது. வல்வெட்டித்துறை நகரசபையாக உள்ள போதும் நகரை அபிவிருத்தி செய்ய முடியாதுள்ளது.

வல்வெட்டித்துறையில் உள்ள படையினருக்குச் சொந்தமான காணி 65 பரப்பு ஊரிக்காட்டில் உள்ளது. இந்தக் காணி 1996ஆம் ஆண்டு தென்னிந்திய திருச்சபையிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

எனவே வல்வெட்டித்துறைச் சந்தியில் உள்ள படைமுகாமை ஊரிக்காட்டுக்கு மாற்றுங்கள். இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே தீர்மானம் ஒன்று முன்னாள் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஊடாக பலாலி தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டது.

ஆனால் இந்த விடயம் தொடர்பாக இதுவரை நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் ஊடாக இரண்டாவது நினைவுபடுத்தலை அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கூறினார். (ம-41)

## ஜெய்ப்பூர் வெள்ளி விழா கொடிவாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் நிதி சேகரிப்பை நோக்காகக் கொண்ட கொடிவார நிகழ்வு நேற்று திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தலைவர் மருத்துவர் ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் வடமாகாண ஆளுநர் செயலகத்தில் இந்தக் கொடிவாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட பாடசாலைகள், ஏனைய அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், கல்வித்திணைக்களங்கள் ஆகிய இடங்களுக்கு நிதி சேகரிப்புக்கான கொடிகள் விநியோகம் செய்யப்பட்டன.

மாற்று வலுவுடையோர்களுக்கான செயற்கை அவயவங்கள் பொருத்தும் மனிதாபிமான பணிகளை மேற்கொண்டு வரும் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் செயற்கை அவயவங்களைத் தயாரிப்பதில் எதிர் கொள்ளும் நிதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இந்தக் கொடி வாரத்தை ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி வரை ஜெய்ப்பூர் நிறுவனத்தின் உண்டியல்களுடன் பணியாளர்கள் அரச, தனியார் அலுவலகங்களுக்குச் சென்று நிதி சேகரிப்பில் ஈடுபடவுள்ளனர். (ம-14)

## அனுமதியற்ற சாராயத்தால் பறந்தது ரூ.25 ஆயிரம்

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயத்தை வீட்டில் வைத்திருந்த நபரொருவருக்கு பருத்தித்துறை நீதி மன்றத்தில் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறைப் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின் போது, அதே பொலிஸ் பிரிவில் உள்ள வீடொன்றில் அளவுக்கு அதிகமாக அரச சாராயம் வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு அவர் மீது பருத்தித்துறை நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றத்தில், மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது பிரதிவாதி குற்றத்தை ஒப்புக் கொண்டார். குற்ற ஒப்புதலின் பேரில் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-8)

## ஒரே குடும்பத்தில் மூவர் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, ஜூன் 12

நீண்ட நாள்களின் பின்னர் சொந்த மண்ணைப் பார்க்க திருகோணமலையிலிருந்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தாக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த 7 ஆம் திகதி மட்டுவில் கிழக்கில் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் இந்திராணி (வயது 48) அவரது பிள்ளைகளான ஆறுமுகம் சிவகுமார் ( வயது 26 ), ஆறுமுகம் விஜயகுமாரி (வயது 24 ) ஆகியோரே அங்கு நின்ற அவர்களது உறவினர்கள் சிலரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான சிவகுமாருக்கு கையில் உடைவு ஏற்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். தாயும் மகளும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த 7 ஆம் திகதி இரவு தாக்குதலுக்கு இலக்கான மேலும் இருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீசாலை தெற்கைச் சேர்ந்த சின்னவி பூபாலசிங்கம் ( வயது- 57) நாகமுத்து பரமநாதன் (வயது- 52 ) ஆகியோரே அனுமதிக்கப்பட்டவர்களாவர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாகச் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)

## தொடரும் கொடூர பலி



யாழ்ப்பாணம், ஜூன்12

வரலாற்றுச் சிறப்பு மிக்க கருகம்பனை கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் இந்த வருடமும் கொடூர பலி இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை இந்த ஆலய வேள்வி நடைபெற்றது. வேள்வியில் 375 ஆடுகளும் 400 வரையான கோழிகளும் பலியிடப்பட்டுள்ளன.

ஆலய முன்றிலில் இந்தப் பலியிடல் இடம்பெற்றுள்ளது.

இதன் போது முதலில் பலியிடப்பட்ட ஆட்டுக்கடா ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது. இந்த ஆலயத்தில் வருடாந்தம் வேள்வி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-38-86)

## தனது குரல்வளையை பிளேட்டால் அறுத்த இளைஞன்

### பொலிஸார் விசாரிக்க முற்பட்ட வேளை

பொலிஸாரைக் கண்ட இளைஞர் பிளேட்டால் தனது குரல்வளையை அறுத்துக் கொள்ள முயன்ற சம்பவம் கடந்த 8 ஆம் திகதி நாவற்குழி ஐயனார் கோயிலடியில் இடம்பெற்றது.

நாவற்குழி, கைதடி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற திருட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் சாவகச்சேரி பொலிஸார் அடிக்கடி இப் பகுதிகளுக்குச் சென்று வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 8 ஆம் திகதி நாவற்குழிப் பகுதியில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக சென்றவேளையில் இந்த இளைஞரை விசாரணை செய்ய முற்பட்டனர்.

இந்தவேளையில் திடீரென குறித்த இளைஞர் பொலிஸார் முன்னிலையில் பிளேட்டால் குரல்வளையை அறுத்தார்.

இதனை அவதானித்த பொலிஸார் உடனடியாகச் செயற்பட்டுத் தடுத்ததுடன் காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த விஜயகுமார் சஞ்சீவன் (வயது 22) என்ற இளைஞரைச் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வந்து அனுமதித்தனர். காயமடைந்த இளைஞர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (த-9)

## வரணி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

வரணி அரசினர் பொது வைத்தியசாலையில் தற்போது வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அதேசமயம் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

போர் நிலவிய காலகட்டத்தில் நோயாளர் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற முடியாத நிலைமை இருந்தது. தற்போது புதிய வைத்திய அதிகாரி நியமனம் பெற்று வருகை தந்ததையடுத்து சிகிச்சை பெறுவோர் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-122)

## சயனைட் குப்பி...

01↘ டுள்ளன. சந்தேக நபர் நேற்று நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப் பட்ட சயனைட் குப்பியை வைத்திருந்தாரா என்பது பற்றி இவரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(த)

## இலங்கைத் தமிழரின் தீர்வு...

01↘ பாதுகாப்பு மற்றும் சுதந்திரம் என்பவை தொடர்பில் ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் எனவும் அவர் தெரிவித்தார். உள்நாட்டில் மாத்திரமல்லாது வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந்து சென்றுள்ள இலங்கைத் தமிழர்கள் அனைவரும் அவர்களின் சொந்த இடங்களிலேயே மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். இதற்காகவும் இந்தியா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

யுத்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் இலங்கையின் விடயங்கள் குறித்து இந்தியா அவதானிப்புடனேயே உள்ளது. குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் என்பன தொடர்பில் உள்நாட்டு அரசுடன் பல முறை பேச்சுக்களையும் முன்னெடுத்து வருகின்றது.

இலங்கை வாழ் தமிழ் உறவுகளின் பிரச்சினைகளுக்கான தீர்வில் தெளிவான நிலைப்பாட்டிலேயே இந்தியா உள்ளது. அரசியல் தீர்வு மாத்திரமல்ல, மீளக்குடியேற்றம், கலாசார மரபுரிமைகள் என்பவற்றை பேணிப் பாதுகாக்க வேண்டும். வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் போன்ற பல தரப்பட்ட விடயங்கள் குறித்து இந்தியா அவதானம் செலுத்தியுள்ளது.

இறுதியாக இலங்கைக்குப் பயணம் செய்தபோது அங்கு தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நிகழ்காலப் பிரச்சினைகளை அவதானித்தோம். குறிப்பாக மனிக்பாம் முகாம் மக்கள் இன்னும் துரதிர்ஷ்டவசமான வாழ்க்கையினையே எதிர்கொள்கின்றனர்.இவ்வாறான இன்னும் தீர்க்கப்படாமல் உள்ள காணாமற்போனவர்களின் விடயம் என்பவை தொடர்பில் மத்திய அரசுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம் - என்றார்.(த)

## தேர்தல் நீதியாக நடந்தால்...

01↘ ஒரேதினத்தில் நடத்துமாறு ஐ.தே.கட்சி அரசுக்கு சவால் விடுத்தது.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்தி நீதியாகவும், சுதந்திரமாகவும் அரசு தேர்தலை நடத்துமாயின், மக்கள் அரசிற்கு சரியான விடை கொடுக்கக் காத்திருக்கின்றனர் எனத் தெரிவித்த ஐ.தே. கட்சியின் ஊடகப்பேச்சாளர் கயந்த கருணாதிலக எம்.பி., அரசினுள்ளே உட்கட்சிப்பூசல் வலுத்துள்ளதால் அது மாபெரும் சிக்கலுக்குள் சிக்கித் தவிக்கின்றது எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழக்கூடியதொரு சூழலை நாம் கட்டியெழுப்புவோம் என மஹிந்த அரசு ஆட்சிக்கு வந்ததுமுதல் கூறிக்கொண்டிருக்கின்றது. ஆனால், தற்போது கொலை, கொள்ளை, பொய், கடத்தல் என குற்றச் செயல்களே நாட்டில் மேலோங்கி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. மக்கள் மீது பாரிய சுமையை ஏற்றியுள்ள அரசு, அதை இறக்கிவைப்பதற்கு வழிசெய்வதாகத் தெரியவில்லை. மாறாக, மக்கள் எம்பக்கமே இருக்கின்றனர் என மார்தட்டிக்கொண்டு தமது இயலாமையை மறைப்பதற்காக சில்லறைத் தனமாகத் தேர்தல் நடத்துகின்றது. இப்போது ஜனாதிபதித் தேர்தலையும் நடத்தப்போகிறது எனத் தகவல் வெளியாகின்றது.

நாட்டில் சட்டவிரோதச் செயல்கள் தற்போது மேலோங்கிக் காணப்படுகின்றன. 2009ஆம் ஆண்டு மதுபானம் 96 மில்லியன் லீற்றராக உற்பத்தி செய்யப்பட்டது. 2010 ஆம் ஆண்டு 120 மில்லியன் லீற்றராக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஒரு வருட காலத்திற்குள் 24 மில்லியன் லீற்றர் மதுபானம் மேலதிகமாக உற்பத்திசெய்யப்பட்டுள்ளது.

தற்போது ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் பெருந்தொகையான மோட்டார் கார்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. ஆனால், மோட்டார் கார் கொள்வனவு செய்யும் பலர் அந்தக் கொள்வனவை நிராகரித்துள்ளனர். வாகனங்களின் இறக்குமதி வரி அதிகரிப்பால் அவர்களின் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது, உலக சந்தையில் எரிபொருள்களின் விலை குறைவடைந்துள்ள நிலையிலும், உள்நாட்டில் எரிபொருள்களின் விலையை அரசு குறைக்கவில்லை. இந்தியன் எரிபொருள் கூட்டுத்தாபனம் இலாபத்தில் இயங்கும்போது உள்நாட்டு எரிபொருள் கூட்டுத்தாபனம் மட்டும் ஏன் நட்டத்தில் இயங்குகின்றது?

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை குறைவடைந்த உடனே உள்நாட்டில் அதன் விலையைக் குறைப்போம் எனக் கூறிய அரசு, தற்போது எரிபொருள் விலையைக் குறைப்பதற்கு கால அவகாசம் கேட்கின்றது. இதனை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இதற்கெல்லாம் அரசு பதில் கூறியே ஆகவேண்டும் - என்றார்.

## கட்டுத் துவக்கு வெடித்ததில்...

01↘ கிழக்கு, முள்ளியான்கோவிலில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் பிரதீபன் (வயது - 21) என்பவரே மரண மானவராவார். சட்டவிரோதப் பொருளான கட்டுத்துவக்கு காட்டுப் பகுதியில் பன்றிக்கு இலக்கு வைத்து வைக்கப்பட்டிருந்தது. அதனை அறியாத பிரதீபன் வழமை போல் சீவல் தொழிலுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தபோது கட்டுத் துவக்கு வெடித்ததில் அவர் காலில் படுகாயம் அடைந்தார்.

உடனடியாகவே அவர் கிளிநொச்சி வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே முழங்காலுக்குக் கீழ் பகுதி வெட்டி அகற்றப்பட்டது. பின்னர் கடந்த 5 ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். அங்கு காயப்பட்ட காலின் தொடைப்பகுதிக்குக் கீழ் வெட்டி அகற்றப்பட்டது. தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டது எனினும் அது பயனளிக்காது நேற்றுக் காலை 7 மணியளவில் அங்கு மரணமானார்.

பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தவிர அந்தக் கட்டுத் துவக்கை அந்த இடத்தில் பொருத்திய சந்தேக நபர் கடந்த முதலாம் திகதி பொலிஸாரால் கைது செய்யபட்டார். (த-4)

## வந்தது ஜெனரேற்றர்...

01↘ முழுநாளும் போராடிய போதும் கடல்வற்றுக் காரணமாக கப்பலைக் கரையில் அணைக்க முடியவில்லை. இதனால் அந்தக் கப்பல் நயினாதீவுக் கடலில் நங்கூரமிடப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை 4 மணிக்கு நயினாதீவு மக்களின் ஒத்துழைப்புடன் நயினாதீவு வங்களாவடித்துறையில் ஜெனரேற்றர் இறக்கப்படும் என வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார்.

நயினாதீவுத் திருவிழாவுக்கு முன்னதாகப் புதிதாக தருவிக்கப்பட்ட ஜெனரேற்றர் மூலம் 24 மணி நேரம் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-50)

## சரணடைந்த போராளிகளின்...

01↘ களைக் கண்டறியும் குழு திட்டமிட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தினால் விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோளை இலங்கை அரசு நிராகரிக்குமாயின், இந்தக் கலந்துரையாடல்கள் மூன்றாவது தரப்பின் ஊடாக இடம்பெறலாம் எனவும் இந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணத்துக்கு முன்னதாக உண்மைகளைக் கண்டறியும் குழு ஒன்றை அனுப்புவதற்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் இலங்கை அரசுக்கு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலேயே இந்தக் கலந்துரையாடலுக்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.எனினும், நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளித்தோரைச் சந்திப்பதற்கு அனுமதி வழங்குமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவல்கம் இலங்கை அரசிடம் உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்ததா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

அதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையோ அல்லது அவரின் அதிகாரிகளோ இலங்கைக்குப் பயணம் செய்வதற்கு இலங்கையின் தேசியவாதக் கட்சிகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது சரணடைந்த விடுதலைப் புலிகளின்போராளிகள் பலர் சித்திரவதை செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் சனல்- 4 தொலைக் காட்சியும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் தகுந்த ஆதாரங்களை அண்மைக்காலமாக வெளியிட்டு வருகின்றன.

இந்த நிலையிலேயே நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளித்த காணாமல் போனவர்களின் உறவினர்களுடன் கலந்துரையாட ஐ.நா தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது. (த)

## ஐ.நாவில் அடுத்தவாரம்...

01↘ ஐ.நா மனித உரிமைகள் சபையின் 20ஆவது கூட்டத்தொடர் வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை முதல்வாரம் வரை நடைபெறவுள்ளது. இந்தமுறை இலங்கை விவகாரங்கள் குறித்த விவாதம் ஏதும் நடத்தப்படாது. அதுகுறித்து அதிகாரபூர்வமாகப் பட்டியலிடப்படவில்லை.

ஆனால், அரசசார்பற்ற நிறுவனங்களும், அனைத்துலக குழுக்களும் இலங்கைக்கு எதிராகப் பரப்புரை செய்வதில் ஆர்வம் கொண்டுள்ளன. பொறுப்புக்கூறல் மற்றும் ஊடக உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து அரசசார்பற்ற நிறுவனங்கள் பரப்புரை செய்யக் கூடும் என்றும் தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாக இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், இவற்றை எதிர்கொள்வது குறித்த இலங்கையின் திட்டங்கள் தொடர்பாகத் தமக்கு ஏதும் தெரியப்படுத்தாமல் தன்னை இருளில் விட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு மீது அவர் குற்றம்சாட்டியுள்ளார். (த)

## பௌத்தம் சீரழிந்தது....

01↘ மத குருமார்கள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டு நாடாளுமன்றம் வருவதைத் தடை செய்ய வேண்டும் எனக் கோரி நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு முஸ்தீபு செய்துள்ள தனிநபர் பிரேரணை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தேர்தலில் போட்டியிட்ட மக்களின் ஆணையைப்பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகும் பிக்குகளால் நடைபெறுவது ஒன்றுமில்லை.

பிக்குகள் நாடாளுமன்றில் அங்கம் வகிக்காத காலத்தில் புத்தமதம் பாதுகாக்கப்பட்டது. பிக்குகள் என்று நாடாளுமன்றத்துக்கு வந்தார்களோ அன்று முதல் நாடாளுமன்றம் வீணானது போல் புத்தமதமும் வீணாகியுள்ளது - என்றார்.

## மூதூர் பச்சநூர் மலையில்....

01↘ பேரிலேயே இந்தப் பௌத்த நிலையத்தை அமைப்பதற்கு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

தமிழ்மக்களின் பாரம்பரிய வாழ்விடமான பச்சநூர் பிரதேசத்தில் உள்ள மூன்றாம்கட்டை மலையிலேயே இந்தப் பௌத்த நிலையம் அமைக்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கில் அழிக்கப்பட்ட பௌத்த விகாரைகள் மற்றும் வழிபாட்டு இடங்கள் தற்போது திருத்தியமைக்கப்பட்டு வருவதாகவும் அவை அனைத்தும் விரைவில் பொதுமக்களின் வழிபாட்டுக்காகத் திறந்து விடப்படும் என்றும் கோத்தபாய கூறியுள்ளார்.

வடக்கிலும், கிழக்கிலும் பாழடைந்து போயிருந்த பெரும் எண்ணிக்கையான பௌத்த விகாரைகள் தற்போது அரசினால் மீளத் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இந்த வரலாற்று ஆலயங்களில் வழிபாடு நடத்துவதற்குப் பொதுமக்கள் அங்கு விரைவில் செல்ல முடியும். வடக்கு, கிழக்கில் உள்ள வரலாற்றுக்கால தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க ஆலயங்களுக்கு, தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரின் கோரிக்கையை அடுத்துப் பாதுகாப்பு வழங்க, பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.(த)

## புதிய தூதுவரின் கருத்து....

01↘ சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

அவர் இலங்கை தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் அமெரிக்க ராஜாங்கக் கொள்கைகளுக்கு அமைவானதே என தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கான புதிய தூதுவர் பதவியை பெற்றுக் கொள்வதற்காக வெளிவிவகார செனட் சபையில் சிசன் இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.மனித உரிமை விவகாரம், வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றுதல், வட மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட சில விடங்கள் குறித்து அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

அமெரிக்கத் தூதுவரின் கருத்துக்கும் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் கருத்துக்கும் இடையில் முரண்பாடு நிலவுவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அமெரிக்கத் தூதரகம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது. (த)

## சுடலையையும் விட்டுவைக்க...

01↘ யிட்ட சுமந்திரன் எம்.பி.மேலும் கூறியவை வருமாறு:-

கரவெட்டி பிரதேச சபைக்கு நேற்று திங்கட்கிழமை சென்ற இராணுவத்தினர் அந்தப் பிரதேச சபையின் கீழுள்ள சுடலை ஒன்றைக் கையளிக்க வேண்டுமெனக் கேட்டிருக்கின்றனர். அது எமது கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேச சபை. இந்தக் காணியைக் கையளிக்கமுடியாதென்று நாம் திட்டவட்டமாகக் கூறிவிட்டோம். காணியைக் கையளிக்க முடியாவிட்டால் அதனை எழுத்துமூலம் தருமாறு படையினர் கேட்டிருக்கின்றனர். அதனை எழுத்துமூலம் தருவோமென பிரதேசசபை அவர்களிடம் கூறியிருக்கிறது.

படையினர் காணிகளைக் கேட்கிறார்கள் என்பதற்காக மக்கள் தமது காணிகளைக் கொடுத்துவிடவேண்டுமென்ற அவசியமில்லை.

அவசரகாலச்சட்டம் அமுலில் இருந்தபோது படையினர் பலாத்காரமாக எதனையும் செய்யமுடிந்த நிலை இருந்தது. ஆனால், இன்று அந்தச் சட்டம் அமுலில் இல்லாத காரணத்தினால் மக்கள் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. படையினர் மக்களின் காணிகளில் குடியேறினால் மாத்திரமே நாம் சட்டரீதியான நடவடிக்கைகளில் இறங்கமுடியும்.

எனவே, படையினர் கோரிக்கை விடுக்கின்றனர் என்பதற்காக எவரும் அச்சமடையக்கூடாது என்பதை நாம் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறோம். படையினர் அராஜகமாக செயற்பட்டால் சட்டரீதியாக அதனை நாங்கள் எதிர்கொள்வோம். அதற்குத் தயாராகவே உள்ளோம் - என்றார் சுமந்திரன் எம்.பி.

## முள்ளிவாய்க்காலிலும் 17.5 ஏக்கரை....

01↘ இந்தப் பகுதியிலேயே போரின் இறுதி நாள்களில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்தனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இங்கு பெரும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் சந்தேகம் வெளியிட்டு வருகின்றன. (உ-6)

| கையகப்படுத்துவோர் | நோக்கம் | காணி அளவு | கிராமசேவகர் பிரிவு |
|---|---|---|---|
| புதுக்குடியிருப்பு இராணுவக் கட்டளைப் பணியகம் | புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம் | 5 ஏக்கர் | முள்ளிவாய்க்கால் |
| புதுக்குடியிருப்பு இராணுவக் கட்டளைப் பணியகம் | புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம் | 7.5 ஏக்கர் | முள்ளிவாய்க்கால் |
| 591ஆவது படைப்பிரிவு கொமாண்டர் | தேசிய பாதுகாப்பு பணியகத்தின் 26ஆவது தலைமைக் காரியாலயம் | 5 ஏக்கர் | முள்ளிவாய்க்கால் |
| கொமாண்டர் | முள்ளிவாய்க்கால் கிழக்கு, நவல் முகாம் | --- | முள்ளிவாய்க்கால் |

# தண்ணீர்! தண்ணீர்!!

## பூநகரி, மாந்தைப் பகுதிகளில் உவராகும் நீர் நிலைகளால் மக்கள் அவலம்


அக்கராயன், ஜூன் 12

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி மற்றும் மன்னார் மாந்தை மேற்கு பகுதிகளில் உள்ள நீர் நிலைகள் திடீரென உவராகி வருவதால் அந்தப் பகுதிகளின் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இங்குள்ள மக்கள் குடிதண்ணீருக்காக தூர இட்ங்களுக்கு அலைந்து திரியும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதே வேகத்தில் தொடர்ந்தும் நீர் நிலைகள் நன்னீரை அங்கு பெற்றுக் கொள்ளவே முடியாத அபாயம் ஏற்படும் என்றும் எதிர்வு கூறப்படுகிறது.

பூநகரியிலுள்ள பல கிராமங்களில் கிணறுகள் உவர் நீராக மாறிவருவதால் அங்கு மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் குடிதண்ணீருக்காக நீண்ட தூரம் அலைந்து செல்வதைக் காணமுடிகிறது. இங்குள்ள 12 க்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்குப் பூநகரி பிரதேச சபையே குடிதண்ணீர் வழங்கலில் ஈடுபட்டுள்ளது.எனினும் தூர இடங்களில் உள்ள பாடசாலைகளுக்குக் குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்வதில் இடர்கள் காணப்படுகின்றன. இதனால் குறித்த நேரங்களில் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதே வேளை மன்னார் மாந்தை மேற்குப் பகுதியிலும் பெரும் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளங்குளம் இலுப்பக்கடவை, கள்ளியடி, தேவன்பிட்டி, மூன்றாம் பிட்டி, அந்தோனியார் புரம், பள்ளமடு, கூராய் ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களே இவ்வாறு குடிதண்ணீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.



இலுப்பைக்கடவை மக்கள் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள முதலியார் கமத்துக்கு குடிதண்ணீர் பெறுவதற்காகத் தினமும் நடந்து செல்கின்றனர். மாந்தை மேற்குப் பிரதேச சபையினர் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை தீர்க்கும் வகையில் குடிதண்ணீர் விநியோகத்தினை மேற்கொண்டுள்ளனர். எனவே நீர்நிலைகள் உவராவதைத் தடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை எடுத்து இந்தப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் தட்டுப்பாட்டை இல்லாதொழிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொது மக்கள் கோரியுள்ளனர். (ங-க-18)

## விடுமுறை நாளிலும் வீடு செல்ல வழியில்லை

### மடு வலய ஆசிரியர்கள் மனக் குமுறல்

மன்னார், ஜூன் 12

மடு கல்வி வலயத்தில் கல்வி கற்பிக்கும் வெளிமாவட்ட ஆசிரியர்கள் சிலர் சனிக்கிழமைகளில் கூட தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத அவல நிலையில் இருப்பதாக கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

தரம் ஐந்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கு முந்திய முன்னோடிப் பரீட்சை, ஒன்றுவிட்ட ஒரு சனிக்கிழமைகளில் நடைபெறுகின்றது. இவ்வாறு நடைபெறும் பரீட்சை, விடைத் தாள்களை அடுத்த சனிக்கிழமை வலய அலுவலகத்துக்குக் கொண்டு சென்று திருத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இதனால் சனிக்கிழமைகளில் கூட தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் தரம் 5 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் உள்ளனர்.

தாம் கற்பிக்கும் பாடசாலையில், இரவில் தங்கும் தாம், பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளில் பரீட்சை விடைத் தாள்களைத் திருத்த முடியுமென இந்த ஆசிரியர்கள் கூறுகின்றனர். இதனால் ஒன்றுவிட்ட சனிக்கிழமைகளிலாவது தமது ஊர்களுக்குச் செல்ல முடியும் என்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இதைக் கூட அனுமதிக்காது வலயத்தில்தான் பரீட்சை விடைத்தாள்களைக் கொண்டு சென்று திருத்த வேண்டுமென பணிக்கப்பட்டதால் தாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

(க-12)

## மாணவருக்கு மாலைநேர வகுப்புகள்

### மனோகரக் குருக்கள் நற்பணி மன்றத்தால்

மன்னார், ஜூன் 12

அண்மையில் காலமான சிவஸ்ரீ சபா மனோகரக் குருக்கள் நற்பணி மன்றத்தால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான மாலை நேர ஊக்குவிப்பு வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த வகுப்புகள் மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட வட்டக்கண்டல் மற்றும் அதனையண்டிய கிராமங்களில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக நற்பணி மன்றத்தின் தலைவர் பிரம்மஸ்ரீ மனோ பூ. ஐங்கரசர்மா தெரிவித்தார்.

மீளக்குடியமர்வு செய்யப்பட்ட மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் கல்வி கற்பதில் ஆர்வம் உள்ள மாணவர்கள் காணப்படுகின்றனர். ஆனால் அவர்கள் மாலை நேர வகுப்புகளுக்குச் செல்ல முடியாத நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த பகுதியில் உள்ள வட்டக்கண்டல் மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் உள்ள வறிய மாணவர்களை ஒன்றிணைத்து தரம் 01 முதல் தரம்-06 வரையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தனித்தனியே முதற்கட்டமாக இலவச மாலை நேர வகுப்புக்களை சிவஸ்ரீ. சபா மனோகரக் குருக்கள் நற்பணிமன்றம் ஆரம்பித்துள்ளது.

குறித்த வட்டக்கண்டல் மற்றும் அதனை அண்டிய கிராம மக்கள் கடந்த வன்னிப் போரின் போது பெரியளவில் இழப்புக்களை சந்தித்ததோடு தமது உடைமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## கமநல சேவை நிலையங்களில் பொலிஸார் ஆக்கிரமிப்பால் விவசாயிகளுக்கு பாதிப்பு

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய இடங்களிலுள்ள கமநல சேவை நிலையங்களைப் பொலிஸார் தொடர்ந்தும் தமது பாவனையில் வைத்திருப்பதால் கமநல சேவை நிலையங்களின் செயற்பாடுகள் முடங்கியுள்ளதுடன் விவசாயிகளும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

மன்னாரில் இலுப்பைக் கடவை, கிளிநொச்சியில் முழங்காவில், வவுனியாவில் கனகராயன்குளம் ஆகிய கமநல சேவை நிலையங்களையே பொலிஸார் தொடர்ந்தும் தமது பயன்பாட்டில் வைத்திருப்பதால் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

மன்னார் இலுப்பைக் கடவை கமநல சேவை நிலையத்தைப் பொலிஸ் நிலையமாக பொலிஸார் பயன்படுத்தி வரும் நிலையில் கமநல சேவை நிலையத்தின் செயற்பாடுகள் பல்வேறு இடங்களிலும் பல சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கமநல சேவை நிலையத்தின் நிர்வாக செயற்பாடுகள், இலுப்பைக்கடவை பிரதேச சபை வளாகத்தில் இடம்பெறுகின்றன. வாகனங்கள், விவசாய உபகரணங்கள் 12 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வெள்ளாங்குள களஞ்சியத்தில் உள்ளன. மூன்று கொள்கலன்களில் உரக்களஞ்சியங்கள் இயங்கி வருகின்றன.

இதனால் மூன்று காவலாளிகள் மற்றும் பல்வேறு வேலைப்பளு என்பவற்றைக் கமநலசேவை நிலைய நிர்வாகம் எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதேபோன்று கிளிநொச்சி, முழங்காவில் கமநல சேவை நிலையத்தின் கட்டடம் முழங்காவில் பொலிஸ் நிலையமாக இயங்கி வரும் நிலையில் இதனுடைய நிர்வாக செயற்பாடுகள், களஞ்சியம், வாகனத் தரிப்பிடம் என்பன மூன்று இடங்களில் இயங்கி வருகின்றன.

இதனால் இதனுடைய செயற்பாடுகள் பெரும் நெருக்கடியில் உள்ளன.

மேலும் வவுனியா கனகராயன்குளம் கமநலசேவை நிலையத்தின் கட்டடமும் பொலிஸ் நிலையமாக இயங்கி வருவதனால் இதனுடைய செயற்பாடுகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் பொலிஸ் நிலையங்களுக்குரிய காணிகள் குறிப்பிட்ட பகுதிகளில் ஒதுக்கப்பட்டுச் சுமார் இரண்டு வருடங்கள் கடந்த போதிலும் இதுவரை அந்தக் காணிகளில் எந்த வேலைகளும் மேற்கொள்ளப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இவ்வாறு தொடர்ந்தும் கமநல சேவை நிலையங்கள் பொலிஸ் நிலையங்களாக இயங்கி வருமாயின் விவசாயிகளின் விரிவாக்கல் செயற்பாடுகள் உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வது மற்றும் ஏனைய தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியநிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(க-6)

## ஊற்றுப்புலத்தில் தேவாலயம் புலம்பெயர்ந்தோர் அமைப்பு

புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் துவாரகா இராஜேந்திரம் என்பவரால் கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் தேவாலயம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான ஊற்றுப்புலம் கிராமத்தில் வசிக்கும் கிறிஸ்தவ மக்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்றுப் புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் துவாரகா இராஜேந்திரம் என்பவர் புதிய தேவாலயம் ஒன்றை அமைத்து வழங்கியுள்ளார்.

இதேவேளை மேற்படி கிராமத்தில் வாழும் இந்து மக்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றுத் தற்போது இந்து ஆலயம் ஒன்றையும் அமைத்து வழங்க இவர் முன்வந்துள்ளார். இதைவிடப் பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவுகளை வழங்குவதற்கான நிதியுதவிகளையும், தாய் தந்தையரை இழந்த குழந்தைகளுக்கான எதிர்காலத் தேவைகளைக் கருதி 80 குழந்தைகளுக்கு வங்கிகளில் பணத்தை வைப்பிலிட்டு வங்கிப் புத்தகங்களையும் வழங்கியுள்ளார்.

**80 குழந்தைகளுக்கு வங்கிகளில் பணத்தை வைப்பிலிட்டு வங்கிப் புத்தகங்களையும் வழங்கியுள்ளார்.**

இவ்வாறு புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தமக்குத் தேவையான உதவிகளை வழங்கி வரும் இந்த அன்பு உள்ளத்தை பலரும் பாராட்டியுள்ளனர்.

மேற்படி ஊற்றுப்புலம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட புனித தேவாலயம் கடந்த ஆண்டு இறுதியில் துவாரகா இராஜேந்திரனால் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-6)



புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வசித்துவரும் துவாரகா இராஜேந்திரத்தின் 60 ஆவது பிறந்த தினத்தையொட்டி கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் தாய் தந்தையை இழந்த மற்றும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களுக்கு ஒரு தொகை நிதி வைப்பிலிடப்பட்டு வங்கிப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன. (ங-6)

## கற்பகபுரத்தில் திருட்டு: குடிசைகளுக்கும் தீ வைப்பு

வவுனியா கற்பகபுரம் பகுதியில் குடியேற்றத் திட்ட வீடுகளில் நுழைந்த திருடர் குழு ஒன்று அங்குள்ள பொருள்களைக் களவாடியதுடன் குடிசைகளை எரித்து நாசமாக்கியுமுள்ளனர்.

இது குறித்து தெரியவருவதாவது-

வவுனியாவில் உள்ள குறித்த ஒரு அரசியல் கட்சியினர், 2009ஆம் இறுதிப் பகுதியில் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் காணிகள் அற்றவர்களுக்கு காணிகளை வழங்கினர். அந்தக் காணிகளில் குடிசைகளை தற்காலிகமாக வசித்து வந்தவர்களில் சிலர் மீண்டும் சொந்த இடங்களில் மீள் குடியேறச் சென்றுவிட்டனர். ஒரு சிலர்(அவர்களில் அநேகமானோர் அங்கவீனமானவர்கள்) மட்டும் இன்னமும் அங்கு வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த மக்களின் வீடுகளைப் பிரித்து அங்குள்ள மரம், தடி, வீட்டுக் கற்கள், வேலிக் கம்பிகள், கதவு, தகரங்கள், கதிரை மேசை உட்பட பல பொருள்களை இனந்தெரியாத கும்பல் ஒன்று திருடிச் சென்றுள்ளது. அத்துடன்அங்கிருந்த குடிசைகளை எரித்து நாசமாக்கிவிட்டும் அவர்கள் சென்றுள்ளனர்.

இது குறித்து உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ங-402)

NDB Savings Star Plus

இப்போது

# சேமிப்பு கணக்குகளுக்கும் 10%* அதி உயர் வட்டியைத் தருவது NDB

சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு சேமிப்பு கணக்குகளுக்கும் அதிக வட்டியைத் தருவது, சேமிக்க சில வழிகளைச் சொல்லித் தந்த NDB.

அழையுங்கள் 011 2 448 888

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது. வ.செ.வ. 10.47%




சேமிப்போம் - செயற்படுவோம் - நாட்டை மேம்படுத்துவோம்

வாழ்க்கையை நிதமும் மாற்றும்

NDB வங்கி

(சி /688)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# தமிழர் தரப்பின் பங்களிப்பு; சிந்தியுங்கள்; செயற்படுங்கள்

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அந்தச் சபையின் தீர்மானத்துக்கு அமைவாக இலங்கை அரசுக்கு ஆலோசனைகள் மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்குவதற்கு ஒரு குழுவினரை அனுப்புவது தொடர்பாக எழுதியிருந்த கடிதத்துக்கு இன்னமும் பதில் அனுப்பப்படவில்லை. தற்பொழுது வெளிநாட்டில் இருக்கும் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நாடு திரும்பிய பின்னரே பதில் அனுப்பப்படவிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. நவநீதம்பிள்ளை என்றாலே இலங்கை அரசியலாளர்களுக்கு கதிகலக்கமாகவிருப்பது போல் தோன்றுகிறது. சில தினங்களுக்கு முன்னரும் இந்தப் பத்தியில் இது விடயம் தொடர்பாக சுட்டிக் காட்டியிருந்தோம்.

முன்னர் வந்த செய்திகளின்படி நவநீதம்பிள்ளையும் மனித உரிமை சபையின் பணியாளர்களும் ஏதோ தீண்டப்படக் கூடாதவர்கள் போல், அரசு நோக்குவதாகத் தோன்றுகிறது. அவர்களை அனுமதிக்கமாட்டோம் என்றார்கள். பின்னர் அவர்கள் வரலாம் உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது என்றார்கள்! இப்போது இனிமேல் தான் வெளியுறவு அமைச்சர் பதில் அனுப்பப் போகிறார் என்று செய்தி வந்திருக்கிறது.

உள்ளூர் அரசியல்வாதிகளையும் கட்சிகளையும் அச்சுறுத்துவதுபோல், இந்த விடயத்தில் அரச தரப்பு நடந்து கொண்டிருப்பது நகைப்புக்கிடமாகியுள்ளது.

நாம் முன்னர் குறிப்பிட்டிருந்தது போல் நவநீதம் பிள்ளை, மனித உரிமைகள் சபையின் 19 ஆவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியே இலங்கை விடயத்தில் செயல்படுகின்றார் என்பது தெரிகிறது. இலங்கை அரசு சம்மதித்தால் மட்டுமே அவர் மேற்கொண்டும் செயல்பட முடியும். மனித உரிமை அதிகாரிகள் குழுவை வரவேண்டாம் என்று அமைச்சர் அறிவிப்பாரானால் அவர்கள் வராமல் விடக் கூடும். அந்த நிலையில் அடுத்து சில நாள்களில், குறிப்பாக வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகும் மனித உரிமைகள் சபையின் 20 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பாக உறுப்பு நாடுகள் எவையும் கேள்வி எழுப்புமானால் முந்தைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு முட்டுக்கட்டை போட்டு வருவதாக நவநீதம்பிள்ளை தரப்பில் தெரிவிக்கப்படலாம். அது இலங்கையின் நம்பகத் தன்மைக்கு இழுக்கை ஏற்படுத்துவதாக இருக்கும்.

இந்த நிலையில் வெளிவந்துள்ள இன்னொரு செய்தியின்படி மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தமக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை மீறி செயல்பட்டிருந்தார் என்று இலங்கை சார்பில் முன்பு முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து வலியுறுத்தப் போவதில்லையென அரசு முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

ஜெனிவாவில் இலங்கை சார்பில் நியமிக்கப்பட்டிருந்த நிரந்தர பிரதிநிதி தமரா குணநாயகமே நவநீதம்பிள்ளை மீதான குற்றச்சாட்டை முன்வைத்தவர். ஆனால் மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேறிய கையோடு அவர் கியூபாவுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்பட்டு விட்டார்.

இடமாற்றம் தொடர்பாக அமைச்சர் அனுப்பிய கடிதத்திற்கு, அவர் அனுப்பிய பதிலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட உடனேயே தாம் இடமாற்றம் செய்யப்படுவதில் காட்டப்பட்டுள்ள அவசரமானது, சிலவட்டாரங்களில் 19 ஆவது மாநாட்டில் நாட்டுக்கு பெரும் தோல்வி ஏற்பட்டு விட்டது என்று விமர்சிக்கப்படும் நிலையில் இது ஒரு தண்டனையாக வியாக்கியானம் செய்யப்படும். அது மட்டுமல்ல ஜனாதிபதியினதும், வெளியுறவு அமைச்சரினதும் அறிவுறுத்தல்களை விசுவாசமாகக் கடைப்பிடிப்பவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்; ஆனால் கொள்கைகளைப் பேரம் பேசுபவர்கள், பிரிவினைகளை ஏற்படுத்துகிறவர்கள் மற்றும் ஒற்றுமையைக் கெடுப்பவர்கள் அனைவருக்கும் விருது வழங்கப்படுகிறது என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் என்று எழுதியிருந்தார். நவநீதம்பிள்ளையின் மீது நடவடிக்கை எடுக்க முற்பட்டவரே இப்போது அரசின் நடவடிக்கைக்குள்ளாகியுள்ளார் என்பது தெரிகிறது.

இப்பொழுதுள்ள நிலைமைகளைக் கவனிக்கும் போது 19 ஆவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி அரசு நடந்து கொண்டு, மனித உரிமைகள் சபையின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வருவதை அனுமதிக்கக் கூடும் என்று ஊகிக்கத் தோன்றுகின்றது. அவ்வாறாயின் இன்னும் ஒரு வாரத்தில் வரப்போகும் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் எழுப்பப்படுவது சாத்தியமில்லை எனலாம். ஆனால் அதற்குப் பிறகு இலங்கையின் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைக்கான விவரங்களை ஆணையாளர் சேகரிப்பதும், அறிக்கையைத் தயாரிப்பதும் எதிர்பார்க்கப்பட வேண்டியதே. அநேகமாக மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத் தொடரில் ஆணையாளர் தமது இலங்கை தொடர்பான அறிக்கையைத் தாக்கல் செய்வது நிச்சயம்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் எந்த அளவில் இலங்கையினால் முன்னெடுக்கப்படுகின்றன என்ற விவரங்கள் நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் இடம்பெறுவது சாத்தியம். அந்த வகையில் இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் சார்பில் அளிக்கப்படக்கூடிய பங்களிப்பு பற்றி தமிழ்த்தரப்புகள் இப்பொழுதே சிந்தித்து காரியத்தில் இறங்குவது அவசியமல்லவா?

# ஆயுள்வேத ஆஸ்பத்திரிகளில் மருத்துவர்கள் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 12

வலி.கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள இலவச சித்த ஆயுள்வேத மருத்துவ சிகிச்சை நிலையங்கள் சிலவற்றில் மருத்துவர்கள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இருபாலை, நீர்வேலி, உரும்பிராய் ஆகிய பகுதிகளில் உள்ள வலி. கிழக்குப் பிரதேச சபையின் உப அலுவலகங்களில் இயங்கி வரும் இலவச சித்த ஆயுள்வேத மருத்துவ சிகிச்சை நிலையங்களிலேயே மருத்துவர் கடமையில் இல்லை எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையங்களில் கடமையிலிருந்த மருத்துவர் வ.அனவரதன், திருகோணமலையிலுள்ள சித்தமருத்துவ பீடத்துக்கு பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

இந்த நிலையிலேயே கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக மருத்துவர் நியமிக்கப்படவில்லை. மக்களின் தேவைகளுக்கு உதவக் கூடிய வகையில் மருத்துவர் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். மருத்துவர் ஒருவரே மூன்று நிலையங்களிலும் ஒழுங்கு முறையில் கடமையாற்றி வருவது வழமையாகும்.

மூன்று நிலையங்களையும் நம்பியுள்ள மக்கள் பயனடையக் கூடியவாறு மருத்துவரை நியமிக்க வலி. கிழக்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (ம-3)

# சென்னை பாரதியார் சங்க விருது முன்னாள் பேராயர் ஜெபநேசனுக்கு




சென்னை பாரதியார் சங்கத்தினரால் வருடாந்தம் வழங்கப்படும் பாரதியார் விருது இவ்வருடம், தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மாத முற்பகுதியில், கொழும்புத் தமிழ்ச் சங்கமும் சென்னை பாரதியார் சங்கமும் இணைந்து கொழும்பில் நடத்திய பாரதியார் விழாவில், சென்னை பாரதியார் சங்கத் தலைவர் வழக்கறிஞர் இரா.காந்தி இந்த விருதினை வழங்கினார்.

கடந்த வருடம் சென்னை பாரதியார் சங்கத்தின் விழா மலேசியாவில் நடத்தப்பட்டு அந்த நாட்டு அறிஞர் ஒருவருக்கு விருது வழங்கப்பட்டிருந்தது.

கொழும்பில் நடைபெற்ற விழாவில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியிலிருந்து தமிழறிஞர்கள் 33 பேர் பங்குபற்றினர்.

முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். பாரதியாரின் நூற்றாண்டான 1982 ஆம் ஆண்டு தொடக்கம் வருடம்தோறும் செப்ரெம்பர் பதினொராம் திகதி பாரதி விழாவினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில்நடத்தி வருகிறார். (அ)

## ரயில் பாதை அமைக்க ரூபா 336 மில்லியன்.

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஓமந்தையில் இருந்து காங்கேசன்துறை வரைக்குமான ரயில் பாதையை அபிவிருத்தி செய்வதற்கு 336 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

145 கிலோமீற்றர் தூரமான இந்தப் பாதையின் அபிவிருத்திப் பணிகளை 2013 பெப்ரவரி மாதத்துக்குள் முடிவுறுத்த வேண்டும் என்று ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான பணிகள் எர்கோன் சர்வதேச நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளை முடிவுறுத்துவதில் ஏற்படும் தாமதம், இடர்பாடுகள் தொடர்பாகத் தெரியப்படுத்துமாறும் எர்கோன் நிறுவனத்தை அரசு கேட்டுள்ளது. (ம-41)

## டெங்கு அபாயம் குறித்து ஆராய கொழும்பிலிருந்து குழு

யாழ்ப்பாணம், ஜூன் 12

நாடு தழுவிய ரீதியில் டெங்கு ஆபத்து வலயங்களாக 27 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் சுகாதார அமைச்சால் இனங்காணப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 23 வலயங்களாக இது இனம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இதன் தாக்கம் உணரப்பட்டதைத் தொடர்ந்து மேலும் 4 வலயங்கள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சின் விசேட டெங்கு கண்காணிப்புக் குழு இந்த வலயங்களைக் காண்காணித்து வருகிறது.

கூடுதலான வலயங்கள் தென் பகுதியிலேயே உணரப்பட்டுள்ளன என்று டெங்கு ஒழிப்புப் பிரிவின் பிரத்தியேகப் பணிப்பாளர் எல்.ஆர்.குணசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெரும்போக காலங்களில் அதிகளவிலான டெங்கு அபாயம் ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் டெங்கு அபாயம் தொடர்பான ஆய்வுப்பணி நடத்துவதற்கு டெங்கு கண்காணிப்புக் குழு யாழ்.மாவட்டம் வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

## நலிவுற்ற 200 மாணவர்களுக்கு சமுர்த்தி மாதாந்த கொடுப்பனவு

பருத்தித்துறை, ஜூன் 12

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு இந்த வருடம் மாதாந்த பணக் கொடுப்பனவை பருத்தித்துறை சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் வழங்கவுள்ளது.

பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காகவே பணக்கொடுப்பனவு மாதாந்தம் வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு 12 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்ய பருத்தித்துறை சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் முன்வந்துள்ளது. கடந்த காலங்களில் 70 மாணவர்களுக்கு இந்தக் கொடுப்பனவை இந்த மன்றம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-190)

## மருதங்கேணி கோட்டத்தில் புதிய ஆரம்பப் பாடசாலை

பருத்தித்துறை, ஜூன் 12

மருதங்கேணி கோட்டத்தில் புதிய ஆரம்பப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலை என்ற பெயரில் புதிய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உடுத்துறை மகாவித்தியாலயம் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டதையடுத்து அந்தப் பாடசாலையில் தற்போது தரம் ஆறு தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரையே வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

முன்பு அங்கிருந்த தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் வேறாக்கப்பட்டே உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலை என்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதி பெற்றோர்களின் கோரிக்கையை ஏற்றே வடக்கு மாகாண கல்வி அமைச்சு இந்தப் புதிய பாடசாலையை ஆரம்பிக்க அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-190)

## வீடுகள் புனரமைப்பு

பருத்தித்துறை, ஜூன் 12

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவின் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தால் பொதுமக்களின் 6 வீடுகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் வீடுகளே புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. இதற்கு சுமார் 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. (ம-190)

## சிவில் உடை தரித்தவர்களால் தேக்கவத்தையில் பதற்ற நிலை

நெளுக்குளம், ஜூன் 12

வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் பெண் ஒருவரின் வீட்டினுள் சிவில் உடை தரித்தவர்கள் நுழைவதற்கு முயற்சி செய்ததால் பெரும் பதற்றம் நிலவியது.

கடந்த 6 ஆம் திகதி அதிகாலை 1 மணியளவில் தேக்கவத்தை இராணுவக் காவலரணுக்கு அருகில் இருந்த வீட்டின் மதிலால் ஏறிப் பாய்ந்து சிவில் உடைதரித்த இருவர் வெளிக் கதவைத் தட்டி உள்ளே இருந்தவர்களை வெளியே வருமாறு வற்புறுத்திக் கேட்டனர். இதனால் அச்சமடைந்த அந்த வீட்டிலிருந்த பெண் உரத்த குரலில் சத்தமிட்டுள்ளார். இதையடுத்து அந்த இருவரும் தலைதெறிக்க ஓடித்தப்பிவிட்டனர்.

இதனையடுத்து அங்கு திரண்ட அயலில் உள்ளவர்கள் இந்தச் சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

ஏற்கனவே இந்தப் பகுதியில் சிறுமி ஒருவர் பாலியல் பலாத்காரத்துக்கு உட்பட்டிருந்தார்.

இந்த நிலையில் சிவில் உடைதரித்தவர்களின் செயல் மக்களிடையே பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிந்தது. (க-402,400)

# சட்டவிரோத வடிசாராயம் முல்லைத்தீவில் தாராளம்

## பொலிஸாருக்கே டிமிக்கி கொடுக்கும் கில்லாடிகள்

முள்ளியவளை, ஜூன் 12

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் வடிசாராய உற்பத்தி கொடிகட்டிப் பறப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

பொலிஸார் வடிசாராய உற்பத்தியில் ஈடுபடுவோரைப் பிடிப்பதற்குச் செல்லும் போது, சந்தேக நபர்கள் பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து விட்டு தப்பிச் சென்று விடுகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியில் வடிசாராயம் வடிக்கப்படுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வீடொன்றுக்குப் பொலிஸார் சென்றுள்ளனர்.

பொலிஸார் வருவதை எப்படியோ அறிந்து கொண்ட சாராய விற்பனையாளரின் மனைவி வீட்டினுள்ளே வைக்கப்பட்டிருந்த 'வடியை' நிலத்தில் சரித்து ஊற்றி விட்டு விரைவாக வெளியே வந்து குடத்தில் இருந்த தண்ணீரை வீட்டுக்குள் ஊற்றி வீட்டைக் கழுவியுள்ளார். பின்னர் அங்கு வந்த பொலிஸார் சோதனையிட்ட போதும் வடியைக் காணாத நிலையில் திரும்பிச் சென்றுவிட்டனர் என்று கூறப்பட்டது.

இந்தப் பகுதியில் இன்னொரு விநோத சம்பவமும் நிகழ்ந்துள்ளது. வறுமையால் வாடிய பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஒரு நிறுவனத்தினர் சிறுகைத்தொழில் ஒன்றைச் செய்வதற்காகக் குறித்த குடும்பத் தலைவியிடம் 60 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளனர்.

சில வாரங்களின் பின்னர் பணம் வழங்கிய அமைப்பினர் அந்தக் குடும்பத்தின் கைத்தொழில் முயற்சியைப் பார்ப்பதற்காகச் சென்றுள்ளனர். அங்கே பணம்பெற்றவர்இல்லை. எங்கே என்று விசாரித்த போது பொலிஸார்வடிசாராயம் வடித்த குற்றத்துக்காக அழைத்துச்சென்றுள்ளனர் என்று கூறப்பட்டது.

குறித்த பெண்ணின் குடிசைக் கைத்தொழில் வடிசாராய உற்பத்தி தான் என்பதை அறிந்து கொண்ட பணம் வழங்கிய அமைப்பினர் திகைத்து நின்றனராம்.

இப்போது வன்னியில் வடிசாராயம் வடிப்பதுவும் சிறுகைத்தொழிலாக மாறியுள்ளது.

நாளாந்தம் மேற்கூறிய பகுதியிலும் பூதன் வயல் பகுதியிலும் வடிசாராய வேட்டை பொலிஸாரினால் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆனால் பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிஸார் புறப்பட முன்னரே வடிசாராய ஆள்கள் எவ்வாறோ தலைமறைவாகி விடுகின்றனராம்.

மேலும் வடிசாராயம் தாராளமாகக் கிடைப்பதால் பெரும் 'குடி'மக்கள் பாடு கொண்டாட்டம் என்றும் மனையாளின் பாடு திண்டாட்டம் என்றும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர். (ங-க-433)

## தற்காலிக வீடுகளும் மோசம் ஜீவநகர் மக்களின் பரிதாபம்

முல்லைத்தீவு, ஜூன் 12

முத்துஐயன்கட்டு ஜீவநகர் 90 ஏக்கர் திட்டத்தில் வசிக்கும் மக்களின் தற்காலிக வீடுகள் யாவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கறையானால் பாதிப்படைந்த நிலையில் காணப்பட்ட இந்தத் தற்காலிக வீடுகள் தற்போது வீசுகின்ற கடும் காற்றினால் பிடுங்கியெடுக்கப்பட்ட நிலையில் பரிதாபமாகக் காட்சியளிக்கின்றன.

ஆண் துணையில்லாத பல குடும்பங்கள் வீட்டைச் சுற்றி அடைக்கப்பட்டிருந்த கிடுகுகள் சேதமடைந்த நிலையில் திறந்தவெளி போன்ற இடங்களில் வசிப்பதைக் காண முடிகின்றது. கதவுகள் கூட இவர்களின் தற்காலிக வீடுகளுக்கு இல்லை. வயதுக்கு வந்த பெண்பிள்ளைகளும் இவற்றிலேயே பாதுகாப்பு ஏதும் இல்லாத நிலையில் முடங்கியிருக்கின்றனர்.

மேலும் இந்தக் குடும்பங்கள் சுமார் 20 வருடங்களாக இங்கு வாழ்ந்த போதிலும் காணி அனுமதிப் பத்திரங்கள் இல்லாததால் நிரந்தர வீடுகளைப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

இதனால் குடும்பத் தலைவர்களை இழந்த பல குடும்பங்கள் அல்லற் படுவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே இந்தக் குடும்பங்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு உரியவர்கள் உதவ வேண்டுமெனப் பலரும் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)



அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் கடந்த தவணைப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் அதிபர் மற்றும் ஆசிரியைகளுடன் காணப்படுகின்றனர். (18)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி தனியார் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளதாகத் தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நிரந்தர நியமனம் தொடர்பாக இங்கு ஆராயப்படவுள்ளதால் கிளிநொச்சி மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

## புளியங்குளம் பழையவாடிக் கிராமத்தில் யானைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

வவுனியா, ஜூன் 12

புளியங்குளம் பழைய வாடிக் கிராமத்தில் அண்மைக் காலமாக யானைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்துடன் தமது பொழுதைக் கழித்து வருகின்றனர்.

பழைய வாடிக் கிராமம் கடந்த காலப் போரினால் மிகவும் பாதிப்படைந்தது. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் இடம்பெயர்ந்து சென்று தற்போது மீளவும் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்து தமது வாழ்வாதார முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பகுதி மக்கள் மீள் குடியமர்ந்து சுமார் ஒரு வருடத்துக்கு மேலாகிய நிலையிலும் இன்றுவரை இந்தப் பகுதி மக்களுக்கான மின்சார வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. அங்கு குடியமர்ந்துள்ள சுமார் 75 குடும்பங்களும் குப்பி விளக்குகளிலேயே தமது இராப்பொழுதைக் கழித்து வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் பகல் மற்றும் இரவு நேரங்களில் கூட்டமாகவும், தனியாகவும் உலாவரும் யானைகள் அந்தப் பகுதி மக்களுடைய வீடுகளையும் உடைமைகளையும் விவசாய உற்பத்திப் பொருள்களையும் பெரும் சேதத்துக்கு உள்ளாக்கி வருகின்றன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பெரும் கூட்டமாக யானைகள் அந்தப் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் நீர் அருந்தியதுடன் அந்தப் பகுதி விவசாயிகளால் விளைவிக்கப்பட்ட மரவள்ளிப் பயிருக்கும் சேதத்தை ஏற்படுத்தின என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் தனியாக வந்த பெரிய யானை ஒன்று நெல் மூடைகளைச் சேதப்படுத்த முற்பட்டதுடன் வீடுகளின் ஓடுகளையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளது.

மின்சாரமற்ற வேளைகளில் கும்மிருட்டில் யானைகள் நடமாடுவதால் இரவு வேளைகளில் இங்குள்ள மக்கள் வெளியில் நடமாட முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

எனவே யானைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், அந்தப் பகுதிக்கு விரைவாக மின்சாரத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-400)

## பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு வவுனியாவில் 18 ஆம் திகதியன்று

வவுனியா, ஜூன் 12

வவுனியா மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநர் நியமனத்துக்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர அறிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் வேலையற்ற பட்டதாரிகளை அரச வேலைக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையில் வவுனியா மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் பொருட்டு நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளன.

நேர்முகத் தேர்வுக்கான பட்டதாரிகள் பட்டச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் நிழல்படப் பிரதி, தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்பிரதி, பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப் பிரதி மற்றும் நிழல் பிரதி, பட்டப்பின் படிப்புச் சான்றிதழ் (இருப்பின்) அதன் மூலப் பிரதி, நிழல் பிரதி, வாக்காளர் பெயர்ப்பட்டியலின் இறுதி மூன்று வருடப் பிரித்தெடுப்பு ஆகியவற்றுடன் வருகை தருமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் சுமார் 325 வேலையற்ற பட்டதாரிகளுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது என்றும் அதற்குரிய நேர்முகத் தேர்வுக் கடிதங்களை உரியவர்களுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-400)

## கடும் காற்றினால் முல்லைத்தீவில் பெரும் பாதிப்பு

முள்ளியவளை, ஜூன் 12

கடந்த சில நாள்களாக முல்லைத்தீவுப் பகுதியில் கடும் காற்று வீசுவதால் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

கடும் காற்றினால் முள்ளியவளையில் அமைந்துள்ள கலைமகள் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிகக் கொட்டகை முறிந்து விழுந்துள்ளது. இந்தக் கொட்டகை விடுமுறை நாளில் விழுந்ததால் பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை.

மேலும் நந்திக்கடல் வெளியில் வீதி வேலைகள் நடைபெறுவதனால் கடும் தூசு காரணமாக வீதியில் பயணம் செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது. வாகனங்கள் இந்த வீதியால் தொடர்ந்து பயணிப்பதால் தூசு மோசமாக வீதியில் காணப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை இந்த வீதியில் தூசு காரணமாக விபத்து ஒன்றும் ஏற்பட்டது. அத்துடன் பயணம் செய்ய முடியாதவாறு சிறிய வாகனங்களைக் காற்றுத் தள்ளி விடுவதையும் காண முடிகின்றது. (க-433)

## கவனிப்பாரற்ற நிலையில் திருநகர் பொது மயானம்

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி திருநகர் பொதுமயானம் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளதோடு கழிவுகள் கொட்டப்படும் பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள திருநகர் பொதுமயானம் பற்றைகள் மண்டிக் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது. இந்தப் பொதுமயானத்தின் நிலைமை தொடர்பாகப் பல்வேறு தரப்பினராலும் பலதடவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் சுற்றுவேலிகள் அமைத்து புனரமைத்துத் தருமாறு கிராம மட்ட பொது அமைப்புக்கள், பிரதேசசபை நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இதனையடுத்துப் பொதுமயானங்களை துப்புரவு செய்தல், அவற்றைப் புனரமைத்தல் ஆகிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கெனப் பிரதேச சபை உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுக்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. ஆனால் பொதுமயானங்களுக்கு எந்த விதமான விமோசனமும் கிடைக்கவில்லை.

தற்போது திருநகர் பொதுமயானம், கவனிப்பாரற்ற நிலையில் கழிவுகள் கொட்டப்படும் இடமாக மாறியுள்ளது. இதனைப் புனரமைத்துத் தருமாறு திருநகர் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

### வீதியில் வந்தவரை தாக்கியவர் பொலிஸாரிடம் சரண்

வலி.வடக்கு, ஜூன் 12

வீதியில் வந்தவரைத் தாக்கியவர் பொதுமக்கள் கூடியதும் பொலிஸில் சரணடைந்தார்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு குப்பிளானில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

குப்பிளானைச் சேர்ந்த க.சிவலிங்கம் (வயது-60) என்பவர் இரவு 7 மணியளவில் தேவை நிமித்தம் வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார். அந்த வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த குறிப்பிட்ட நபர் சைக்கிளில் வந்தவரை வீதியில் வீழ்த்தி தாக்க முனைந்துள்ளார்.

இந்த நிலையில் அவர் அவலக்குரல் எழுப்பிய போது மக்கள் அந்தப் பகுதியில் ஒன்றுகூடினர். இதனையடுத்து குறிப்பிட்ட சந்தேக நபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

இதனையடுத்து பொலிஸார் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-86)

# கடற்றொழிலாளர் நலத் திட்டங்களை முன்னெடுப்பதில் நெருக்கடி நிலை

## அரசியல் தலையீடுகள் அதிகரிப்பே காரணம்

மீனவர் நலன் சார்ந்த செயற்பாடுகளைக் கடற்றொழில் அமைப்புக்கள் முன்னெடுப்பதற்கு அரசியல் பின்னணியும் தலையீடுகளும் தடையாக உள்ளன.

யாழ்ப்பாணம், ஜூன் 12

அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ள நிலையில் மீனவர் நலன் சார்ந்த செயற்றிட்டங்களை கடற்றொழில் அமைப்புக்கள் முன்னெடுப்பதில் பெரும் நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று மாதகல் கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பின் தலைவர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசியல் தலையீடு செய்யும் கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப கடற்றொழில் அமைப்புக்கள் செயற்பட வேண்டிய மிக மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதன் காரணமாக மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது.

கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள் மற்றும் கிராமிய கடற்றொழில் அமைப்புக்கள் ஆகியன சுயாதீனமாக செயற்படமுடியாத நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

மீனவர் நலன் சார்ந்த செயற்பாடுகளைக் கடற்றொழில் அமைப்புக்கள் முன்னெடுப்பதற்கு அரசியல் பின்னணியும் தலையீடுகளும் தடையாக உள்ளன. அதுமட்டுமன்றித் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப செயற்படுமாறு கடற்றொழில் அமைப்புக்களைத் தூண்டி வருகின்றன.

பாரபட்சமின்றிக் கடற்றொழிலாளர்களுக்கு உதவி வழங்கும் சந்தர்ப்பங்களையும் இந்த அரசியல் தலையீடுகள் இல்லாமல் செய்து வருகின்றன.

கடற்றொழில் அமைப்புகளுக்கான நிர்வாகத் தெரிவுகள் உத்தியோகபூர்வமாக இடம்பெறுவதற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டும் அரசியல் கட்சி ஒன்றின் அலுவலகத்தில் அதற்கான நிர்வாகத் தெரிவுகள் முன்னதாக இடம்பெறுவதாக அறிய முடிகிறது.

யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசத்துக்கான நிர்வாகத் தெரிவின்போது இவ்வாறு இடம்பெற்றுள்ளது என்று மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

அரசியல் கட்சி ஒன்றின் பின்னணியில் தயாரிக்கப்பட்ட தெரிவுகளுக்கு அமைவாகவே யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இராணுவத்தின், கடற்படையின் பாதுகாப்பு வலயங்களில் உள்ளடங்கும் கடற்பகுதியைவிடுவித்து மீனவர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்யக் கூடிய நிலைமையை ஏற்படுத்துவதற்கு கடற்றொழில் அமைப்புக்கள் நடவடிக்கை எடுக்கின்றன.

அரசியல் தலையீடுகளால் இதனைத் தடுக்க முடியாதுள்ளது- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

### வடமராட்சி கிழக்கில் திருத்தப்படாத வீதிகள்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பல வீதிகள் இன்னமும் திருத்தி அமைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. பருத்தித்துறைப் பிரதேச சபையின் செம்பியன் பற்று உப அலுவலகப் பகுதியைச் சேர்ந்த இந்த வீதிகளைத் திருத்தி அமைக்க உரிய நடவடிக்கைகளை சபை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

இந்தப் பகுதியில் உள்ள மருதங்கேணி வாரிவட்டன் வீதி, முதலாம் பகுதி திருத்த வேலை இன்னமும் முழுமையாகச் செப்பனிடப்படவில்லை.

அம்பன் சொட்டோடை வீதி திருத்த வேலையும் பாதியில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. உடுத்துறை சுனாமி குடியிருப்பு வீதிகள் உட்பட இன்னும் பல்வேறு வீதிகள் திருத்தப்படாமல் கைவிடப்பட்டுள்ளன. இதற்கு மேலாக வத்திராயன் கிராமத்தின் வீதிகள் எதுவும் புனரமைக்கப்படாமலும் உள்ளன. குறிப்பிட்ட வீதிகளை திருத்தியமைத்து மீள்குடியமர்ந்த மக்களின் போக்குவரத்துக்கு உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-8)

# மானியங்கள் ஆணைக்குழு கொடும்பாவி பல்கலையில் எரிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 12

'பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு' என்ற பெயர் பொறிக்கப்பட்ட கொடும்பாவி ஒன்று நேற்று திங்கட் கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பிரதான நுழைவாயிலில் வைத்து எரியூட்டப்பட்டது.

சம்பள முரண்பாட்டை சீர்செய்து 25 வீத சம்பள உயர்வை வழங்குவதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த உருவப் பொம்மை தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

இந்த உருவப் பொம்மையை பல்கலைக்கழக முன்றிலில் வைத்து கல்வி சாரா ஊழியர்கள் அஞ்சலி செலுத்தினர். பின்னர் அந்த உருவப் பொம்மையை பிரதான நுழைவாயிலுக்கு எடுத்துச் சென்று தீயிட்டனர்.

'சம்பள முரண்பாட்டை நீக்கு', 'பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே அசமந்தப் போக்கைக் கைவிடு' ஆகிய சுலோக அட்டைகளை கல்வி சாரா ஊழியர்கள் தாங்கியிருந்தனர்.

உருவப் பொம்மையை எரியூட்டிய இந்த நிகழ்வு தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராசா தெரிவித்ததாவது:-

கடந்த வருட ஆரம்பம் தொடக்கம் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் சம்பள விடயம் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் உயர் கல்வி அமைச்சுக்கும் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. அவை எமது கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காது உதாசீனம் செய்துவருகின்றன.

எமது உரிமைக்காகத் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்துவரும் நிலையில் தற்போது அரசு மிரட்டி வருகிறது. போராட்டங்களை மேற்கொள்வோருக்கு சம்பளம் நிறுத்தப்படும் என அரசு மிரட்டி வருகின்றன.

அரசின் இவ்வாறான மிரட்டலுக்கும் நாம் பணியப்போவதில்லை. எமது போராட்டம் தொடரும். கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் கோரிக்கையை வலியுறுத்தி தேசிய ரீதியாக பல்கலைக்கழக ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

நாடு முழுவதுமுள்ள 12 ஆயிரம் ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். அவர்களுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் இணைந்துள்ளது-என்றார். (ம-3)

# சேவை நிலையங்கள் அமைக்க பாதுகாப்பான கட்டடம் இல்லை

## நாகர்கோவில் பகுதியில் இந்த நிலை

வடமராட்சி, ஜூன்12

மீள்குடியமர்வு நடைபெற்ற நாகர்கோவில் பகுதியில் கூட்டுறவுச் சங்கக் கிளை, உபதபால் நிலையம் என்பன அமைக்கப் போதிய பாதுகாப்பான கட்டட வசதிகள் இல்லை.

இதனால் அவற்றை ஆரம்பிப்பதில் காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாகர்கோவில் மேற்கு நாகர் கோவில் கிழக்கு ஆகிய இடங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதும் அவர்கள் நுகர்வுப் பொருள்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ள கூட்டுறவுச் சங்கக் கிளையும் தகவல், தொடர்பாடல்களை மேற்கொள்ள உப தபால் நிலையமும் இன்னமும் அமைக்கப்படவில்லை. இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றை நிறுவுவதில் மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முயன்று வருகின்ற போதிலும் பொருத்தமான கட்டடம் கிடைக்காமையால் தாமதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதே நிலைதான் உப தபால் நிலையம் ஆரம்பிப்பதிலும் இருந்துவருகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-8)



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (ம)

# காடாப்புலம்- பெரியவிளான் பாதை அமைக்கும் பணி

பண்டத்தரிப்பு, ஜூன் 12

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட காடாப்புலம் அரச வைத்தியசாலைக்கும் பெரியவிளானுக்கும் இடையில் பாதை அமைக்கும் பணிகள் வலி.தென்மேற்குப் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெரியவிளானில் இருந்து வைத்தியசாலைக்குச் செல்லும் பாதை பல வருடங்களாகப் போக்குவரத்து இன்றி ஒற்றையடிப் பாதையாகவே இருந்து வந்தது.

இதனால் இளவாலை, விளான் போன்ற பகுதிகளிலுள்ள மக்கள் காடாப்புலம் வைத்தியசாலைக்குச் செல்வதற்காகப் பண்டத்தரிப்பு நகரைக் கடந்து செல்ல வேண்டிய நிலையே இதுவரை இருந்தது.

இந்த நிலைமை அந்தப் பிரதேச மக்களால் வலி. தென்மேற்குப் பிரதேச சபையினரது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்ட பிரதேச சபையினர், அந்தப் பிரதேச மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் காணிகளைப் பெற்றும் தடையாக இருக்கும் பற்றைகளைப் 'பக்கோ' இயந்திரம் மூலம் அகற்றியும் புதிய வீதி அமைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர். (ம-130)

# சந்தேகம் தரும் வகையில் நடமாடினால் அறியத் தருக

## அனலைதீவு கடற்படை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

அனலைதீவுப் பகுதியில் கடற்படைப் புலனாய்வாளர் என்று கூறிக் கொண்டு உலவும் சம்பத் என்று கூறப்படும் நபர் ஒருவரால் அந்தப் பகுதி மக்கள் பெரும் தொல்லைக்கு ஆளாகி வருகின்றனர் என்று முறையிடப்பட்டதைத் தொடர்ந்து கடற்படை அதிகாரிகள், பொலிஸார் மக்களிடையே கலந்துரையாடல் ஒன்று நடத்தியுள்ளனர். இதன்போது இவ்வாறான சம்பவங்கள் இனிவரும் காலங்களில் இடம்பெறாது என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதமும் இதே போன்று இந்தப் பகுதியில் கடற்படைப் புலனாய்வாளர் என்று கூறித் திரிந்த நபர் ஒருவர் பொதுமக்களைப் பெரும் துன்பத்துக்கு ஆளாக்கி வந்துள்ளார். இந்த விடயம் குறித்துக் கடற்படை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அவர் வேறிடத்துக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் புதிதாக நியமிக்கப்பட்ட, கடற்படைப் புலனாய்வாளர் என்று கூறிக்கொள்ளும் சம்பத் கடந்த 4 ஆம் திகதி இரவு 11 மணியளவில் சந்தேகத்துக்குரிய வகையில் பொதுமக்கள் வீடுகளில் நடமாடியுள்ளார். இதனைத் தொடர்ந்து பொதுமக்களால் கிராம சேவையாளர் ஊடாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாரும் கடற்படை அதிகாரிகளும் பொதுமக்களை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடல் நடத்தினர். இதன்போது குறித்த நபரால் எதுவித இடையூறுகளும் இனி வராது என்று தெரிவித்ததுடன் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் தமக்கு உடனடியாக அறிவிக்குமாறும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கடந்த சில நாள்களாக சம்பத் என்ற கடற்படை புலனாய்வாளர் எனக் கூறப்படுபவர் குறித்த பகுதிகளில் நடமாடுவதில்லை என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ம-5-251)

# நித்தியானந்தா கைது

## உத்தரவிட்டது கர்நாடக அரசு

பெங்களூர், ஜூன் 12

கர்நாடக மாநிலம் பெங்களூர் அருகில் அமைந்துள்ள பிடதியில் உள்ள நித்தியானந்தாவின் ஆசிரமத்துக்கு கர்நாடக அரசு சீல் வைத்துள்ளது. மேலும், தலைமறைவாக உள்ள நித்தியானந்தாவை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு கர்நாடக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தின் திருவண்ணாமலையைச் சேர்ந்தவரான நித்தியானந்தா கர்நாடக மாநிலம் பெங்களூர் அருகே உள்ள பிடதியில் ஆசிரமம் அமைத்துள்ளார். இவரது செயற்பாடுகள் பற்றியும் ஆசிரம நடவடிக்கைகள் குறித்தும் பல்வேறு சர்ச்சைகள் நாள்தோறும் வெளியாகி வருகின்றன.

அண்மையில் மதுரை ஆதீனத்தின் இளைய சந்நிதானமாக நித்தியானந்தா நியமிக்கப்பட்டதற்கும் கடும் எதிர்ப்பு உருவானது. இது தொடர்பாக வழக்குகளும் தொடரப்பட்டன. இந்நிலையில், கர்நாடகத்தில் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த நித்தியானந்தாவின் முன்னாள் சீடர் ஆர்த்திராவ், நித்தியானந்தா மீது பாலியல் குற்றச்சாட்டை முன்வைத்தார்.



அண்மையில் மதுரை ஆதீனத்தின் இளைய சன்னிதானமாக நித்தியானந்தா நியமிக்கப் பட்டதற்கும் கடும் எதிர்ப்பு உருவானது.

இந்த முறைப்பாடுக்கு விளக்கம் கொடுப்பதற்காக நித்தியானந்தா சில நாள்களுக்கு முன்பு பத்திரிகையாளர்கள் மாநாடொன்றை நடத்தினார். அதன்போது செய்தியாளர்களுக்கும் நித்தியானந்தாவின் சீடர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து நித்தியானந்தாவை பிடதியில் இருந்து வெளியேற்றக் கோரி கன்னட அமைப்பினர் போராட்டமும் நடத்தினர்.

இவ்வாறு தொடர்ந்து சர்ச்சைகளில் சிக்கி அசம்பாவிதங்களை உருவாக்கி வரும் நித்தியானந்தாவின் பிடதி ஆச்சிரமத்தை அரசு கையகப்படுத்தும் என்றும் கர்நாடக அரசு தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மேலும் பிடதி ஆச்சிரமத்துக்கு 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கைகளின் படி பிடதி ஆச்சிரமத்துக்கு கர்நாடக அரசு அதிகாரிகள் நேற்று சீல் வைத்தனர். மேலும் தலைமறைவாக உள்ள நித்தியானந்தாவைக் கைது செய்யவும் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நித்தியானந்தா ஆசிரமம் சீல் வைக்கப்பட்டுள்ள நிலையில் ஆசிரமத்துக்குச் சொந்தமான வங்கிக் கணக்குகளை முடக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அவரது பிணையை ரத்து செய்யவும் கர்நாடக அரசு நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாகக் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கருணாநிதியின் துணையுடன் வழக்கில் வெற்றிபெறுவேன்

### ஆ.ராசா நம்பிக்கை

ஊட்டி, ஜூன் 12

தி.மு.க. தலைவர் கருணாநிதி துணையுடனும், மக்கள் சக்தியுடனும் 2ஜி வழக்கில் வெற்றி பெறுவேன் என்று முன்னாள் தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா தெரிவித்துள்ளார்.



2ஜி வழக்கில் பிணையில் விடுதலையான முன்னாள் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் ஆ.ராசா தனது தொகுதியான நீலகிரிக்குச் சென்றார். ஊட்டியில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து சேரிங்கிராஸ் பகுதியில் உள்ள தேவாங்கர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் பேசினார். அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 2009ஆம் ஆண்டு நான் நீலகிரி தொகுதியில் போட்டியிட வந்தபோது அளிக்கப்பட்ட வரவேற்பு போன்று இன்றும் வரவேற்பு அளித்துள்ளீர்கள். நான் மத்திய அமைச்சராக இருக்கையில் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் என்னால் ரூபா 22 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டதாக சி.பி.சி. குற்றம் சாட்டியது. மேலும் மத்திய அரசின் தணிக்கைத் துறையோ என்னால் ரூபா ஒரு லட்சத்து 29 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டதாகக் கூறியது.

ஆனால் மத்திய புலனாய்வுத்துறை ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் ரூபா 33 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டதாக என் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது. எதிர்க்கட்சியினரோ நான் ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடிக்கு ஊழல் செய்து விட்டேன் என்று அவதூறு பரப்பினர். 2ஜி ஊழல் வழக்கு அனுமான அடிப்படையில் தொடரப்பட்டுள்ளது. எந்தவித அடிப்படை ஆதாரங்களும் இன்றி என் மீது வழக்குப் போடப்பட்டுள்ளது என்று நான் நீதிமன்றத்தில் தெரிவித்தேன்.

இந்த வழக்கில் தி.மு.க. தலைவர் கருணாநிதி துணையுடன், மக்கள் சக்தியுடன் எனது சட்ட அறிவை வைத்து வெற்றி பெறுவேன். நான் நிரபராதி என்பதை விரைவில் நிரூபிப்பேன்-என்றார். (வ)

## புதுக்கோட்டையில் இன்று இடைத்தேர்தல்

புதுக்கோட்டை தொகுதியில் இன்று இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி தொகுதி முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் கார்த்திக் தொண்டமானும், தே.மு.தி.க. சார்பில் ஜாகீர் உசேனும் போட்டியிடுகின்றனர். நேற்றுமுன்தினம் மாலை 5 மணியுடன் தேர்தல் பிரசாரம் நிறைவடைந்தது. இதையடுத்து தொகுதிக்குள் தங்கியிருந்த வெளியூர் பிரமுகர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இன்று காலை 7 மணியளவில் 224 மையங்களில் வாக்குப்பதிவு ஆரம்பமாகவுள்ளது. (வ)

## கறுப்புப் பணம் பதுக்கல் விவகாரம் 37 நாடுகளுடன் இந்தியா ஒப்பந்தம்


### பிரணாப் முகர்ஜி தகவல்

டெல்லி, ஜூன் 12

இந்தியர்களின் கறுப்புப் பணம் பதுக்கல் குறித்த தகவல்களைத் தெரிந்து கொள்ள 37 நாடுகளுடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளதாக மத்திய அமைச்சர் பிரணாப் முஹர்ஜி தெரிவித்தார்.

மேற்கு வங்க மாநிலம், கர்கிராம் என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் கறுப்புப் பணம் பதுக்கி வைத்திருப்பதாக முறைப்பாடுகள் வருகின்றன. இதுதொடர்பாக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் கறுப்புப் பணம் பதுக்கப்பட்டிருப்பது தொடர்பாக தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காக 37 நாடுகளுடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது.



இதேவேளை, வெளிநாட்டு வங்கியில் இந்தியர்கள் வைத்திருக்கும் பணம் எல்லாமே கறுப்புப் பணம் அல்ல. தொழிலதிபர்கள், தொழில் நிறுவனங்கள் தங்கள் பணத்தை முதலீடு செய்திருக்கலாம். கறுப்புப் பணம் எவ்வளவு பதுக்கப்பட்டுள்ளது என்று தெரிந்து கொள்ள கால அவகாசம் தேவைப்படும்.

சிரியா, லிபியா ஆகிய நாடுகளிடையே நிலவும் பதற்றம் காரணமாக பெற்றோலியப் பொருள்கள் மற்றும் உரங்களின் விலை அதிகரிக்கிறது. இந்த இரண்டு நாடுகளிடம் இருந்துதான் பொட்டாசியம் இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனால், அங்கு நிலவும் பதற்றம் காரணமாக பொட்டாசியம் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது. பெற்றோலியப் பொருள்களுக்கும் உணவுக்கும் அதிகளவில் அரசு மானியம் கொடுக்கிறது. இதனால், மாநிலங்களுக்கு கூடுதல் நிதியை மத்திய அரசு அளிக்க முடியவில்லை.

நாட்டின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு உறுதியுடன் உள்ளது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால், கூட்டணிக் கட்சிகளை காங்கிரஸ் நம்பி இருப்பதாலும் கருத்து வேறுபாடுகள் காரணமாகவும் வளர்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்படுகிறது-என்றார். (வ)

## மன்மோகன், சிதம்பரத்துக்கு மிரட்டல் விடுத்தவர் கைது

புதுடில்லி, ஜூன் 12

பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர் ஆகியோருக்கு மின்னஞ்சல் வாயிலாக மிரட்டல் விடுத்த ஐ.ஐ.டி. பொறியியலாளர் கைது செய்யப்பட்டார்.




கடந்த 2 ஆம் திகதி, ஜார்க்கண்ட் மாநிலம் ஹசாரிபாக் மாவட்டத்தின் அரியானாவிலிருந்து பைதைஹி என்ற பெயரில் வந்த மின்னஞ்சலில் பிரதமர் மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் ஆகியோருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து டில்லி பொலிஸ் ஆணையாளர் விசாரணையை ஆரம்பித்தார். அப்போது குறிப்பிட்ட மின்னஞ்சல் அனுப்பப்பட்டிருந்த இடம்குறித்து விசாரணை நடத்தியதில் ஹசாரிபாக் பகுதியைச் சேர்ந்த அனுராக் கைஷ்யாப் என்ற ஐ.ஐ.டி. பொறியியல் கற்கை நெறியைப் பயின்றவர் ஒருவர் அனுப்பியுள்ளார் என்பது கண்டறியப்பட்டது.

இவர், தனது உறவினர் ரமேஷ் ஷர்மாவுக்கு ஓய்வூதிய பணப்பலன்களை அளிக்காததைக் கண்டித்து தான் இந்த மின்னஞ்சல் மிரட்டல் விடுத்திருந்தது விசாரணையில் தெரியவந்தது. (வ)

## ஜெகன்மோகனின் நீதிமன்றக் காவல் ஜூன் 25 வரை நீடிப்பு



ஹைதராபாத், ஜூன் 12

வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டியின் நீதிமன்றக் காவல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கு தொடர்பாக சி.பி.ஐயால் அவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரின் 14 நாள் நீதிமன்றக் காவல் நேற்றுடன் முடிவடைவதையொட்டி நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதைத்தொடர்ந்து அவரது நீதிமன்றக் காவலை எதிர்வரும் 25ஆம் திகதி வரை நீடிப்பதாக நீதிபதி அறிவித்தார். (வ)

## முதன்முறையாக புல்லட் ரயில்

### ஒப்புதல் அளித்தது மத்திய அரசு

இந்தியாவில் முதன்முறையாக மணிக்கு 300 கிலோ மீற்றர் வேகத்தில் மும்பை-ஆமதாபாத் நகரங்களுக்கு இடையே அதிவேக ரயில்களை இயக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் புல்லட் ரயில்களும் ஒன்று. இதற்கு முன்பு, லாலு பிரசாத் யாதவ் ரயில்வே அமைச்சராக இருந்தபோது அதிவேக ரயில்களை இயக்க வேண்டும் என்று கூறி வந்தார்.

ஆனால் அவருடைய காலத்தில் இந்தத்திட்டம் நிறைவேறவில்லை. பின்னர், தினேஷ் திரிவேதி ரயில்வே அமைச்சராக இருந்த போதும் பரிசீலனையில் இருந்த இந்தத்திட்டம், இன்று



முகுல்ராய் ரயில்வே அமைச்சராக உள்ளபோது மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தத்திட்டம் ரூ.60 ஆயிரம் கோடி செலவில் நிறைவேற்றப்பட உள்ளது. தனியார் மற்றும் பொதுத்துறை இணைந்து நிறைவேற்றுவதா அல்லது மற்றொரு நாட்டுடன் இணைந்து நிறைவேற்றுவதா என்ற பரீசிலனையில் அதிவேக ரயில் திட்டம் உள்ளது. (வ)

### நடுவானில் கழன்றது விமான சக்கரம்

## பெண் விமானியின் சாதுரியத்தால் உயிர்தப்பினர் 52 பயணிகள்

விமானத்தின் முன் ரயர் நடுவானில் கழன்று வீழ்ந்தபோதும் 52 பேரின் உயிரைக் காப்பாற்றியுள்ளார் பெண் விமானி. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

அசாம் மாநிலம், சில்சார் விமான நிலையத்திலிருந்து, தலைநகர் கவுகாத்திக்கு நேற்று முன்தினம் காலை, ஏர்இந்தியா விமானம் ஒன்று புறப்பட்டது. விமானத்தில் பயணிகள் 48 பேர், விமானியான கப்டன் ஊர்மிளா, துணை விமானி யாஷூ மற்றும் பணியாளர்கள் என, மொத்தம் 52 பேர் இருந்தனர். சில்சார் விமான நிலையத்தில் இருந்து விமானம் மேலே எழும்பி, கவுகாத்தி நோக்கி பயணிக்கத் தொடங்கிய போது, நடுவானில், விமானத்தின் முன் பக்க ரயர் கீழே விழுந்தது.

இதையடுத்து, கவுகாத்தியில் உள்ள லோகோபிரியா கோபிநாத் போர்தோலாய் சர்வதேச விமான நிலையத்தின் கட்டுப்பாட்டறைக்கு, விமானி தகவல் கொடுத்தார். அங்கிருந்து கிடைத்த உத்தரவுகளை அடுத்து, கவுகாத்தி விமான நிலையத்துக்கு மேலே, இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக விமானம் வட்டமடித்தது.

வழக்கமாக சில்சாரில் இருந்து 45 நிமிட பயணத்தில், கவுகாத்திக்கு விமானம் சென்று விடும். ஆனால், நேற்றுமுன்தினம் எரி பொருள் முடிவடைய வேண்டும் என்பதால், நீண்டநேரம் வானில் வட்டமடித்தது. எரிபொருளுடன் ரயர் இல்லாமல் கீழே இறங்கினால், மிகப்பெரிய தீ விபத்து நிகழ்ந்து, பயணிகள் உயிருக்கு ஆபத்து நேரலாம் என்பதாலேயே எரிபொருள் முடியும்வரை விமானம் வானில் வட்டமடித்தது. (வ)

# 83 பேர் சாவு

## இராணுவ வன்முறைகள் சிரியாவில் அதிகரிக்கின்றன

டமாஸ்கஸ், ஜூன் 12

சிரியாவில் நேற்றுமுன் தினம் நடந்த தாக்குதல்களில், 83 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவில், கடந்த 1962 ஆம் ஆண்டு முதல், நெருக்கடி நிலை ஆட்சி நடக்கிறது. இதனால், அங்கு ஜனநாயக நடைமுறைகள் பின்பற்றப்படுவது அரிதாக உள்ளது. அசாத்தின் ஆட்சியை எதிர்த்து, கடந்த 14 மாதங்களாக, கிளர்ச்சியாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கிளர்ச்சியாளர்களை ஒடுக்க, சிரிய இராணுவம் எடுத்த நடவடிக்கையில், 13 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சிரியாவில் நிலைமையைச் சமாளிக்க, ஐ.நா., முன்னாள் பொது செயலர்




கோபி அனான், அமைதி உடன்படிக்கையை மேற்கொண்டார். இதன்படி, ஐ.நா., கண்காணிப்பாளர்கள் பலர், சிரியாவில் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

ஆனால், கடந்த சில வாரங்களாக, கிளர்ச்சியாளர்களுக்கும், இராணுவத்துக்கும் இடையே, மீண்டும் மோதல் அதிகரித்துள்ளது. ஒரு வாரத்துக்கு முன், ஹவுலா நகரில், இராணுவம் நடத்திய தாக்குதலில், ஒரே நாளில், 92 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த 8ஆம் திகதி ஹமா மாகாணத்தின் மசரத் அல் குபீர் என்ற கிராமத்தில், இராணுவம் நடத்திய விமானத் தாக்குதலில், 20 பெண்கள், 20 குழந்தைகள் உட்பட 87 பேர் உயிரிழந்தனர். இதைச் சர்வதேச கண்காணிப்பாளர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினமும் ஹாம்ஸ் மாகாணத்தின் பல்வேறு இடங்களில் இராணுவத் தரப்பில் நடத்தப்பட்ட தாக்குதலில், 83 பேர் உயிரிழந்தனர் என கிளர்ச்சியாளர்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது.



யேமனில் அல்குவைதா தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் பகுதிகளை நோக்கி நாட்டு இராணுவத்தினரும், நேட்டோ இராணுவத்தினரும் எறிகணைத் தாக்குதல்களை நடத்துகின்றனர்

## லிபியத் தேர்தல் பிற்போடப்பட்டது

லிபியாவில் இந்த மாதம் 19ஆம் திகதி நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த பொதுதேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையக உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் அடுத்த மாதம் நடத்தப்படலாம் என ஆலோசனை கூறப்பட்டுள்ளது.லிபியாவில் 2.7 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 80 சத வீதம் பேர் வாக்களிக்க தகுதியுடைவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


## சுற்றுலாப் பயணிகளின் ஹெலி விபத்தில் சிக்கியது பெருவில்

பெரு நாட்டில் நடந்த ஹெலிகொப்டர் விபத்தில் வெளிநாட்டினர் உட்பட 14 பேர் உயிரிழந்தனர். பெரு நாட்டில், சில சுற்றுலாப் பயணிகள் ஹெலிகொப்டர் ஒன்றில் அமேசான் பகுதியியைச் சுற்றிப் பார்த்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது தென்கிழக்கே , ஏன்டஸ் நகரில் மமரோசா என்ற மலைப்பகுதியில் மோதிய விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் பலர் தென்கொரியாவைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. கடும் பனிமூட்டம் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என பெரு அரசு தெரிவித்துள்ளது. மமரோசா பகுதி பொலிஸார் கூறுகையில்; விபத்து நடந்த பகுதி சுமார் 16,000 அடி உயரத்தில் உள்ளதால் மீட்புப்பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றார்.

## ஹெலிகொப்டர் விபத்தில் கென்ய அமைச்சர் சாவு





கென்யாவில் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதால் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் சைடோட்டி உட்பட 6 பேர் உயிரிழந்தனர். கென்யாவின் உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ஜ் சைடோட்டி மற்றும் 5 பேர் தலைநகர் நைரோபியில் இருந்து பொலிஸ் ஹெலிகொப்டரில் அருகில் உள்ள ஒரு இடத்துக்குச் சென்றனர். அப்போது நைரோபிக்கு அடுத்துள்ள ஒரு காட்டுப்பகுதியில் திடீரென ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கியது. அதில் பயணம் செய்த ஜோர்ஜ் உட்பட 6 பேரும் உடல் சிதறினர்.

இது குறித்துப் பொலிஸார் கூறுகையில், விபத்துக்கான காரணம் தெரியவில்லை, ஹெலிகொப்டரில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு மரத்தில் மோதியிருக்கலாம் என்றனர். கென்யப் பிரதமர் ரைலா ஒடிங்கா கூறுகையில், ''அமைதியான முறையில் தேர்தல் நடத்த ஏற்பாடுகள் செய்து வரும் கால கட்டத்தில் இப்படி துயரமான நிகழ்ச்சி நடந்துள்ளது'' என்றார்.

ஜோர்ஜ், அமெரிக்காவில் பயிற்சி பெற்ற பொருளாதார நிபுணர். கென்ய அரசியலில் முக்கியத்துவம் பெற்றிருந்த அவர் அரசின் செய்தித் தொடர்பாளராக இருந்தவர்.

அவர் அடுத்த தேர்தலில் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடப் போவதாக அறிவித்திருந்தார். அதற்குள் இப்படியொரு துயரமான முடிவு ஏற்பட்டு விட்டது.

## யூரோ வலய நாடுகளை வரவேற்கும் ஸ்பெயின்

ஸ்பெய்னின் பொருளாதார நெருக்கடிகளுக்கு நிதியுதவியளிக்கும் யூரோ வலய நாடுகளின் தீர்மானத்தைத் தாம் பெரிதும் வரவேற்பதாக அந்த நாட்டின் பிரதமர் மேரியானோ ரஜோய் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தீர்மானமானது பொதுவான நாணய அலகான யூரோவைப் பின்பற்றும் தமது நாட்டுக்கு கிடைத்த ஒரு வெற்றி என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்பெய்னின் நிதிக்கட்டமைப்பில் ஏற்படுத்திய மாற்றங்களின் விளைவாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட பிரதமர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.நூறு பில்லியன் யூரோக்களைக் கடனாக ஸ்பெய்னுக்கு வழங்குவதற்கு யூரோ வலய நாடுகளின் நிதி அமைச்சர்கள் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்பெயினுக்கு நிதியளிக்கும் கூட்டத் தொடரில் இணக் கம் கண்டிருந்தனர்.ஸ்பெய்னின் முறையற்ற நிதித் திட்டங்களால் அந்த நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது.

## இஸ்ரேல் ஆக்கிரமிப்புத் தினம் அனுஷ்டிப்பு

ஜெருசலேம், ஜூன் 12

1967-ஆம் நடைபெற்ற 6 நாள் போரில், மேற்குக் கரை, காசா பகுதி, கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளைஇஸ்ரேல் கைப்பற்றியது. அதன் 45ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு நூற்றுக்கணக்கான யூதர்களும், அரேபியர்களும் பங்கேற்ற எதிர்ப்புப் பேரணி டெல் அவிவ் நகரில் நடைபெற்றது என இஸ்ரேலிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஹாரெட்ஸ் என்ற இடதுசாரி சிந்தனை மிக்க பத்திரிகையின் இணையதளம் வெளியிட்டுள்ள செய்தியில், கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற இந்தப் பேரணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர் என தெரிவித்துள்ளது. எனினும் இஸ்ரேலிய இராணுவ வானொலி சில நூறு பேர்களே பேரணியில் பங்கேற்றனர் எனத் தெரிவித்தது.

ஆக்கிரமிப்பு அகலாத வரை சமூக நீதி கிடைக்காது என்ற முழக்கத்துடன் அவர்கள் பேரணியில் பங்கேற்றனர் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

பாலஸ்தீனர்களும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு பகுதிகளில் போராட்டம் நடத்தினர்.

மேற்கு கரையில் கட்டப்பட்டுள்ள இஸ்ரேலிய குடியிருப்புகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் 300 பாலஸ்தீனர்கள் கடந்த சனிக்கிழமை மதியம் போராட்டம் நடத்தினர்.

ரமல்லா பகுதிக்கு வடக்கில் உள்ள பீத் நுபா கிராமத்தில் இராணுவத்தினர் மீது கற்களை எரிந்தும், ரயர்களைக் கொளுத்தியும் பாலஸ்தீனியர்கள் போராட்டம் நடத்தினர். பாதுகாப்புப் படைகள் வீசிய கண்ணீர் புகைகுண்டுகளாலும், ரப்பர் குண்டுகளாலும் போராட் டக்காரர்கள் சிலர் காயமடைந்தனர்.

## 64 ஆண்டுகளுக்குப் பின் புதைக்கப்படும் உடல்

சோவியத் யூனியனை நிர்மாணித்தவரான மாபெரும் கம்யூனிசத் தலைவருமான லெனினின் உடல் அவர் இறந்து 88 ஆண்டுகளுக்குப் பின்னர் அடக்கம் செய்யப்படவுள்ளது. மொஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் அமைந்துள்ள நினைவிடத்தில் லெனின் உடல் பதப்படுத்தப்பட்ட நிலையில் கடந்த 88 ஆண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.



கடந்த காலங்களில் ஏராளமான மக்கள் இந்த உடலைப் பார்த்துள்ளனர். சோவியத் யூனியன் சிதறுண்டு போன பின்னரும் கூட லெனின் உடல் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது லெனினின் உடலை அடக்கம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1924ஆம் ஆண்டு 53 ஆவது வயதில் லெனின் மரணமடைந்தார். அவரது உடலை இத்தனை காலமாக அடக்கம் செய்யாமல் வைத்திருப்பது அபத்தமானது என்று ரஷ்ய கலாசார அமைச்சர் விலாடிமிர் மெடின்ஸ்கி கூறியுள்ளார். இவர் ஜனாதிபதி புடினுக்கு மிகவும் நெருக்கமானவர்.

மிகுந்த மரியாதைக்குரியவரான லெனினின் உடலை உரிய அரசு மரியாதைகளுடன் அடக் கம் செய்ய வேண்டும் என்று மெடின்ஸ்கி கூறியுள்ளார். தனது உடலை மிகச் சாதாரணமான முறையில் அடக்கம் செய்ய வேண்டும் என்பதே லெனினின் கடைசி ஆசை. அதைக் கூட இதுவரை நிறைவேற்றாமல் இருப்பது தவறானது. அவரது விருப்பபடி சாதாரண கல்லறையில் அவரது உடல் அடக்கம் செய்யப்படும்.

மிகவும் மரியாதைக்குரிய இடத்தில், மரியாதையான, கௌரவமான முறையில் லெனின் உடல் அடக்கம் செய்யப்படும். தற்போது லெனின் உடல் அடங்கியுள்ள நினைவிடம், சோவியத் வரலாற்று நினைவிடமாக மாற்றப்படும் என்றார் அவர்.

லெனின் உடலை அடக்கம் செய்ய ரஷ்ய அரசு தீர்மானித்திருப்பதையே மெடின்ஸ்கியின் பேச்சு குறிப்பிடுவதாக கருதப்படுகிறது. லெனினின் தாயார் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் அடக்கம் செய்யப்பட்டார். அவரது கல்லறைக்கு அருகிலேயே லெனின் உடலும் அடக்கம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மறைந்த சோவியத் தலைவர் ஸ்டாலினின் உத்தரவின் பேரில் லெனின் உடல் பதப்படுத்தப்பட்டு பாதுகாப்புடன் மக்கள் பார்ப்பதற்காக வைக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை அவரது உடல் அடக்கம் செய்யப்படாமலேயே இருந்து வருகிறது. தற்போதைய ஜனாதிபதி புடின்கூட லெனின் உடலை அடக்கம் செய்வதைத் தாமதப்படுத்தியே வந்துள்ளார். மூத்த ரஷ்யர்களால் லெனின் மாபெரும் தலைவராக இன்று வரை மதிக்கப்படுவதால் லெனின் உடலை அடக்கம் செய்ய புடின் தயங்குவதாகத் தெரிகிறது.

# மக்கள் குடியிருப்புகள் மீது இனி நேட்டோ தாக்குதல் நடக்காது



காபூல், ஜூன் 12

ஆப்கானிஸ்தானின் குடியிருப்புப் பகுதிகள் மீது நேட்டோ படையினரின் வான் தாக்குதல் இனி இருக்காது என்று அந்த நாட்டு ஜனாதிபதி ஹமீட் கர்சாய் தெரிவித்தார். வான் தாக்குதலில் மக்கள் உயிரிழந்ததற்கு நேட்டோ தளபதி தம்மிடம் வருத்தம் தெரிவித்துள்ளார் எனவும் அவர் கூறியுள்ளார்.

பாராகி பாரக் மாவட்டத்தில் பொதுமக்கள் உயிரிழந்ததற்கு நேட்டோவின் தளபதி ஜோன் ஆலன் வருத்தம் தெரிவித்ததோடு, இனி அதுபோல் நடக்காது என்று வாக்குறுதி அளித்துள்ளார் எனவும் ஜனாதிபதி மாளிகை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

லோகர் மாகாணத்தில் நேட்டோ படையினர் நடத்திய தாக்குதலில் பொது மக்கள் 18 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து வருத்தம் தெரிவித்த ஆப்கன் ஜனாதிபதி, தனது சீனப் பயணத்தை இடையில் முடித்துக் கொண்டு நாடு திரும்பினார்.

இது போன்ற சம்பவங்களை எந்தச் சூழல்நிலையிலும் நியாயப்படுத்த முடியாது என்றும் கர்சாய் தெரிவித்தார்.

பொதுமக்கள் உயிரிழப்பைக் குறைக்கும் வகையில் எங்கள் படை நடவடிக்கைகளை மறுஆய்வு செய்வோம் என்று நேட்டோ கூட்டுப் படையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

## பிரான்ஸில் நாடாளுமன்றத் தேர்தல்



பாரிஸ், ஜூன் 12

பிரான்ஸில் நேற்றுமுன்தினம் முதற்கட்ட நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

பிரான்ஸின் ஜனாதிபதித் தேர்தல் கடந்த மாதம் நடந்தது. ஜனாதிபதியாக இருந்த நிக்கோலஸ் சர்கோசி தோல்வியடைந்தார். புதிய ஜனாதிபதியாக பராங்காய்ஸ் ஹோலன்ட் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிலையில் பிரான்ஸின் நாடாளுமன்றத் தேர்தல் முதற் கட்டமாக நேற்றுமுன்தினம் நடந்தது. ஜனாதிபதி ஹோலன்ட் உள்ளிட்ட தலைவர்கள் வாக்களித்தனர்.

பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் மொத்தம் 577 ஆசனங்கள் உள்ளன. இரண்டாவது கட்ட தேர்தல் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் சோஷலிஸ்ட் கட்சி வெற்றி பெற்றால் தான், ஜனாதிபதி ஹோலன்ட், தான் அறிவித்துள்ள பொருளாதாரத் திட்டங்களை எளிதாக நிறைவேற்ற முடியும்.

ஆனால் இந்தத் தேர்தலில் அவரின் கட்சி தோல்வி அடைந்தால் பிரான்ஸில் ஆட்சிக்கு வந்த முதல் இடது சாரி தலைமைத்துவமும் தோற்றுப் போகும் நிலை உருவாகும் என எச்சரிக்கப்படுகிறது. அத்துடன் சரிந்து கொண்டிருக்கும் பிரான்ஸின் பொருளாதார நிலையில் இது பெரிய த்தாக்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## உக்ரைனில் விமான விபத்து

உக்ரைனில் சிறிய ரக விமானம் நொறுங்கி வீழ்ந்ததில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 13 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்த நாடு உக்ரைன். அங்கு பரசூட் மூலம் குதிக்கும் சாகச வீரர்கள் 16 பேர் ஒரு சிறிய ரக விமானத்தில் நேற்றுமுன் தினம் காலை புறப்பட்டனர்.

திடீரென்று ஏற்பட்ட புயல் மழையால் அந்த விமானம் பறப்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதையடுத்து, தலைநகர் கீவ் அருகில் உள்ள போரோட்யாங்கா விமான நிலையத்தில் விமானத்தை அவசரமாகத் தரையிறக்க 2 விமானிகளும் முயற்சித்தனர். எனினும் அந்த முயற்சி தோல்வியடைந்து, நொறுங்கி வீழ்ந்ததில் 5 பேர் இறந்தனர். 13 பேர் காயமடைந்தனர். இந்த விபத்துக் குறித்து விசாரணை நடத்த உக்ரைன் அரசு உத்தரவிட்டுள்ளது.

## பாக்தாத்தில் குண்டுத் தாக்குதல்

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள சதுக்கத்தில் நடந்த குண்டுத் தாக்குதலில் அப்பாவி மக்கள் 6 பேர் உயிரிழந்தனர். மற்றும் 38 பேர் பலத்த காயமடைந்தனர்.

இது குறித்துப் பொலிஸ் மற்றும் மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்ததாவது:-

நேற்று முன்தினம் பாக்தாத்தில் உள்ள ஒரு சதுக்கத்தில் ஒரு பிரிவினர் நடத்திய நினைவு தினம் மற்றும் மத ரீதியான நிகழ்ச்சிக்கு ஏராளமான பொது மக்கள் திரண்டிருந்தனர். இந்த நிலையில் அங்கு கூடியிருந்தவவர்கள் மீது இரு முறை குண்டுத் தாக்குதல் நடந்துள்ளது என தகவல் தெரிவித்தது.

இது குறித்து பாக்தாத் நகர பொலிஸ்அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்; இது மதப் பிரிவினரிடையே இருந்த பழைய தகராறு ஒன்றின் பழியைத் தீர்த்துக் கொள்வதற்காகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது தீவிரவாதத் தாக்குதலாக இருக்காது எனத் தெரிவித்தார்.


 மு/விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
விசுவமடு.

**ஏல விற்பனை**


விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான 06 நல்ல நிலையில் உள்ள லொறி ரயர்கள்(1000 - 20) ஏல விற்பனை செய்யவுள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம். அவற்றைப் பெற விரும்புவோர் கீழ்க்குறிப்பிடப்படும் திகதியில் சமுகமளித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

திகதி:- 14.06.2012 வியாழக்கிழமை
நேரம்:- முற்பகல் 10 மணி
இடம்:- விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க தலைமைக்காரியாலயம், வள்ளுவர் புரம், றெட்பானா, விசுவமடு.

தலைவர்,
ப.நோ.கூ.சங்கம்,
விசுவமடு.

(சி/567) (2-6-9)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தாய் மடியில் 23★03★1951 | காலன் பிடியில் 25★06★2011

**அமரர் சரவணமுத்து இந்திரராசா (இந்திரன்)**


(ஓய்வு பெற்ற இயந்திர இயக்குநர், இ.மி.சபை, சுன்னாகம்)

திதி : 12.06.2012

தந்தைக்கு இலக்கணமாய் தரணியிலே வாழ்ந்தீர்கள்
பண்பாக எங்களையும் வளர்த்து ஆளாக்கினீர்கள்
பார்போற்ற நாம் வாழ பாதை காட்டினீர்கள்
உங்கள் குரல் ஓய்ந்து ஆண்டொன்று ஆகிவிட்டதப்பா
இது கனவாகக் கூடாதா என இன்றும் மனம் ஏங்குதப்பா
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எம்மை என்றும் ஆண்டு கொண்டே இருக்குமப்பா
என்றும் உங்கள் இனிய நினைவுகளுடன்

ஐயனார் கோயிலடி, மல்லாகம் (19092)(6-8-9) குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 21★03★ 1937

இறப்பு 06★06★ 2010

**அமரர் சந்திரசேகரம் நடேசபிள்ளை**

(ஓய்வுபெற்ற அதிபர் - யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்)

ஆண்டுகள் இரண்டு மறைகின்றது நீங்கள் வானுறையும் தெய்வமாகி,
ஆனாலும் உங்கள் அன்பு நினைவுகள் மட்டும்
எங்கள் மனதை விட்டு அகலவில்லையே!
அன்புடன் அறிவுரைகள் பல கூறி எமக்கெல்லாம்
வழிகாட்டியாக இருந்த எங்கள் அன்புத் தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் நித்தமும்
உங்கள் நினைவுகள் நிழலென எங்களுடன் தொடர்ந்துவரும்....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருகோணமலை. (19178) (2-6-9) - குடும்பத்தினர்.


**வீடு, காணி விற்பனைக்கு**

யாழ்.பழைய பூங்கா வீதியில் உள்ள 4 அறை வீடும், காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0777719392

(19142)(2-6-9)

**வான் விற்பனைக்கு**

253 xxxx இலக்கமுடைய கயஸ் வான் 113 நீள மொடல் Super GL விற்பனைக்கு.

தொடர்பு:- 0721424782

(19144)(2-6-9)

**திசைகாட்டியில்........**

பதவி வெற்றிடம்

பொது முகாமையாளர் (ஒப்பந்த அடிப்படை)

எமது நிறுவனத்தில் மேற்படி பதவி வெற்றிடத்திற்கு பின்வரும் தகைமைகள் கொண்ட பொருத்தமான தேர்வு நாடி தேர்வு செய்யப்படவுள்ளார்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஆண்-பெண் வயது 40 இற்கு மேல்

தகைமை: அரச துறையில் நிர்வாகத்தரத்தில் முன்னனுபவம்-தனியார் துறையில் முகாமையாளர் தரத்தில் அல்லது கணக்காளர் தரத்தில் பணியாற்றியவர்கள் மாத்திரம் (ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.)

ஆங்கிலத்தில் உரையாடும் திறன் கட்டாயமாக இருப்பதுடன் சிங்களம் அவசியமாகும்.

நேர்முகத் தேர்வு 13.06.2012 பி.ப 5மணி (தொலைபேசி மூலம் தொடர்புகொண்டால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

எமது யாழ்ப்பாண தலைமைக்காரியாலயம் பணியிடமாக அமைவதுடன் ஏனைய கிளைகளான கிளிநொச்சி, கொழும்பு போன்றவற்றை ஒருங்கிணைத்து முகாமை செய்வதுடன் விற்பனை மேம்படுத்தல் புரிதல் அவசி யம். (எமது ஆஸ்திரேலியாக்கிளை நேரடியாக பிரதம நிறைவேற்று அதிகாரியின் ஆளுகைக்குட்பட்ட தாகும்.)

எழுது வினைஞர், அமைய அடிப்படை (Clerk)

பெண்கள் க.பொ.த.உயர்தரம் 3 பாடங்கள் சித்தி. யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வசிப்பவர்கள் மாத்திரம். நேர்முகப்பரீட்சை 12.06.2012, 13.06.2012 மு.ப 11 மணி தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறும்.

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வேதனம் நேரில்

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
(pv 82703)
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.
021 221 9016

எ.பிரவீனா
பிரதம நிறைவேற்று அதிகாரி
தலைமைக்காரியாலயம்

115எ இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.
021 228 5544.

22A, FRANK FORT PLACE,
BAMBALAPITTY.
011 250 8443

504, HAMPTON STREET,
MALBORNE, AUSTRALIA.
0061 3904 37100



(19191)(6-9)


## மரண அறிவித்தல்

### தங்கப்பிள்ளை கணபதிப்பிள்ளை

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பையும் சுதந்திரபுரத்தையும் வசிப்பிடமாகக் கொண்டவருமான தங்கப்பிள்ளை கணபதிப்பிள்ளை சனிக்கிழமை இரவு (10.06.2012) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செவ்வந்திநாதர் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைரமுத்து கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் அன்பு அக்காவும், சுபாஷினி, அமர்நாத், தர்ஷினி பெரேரா, அனுஷா முகுந்தன் (Australia), வினுசா சுதர்சன் (UK) ஆகியோரின் மா என்று அழைக்கப்பட்ட மாமியும், அம்பிகாதேவியின் மச்சாளும், அவிநேஷ், அம்ரித்தா, நடாஷா, செனன்கிறிஸ், ஆர்த்தி, வித்தகி(Australia), பிரணவி, ரக்ஷனா(UK), ஆகியோரின் அன்புப்பாட்டியும், சுதந்திரபுரம் சீதாவின் பெறாத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணி அளவில் சுதந்திரபுர இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முல்லைத்தீவு சுதந்திரபுர இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

113, சுதந்திரபுரம்,
முல்லைத்தீவு.


தகவல்:
அம்பிகாதேவி மாணிக்கவாசகர்

(19188)(6-8-9)

# வாய்ப்பு வரும் நேரம்

(02)

இப்போது, நாம் அந்த மருந்துக்கடைக்காரரைப் பற்றிய நமது கருத்தைக் காண்போம். மன்னரின் உடல்நிலை ஆபத்தான நிலையில் உள்ள சமயத்தில் அவர் அரண்மனைக்குச் சென்றபோது, அவரைப் போல திறமையுள்ள பலர் அங்கு செல்லவில்லை. இந்தத் தனியான தொரு வாய்ப்பு அவருக்கும் மற்றவர்களுக்கும் இடையே ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தியது. அதே சமயத்தில், மருந்துக் கடைக்காரரின் மருத்துவக் கல்வி அறிவு அத்தியாவசியமான ஆதாரமாக இருந்தது வெளிப்படையாக காணப்படுகிறது. அவருக்கு வாய்ப்புக் கிடைத்த சமயத்தில் அதைப் பயன்படுத்திக் கொள்ள பொருத்தமற்றவராக இருந்திருந்தால், அவரது அறியாமையும், திறமையின்மையும் அரண்மனையில் வெளிப்பட்டிருக்கும். அந்த வாய்ப்பு அவருக்குப் பயனற்றதாகி இருக்கும்.



இதைப்பற்றி மேலும் விளக்கிச் சொல்ல, ''ஓல் புல்'' லைப் பற்றி அடிக்கடி சொல்லப்படும் நிகழ்ச்சியை நினைவு கூறலாம். இந்த வயலின் கலைஞர் தனக்குப் பிடித்தமான இசைக் கருவியில் பல வருடங்கள் இசைப் பயிற்சி பெற்று, புகழ் பெறுவதற்குத் தன்னைத் தகுதியுள்ளவராக்கிக் கொண்டார். ஆனாலும் அவருக்குப் புகழ் வந்து சேரவில்லை. பொது மக்கள் மத்தியில் அவர் ஓர் இசைக் கலைஞர் எனப் பேர்பெற முடியவில்லை. எனினும், அவருக்கு வாய்ப்பு வேறு வழியாக வந்தது.

பிரபல பாடகி மாலிபிரான் ஒருமுறை ஒரு நோர்வேஜிய இளைஞன் வயலின் வாசித்துக் கொண்டிருந்த ஜன்னலைக் கடந்து செல்ல நேரிட்டது. அந்த இசையைக் கேட்ட அவளுக்கு, வயலின் அவ்வளவு இனிமையான இசையை அளிக்க வல்லது என்பதை ஒரு போதும் கேட்டதில்லை எனத் தோன்றியது. அவள் அந்த இளைஞனின் பெயரைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

பிறகு சில நாள்கள் கழித்து அவளது இசை நிகழ்ச்சி ஓர் இசையரங்கில் நடந்தது. அன்று அவளது ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர். அவளுக்கும் இசையரங்க மனேஜருக்கும் இடையே திடீரென ஏற்பட்ட மனவிரோதத்தால், அங்கு பெருந்திரளாகக் கூடியிருந்த ரசிகர்களை மகிழ்விக்க ஓல் புல் அழைத்து வரப்பட்டார்.

அங்கு அவர் அளித்த ஒரு மணிநேர இசை நிகழ்ச்சி அவரை இசை உலகின் உச்சிக்கு அருகே அழைத்துக் கொண்டு சென்று விட்டது. அந்த நேரம்தான் அவருக்கு வாய்ப்புக் கிட்டிய நேரம். அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள அவர் தயாராக இருந்திருந்தார்.

இந்த விஷயத்தை மேலும் விளக்கிக் கூறுவதற்கு ஜார்ஜ் கேரி எக்ளஸ்டன் விவரித்துள்ள கதை மிகவும் பொருத்தமாக அமையும். அந்தக் கதை அன்டோனியோ என்ற பாத்திரம் கழுவும் பையனைப் பற்றியது ஆகும்.

அவன் பிசானோவின் கடையில் அவ்வப்போது கல்தச்சனாக வேலை செய்து வந்தது மட்டுமின்றி தனது கருவிகளைத் திறமையுடன் கையாள்வதில் வல்லவனாகவும் மாறி இருந்தான்.

அவன் பிரபுஃபலீரோவின் சமையலறையில் பாத்திரம் கழுவுபவனாக வேலை செய்வது வழக்கமாகும். அவன் புகழ் என்பதை முற்றிலும் அறியாதவன். ஒரு நாள் அவனது முதலாளி தனது நண்பர்களை விருந்திற்கு அழைத்திருந்தார். அவர் வீட்டுச் சாப்பாட்டு மேசையின் நடுவில் வைப்பதற்காக இனிப்புப் பொருள் ஒன்றை உருவாக்கும் போது அது கெட்டுப் போய்விட்டது. அந்தச் சமயத்தில் கல்தச்சுச் சிறுவன் மேசையில் காலியாக உள்ள இடத்தில் வைப்பதற்கு ஒரு பொருளைச் செய்து தர முன்வந்தான்.

அவன் நிறைய வெண்ணெயை எடுத்து வந்து குனிந்து கொண்டிருக்கும் ஒரு சிங்கத்தின் பெரிய உருவத்தை வெகு விரைவாகச் செய்து முடித்தான். அது மேசையின் நடுவில் வைக்கப்பட்டது.

அந்த விருந்துக்கு வந்திருந்த அரச விருந்தினர்களிலும் வியாபாரிகளிலும் சிலர் கலா ரசிகர்களும் விமர்சகர்களும் ஆவர். அவர்களது பார்வை அந்த அற்புதமான வெண்ணெய்ச் சிங்கத்தின் மீது விழுந்தவுடன், அது இயற்கையாகப் படைக்கப்பட்டுள்ளதைக் கண்டு வியப்படைந்தனர். அவர்கள் அந்தக் கலைப்பொருளை உருவாக்கிய பிரபல சிற்பியாரென விருந்தளிப்பவரிடம் கேட்டனர். இனிப்பு தயாரிப்பவர் நடந்த உண்மையைக் கூறியவுடன், விருந்தளிப்பவர் அன்டோனியா கலைப் படிப்பைத் தொடர்வதற்கான செலவுகளைத் தான் ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார்.

இன்று கலை வரலாற்றில் அழியாப் புகழ்பெற்ற சிறந்த சிற்பிகளில் ஒருவரான 'கனோவா' தான் அந்தச் சிறுவன். அவனுக்கு வாய்ப்புக் கிடைத்த சமயத்தில் அதை நழுவ விடாமல் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருந்திராவிடில், அவன் பாத்திரம் கழுவுபவனாக வாழ்ந்து மறைந்திருப்பான்.

-கண்ணதாசன்

(தொடரும்)

# மாணவர்களை நல்வழிப்படுத்தும் இறுவட்டை விரைவில் பாடசாலைகளுக்கு வழங்கவுள்ளோம்

## யாழ். வணிகர் சங்கம் அறிவிப்பு

**மாணவ சமுதாயத்தை நல்வழிக்கு திசை திருப்புதல் செயற்பாட்டை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு பிரதேச செயலக மற்றும் பிரதேச சபை அதிகாரிகளுடனும், சமூகவியல் நிபுணர்களிடமும் பேசவுள்ளேன்.**

யாழ்ப்பாணம், ஜூன் 12

பாடசாலை மாணவர்களைக் கல்வியில் தூண்டவும். அவர்களை நல்வழிப்படுத்தவும் அனைத்து சமூகமும் ஒருமித்து முன்வர வேண்டும்.

மாணவர்கள் தீய வழியில் செல்வதை உடன் தடுத்து நிறுத்தவும், ஏனைய தொலைபேசி, மதுபாவனை, தொலைக்காட்சி (சின்னத்திரை பார்வை) மற்றும் இணைய நிலையங்கள் போன்றவற்றில் இருந்து விடுபட, விழிப்புணர்வை ஏற்படுத்த நாம் 'இறுவட்டு மூலம் நல்வழிப்படுத்தல் திட்டத்தை' விரைவில் வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கவுள்ளோம் என்று யாழ். வணிகர் சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

இறுவட்டு மூலம்- நல்வழிப்படுத்தல் திட்டம் எனும் தலைப்பில் அண்மையில் யாழ்.வணிகர் சங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணம் இன்று கல்வியில் பின்தள்ளப்பட்டுவிட்டது என்பதை நாம் யாவரும் அறிவோம்.


இது எமது சமூகவியல் நீரோட்டத்தில் பெரிய பின்னடைவை ஏற்படுத்தும். இதற்கு பல காரணங்கள் உண்டு. எனவே வழிதவறி செல்லும் எமது இளைய மாணவ சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டிய தேவை எமக்கு உள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனிடம் நான் தொடர்பு கொண்டுள்ளேன்.

இதற்கான வழிப்படுத்தல் மேற்கொள்வதற்கு பூரண ஒத்துழைப்பை, பாடசாலை அதிபர்- ஆசிரியர் மற்றும் சமூகநலன் விரும்பிகளிடமிருந்து பெற்றுத் தருவதாக அவர் கூறியுள்ளார்.

எனவே மாணவ சமுதாயத்தை நல்வழிக்கு திசை திருப்புதல் செயற்பாட்டை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு பிரதேச செயலக மற்றும் பிரதேச சபை அதிகாரிகளுடனும், சமூகவியல் நிபுணர்களிடமும் பேசவுள்ளேன்.

எனவே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு நல்கும் விடயமாக விசேட கலந்துரையாடலை இந்த மாத நடுப்பகுதியில் நடத்தவும் திட்டமிட்டுள்ளேன் - என்றார். (எ-50)





சுன்னாகம் பொது நூலகத்தில் சிறுவர் நூலகப் பிரிவு செயற்பட ஆரம்பித்துள்ளது. இப்பிரிவில் சிறுவர்களின் அறிவை மேம்படுத்தும் விளையாட்டுப் பொருள்கள், இறுவட்டுக்கள், அட்டைகள், புத்தகங்கள் என்பன வைக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் மகிழ்ச்சியாக வந்திருந்து நூல்களை வாசிக்கும் வகையில் இது செயற்படுகிறது. நூலகர் க.செளந்தரராஜனின் வழிகாட்டலில் சிறுவர்கள் பலர் இந்த நூலகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். பிரதேச சிறுவர்கள் அங்கத்தவராக இணைந்து நூல்களை வாசிப்பதுடன் இரவல் பெற்றுச் செல்லவும் முடியுமென நூலகர் தெரிவித்தார். (38)

# கலை, இலக்கிய போட்டி முடிவுகள்

தென்மராட்சி,ஜூன் 12

தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரால் நடத்தப்பட்ட இந்த வருடத்துக்கான மாணவர்களுக்கிடையேயான கலை இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**கனிஷ்டபிரிவு,**

**கவிதை**

1ஆம் இடம்-சி.மாதுமை-மட்டுவில் சந்திரமௌலீச வித்தி, 2ஆம் இடம்-நி.பவித்திரா- மட்டுவில் சந்திரமௌலீச வித்தி, 3ஆம் இடம்-வி.ஹார்த்திகன்-மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.

**கவிதை பாடல்**

1ஆம் இடம்-ர.இலக்ஸன்-மட்டுவில் சந்திரமௌலீச வித்தி, 2ஆம் இடம்-சு.துஷாந்தன்- மட்டுவில் சந்திரமௌலீச வித்தி, 3ஆம் இடம்-ரா.சுமன்-மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.

**கையெழுத்துப் போட்டி**

1ஆம் இடம்-நி.சர்வினி-மட்டுவில் சந்திரமௌலீச வித்தி, 2ஆம் இடம்-சீ.நினோஜிகா- மட்டுவில் சந்திரமௌலீச வித்தி, 3ஆம் இடம்-சி.வனோஜா-சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

**சிரேஷ்டபிரிவு,**

**கட்டுரை**

1ஆம் இடம்-ம.கிருத்திகா-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, 2ஆம் இடம்-க.மயூரா-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, 3ஆம் இடம்-இ.டிசாந்தி- கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.

**கவிதை**

1ஆம் இடம்-த.டிலானி- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, 2ஆம் இடம்-க.தனுஷியா-கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.

**கவிதை பாடல்**

1ஆம் இடம்-ப.உசாலினி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 2ஆம் இடம்-ப.நிதுர்ஷன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 3ஆம் இடம்-வி.சொமூடிஸ்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**திறந்தபிரிவு**

**கவிதை (தமிழ்)**

1ஆம் இடம்-ச.பிரேமினி- சங்கத்தானை (ADS கோப்பாய்), 2ஆம் இடம்-வ.சின்னப்பா-தனங்கிளப்பு, 3ஆம் இடம்-ந.ரஞ்சனா-நுணாவில் மேற்கு (ADS தென்மராட்சி).

**கவிதை (ஆங்கிலம்)**

1ஆம் இடம்-வ.சின்னப்பா-தனங்கிளப்பு.

**சிறுகதை**

1ஆம் இடம்-ச.பிரேமினி- சங்கத்தானை, 2ஆம் இடம்- ந.ரஞ்சனா-நுணாவில் மேற்கு, 3ஆம் இடம்-த.சஞ்சேயன்-சாவகச்சேரி.

**சிறுகதை (ஆங்கிலம்)**

1ஆம் இடம்-ஜ.ஷ.கேதீஸ்-டச்சு வீதி, சாவகச்சேரி.

**சிறுவர் கதையாக்கம்**

1ஆம் இடம்-க.விமலாசினி-வெள்ளாம் போக்கட்டி, 2ஆம் இடம்-அ.கமலாசினி-வெள்ளாம் போக்கட்டி, 3ஆம் இடம்-வை.ரவீந்திரதாஸ்-டச்சு வீதி, சாவகச்சேரி.

**பாடலாக்கம் (தமிழ்)**

1ஆம் இடம்-ந.சஞ்சயன்- சாவகச்சேரி, 2ஆம் இடம்-ந.ரஞ்சனா-நுணாவில் மேற்கு, 3ஆம் இடம்-ச.பிரேமினி-சங்கத்தானை.

**பாடலாக்கம் (ஆங்கிலம்)**

1ஆம் இடம்-கே.ஜெயப்பிரதாயினி- சாவகச்சேரி, 2ஆம் இடம்-பெ.சண்முகநாதன்-சாவகச்சேரி, 3ஆம் இடம்-வ.சின்னப்பா- தனங்களப்பு.

**நாட்டார் கலை கற்றல்**

1ஆம் இடம்-க.விமலாசினி-வெள்ளாம் போக்கட்டி, 2ஆம் இடம்-அ.கமலாசினி-வெள்ளாம் போக்கட்டி.

(எ-9)

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## முன்னேற இடமுண்டு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தொடர்பில் அண்மைக் காலமாக குற்றச்சாட்டுக்கள் அதிகளவில் எழுகின்றன. குடாநாட்டில் மருத்துவத்துறை வர்த்தகத்தை முதன்மைப்படுத்தியதாக வளர்ந்து வரும் நிலையில் போதனா வைத்தியசாலை குறித்து எழும் சர்ச்சைகள் கவலையைத் தருகின்றன.

போதனா வைத்தியசாலையின் சவக் கிடங்குக்குச் செல்லும் சடலங்களை வெளியே எடுக்க உறவினர்கள் பல ஆயிரங்களைச் செலவிட வேண்டியுள்ளது என்பது நீண்ட காலமாக நிலவும் ஒரு குற்றச்சாட்டு. அத்துடன் சேர்ந்து இப்போது சடலங்களின் உடற்கூற்றுச் சோதனை தாமதமாகிறது என்ற குற்றச்சாட்டும் சேர்ந்து கொண்டுள்ளது.

மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்களின் உரிய நேர, சரியான கவனிப்பு இல்லாததால் தமது பிள்ளைகள், உறவினர்கள் உயிரிழந்து போய்விட்டார்கள் என்ற குற்றச்சாட்டுடன் வாராந்தம் எமது அலுவலகத்தை நாடுவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. விடுதிகளிலும் வெளிநோயாளர் பிரிவுகளிலும் கவனிப்புச் சரியாக இல்லை என்ற குறையுடன் பத்திரிகை அலுவலகம் நாடி வருவோரின் எண்ணிக்கையும் நிச்சயமாக அதற்குக் குறைந்ததல்ல.

இப்போது பொருள்கள் களவாடப்பட்டதாகவும், முறைகேடான விதமாக விற்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் வருகின்றன. அவற்றுக்கு மறுப்புக்களும் தெரிவிக்கப்படுகின்றன எனினும் போதனா வைத்தியசாலையைச் சுற்றி இவ்வாறு எழும் குற்றச்சாட்டுக்களின் எண்ணிக்கை அதிர்ச்சியையும் கிலேசத்தையும் ஏற்படுத்துகிறது.

வடக்கில் இருக்கக்கூடிய ஒரேயொரு போதனா தர வைத்தியசாலை யாழ்ப்பாணத்திலுள்ளது மட்டுமே. உயிர் காக்கும் புனிதப் பணியில் கடந்த காலங்களில் தியாகங்களுடன் பணியாற்றியது இந்த வைத்தியசாலை. இந்திய இராணுவம் புகுந்து சுட்டபோதும் கூரைகளில் குண்டுகள் வீழ்ந்து வெடித்தபோதும் இங்கே பணியாற்றிய மருத்துவர்களும் ஏனைய ஊழியர்களும் தளராது தமது பணி தொடர்ந்திருக்கிறார்கள்.

போர்க் காலங்களில் இரத்த வெள்ளத்தில் வந்த எண்ணுக்கணக்கற்றவர்களின் உயிர்களைக் காப்பாற்றியதும் இதே வைத்தியசாலைதான். போரின் பின்னரும்கூட அதன் பணிகளைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. எதிர்காலத்திலும் அதன் தேவை அளவிடக்கரியதுதான்.

இருப்பினும் போரின் பின்னர் சமூகத்தின் ஏனைய பகுதிகளைத் தாக்கிய சீரழிவுகள் போதனா வைத்தியசாலை என்கிற பெரு நிறுவனத்தையும் ஆட்டங்காண வைத்திருப்பது கவலையை ஏற்படுத்துகிறது.

உயிர் காக்கும் அற்புதக் கலையை ஆற்றும் இந்த நிறுவனத்தின் தற்போதைய நிலை ஏற்புடையதல்ல என்பது சமூகத்தின் பெரும்பாலானவர்களின் கருத்து. அதற்காக அந்த நிறுவனம் முழுமையாக முறைகேடுகளில் மூழ்கிப் போய்விட்டது என்று அர்த்தமல்ல. மாணவர் தேர்ச்சி அறிக்கையில் கூறப்படுவது போன்று ''முன்னேற இடமுண்டு'' என்று மட்டுமே சொல்ல முடியும். ஆனாலும் பெருமையும் தியாகமும் அர்ப்பணிப்பும் கொண்ட ஒரு நிறுவனத்தில் அந்த நிலைமைகூட வேண்டாமே. எல்லோருமாகச் சேர்ந்து அதனை மீண்டும் கௌரவத்துடன் தலைநிமிரச் செய்வதே இன்றைய தேவை.


### தென்னாசியாவில் உருவாகும்

# ஹிட்லரிஸம்

■ புலோலி ஜெயம்

● ஒரு கோடியே 20 லட்சம் யூத இனத்தவர்களைக் கொன்றுகுவித்த கொடுங்கோலர் ஹிட்லரின் ஆட்சியை விஞ்சும் வகையில் இலங்கையில் ஜனநாயகப் படுகொலைகள் அரங்கேறுகின்றன.

● சட்டவிரோதப் படுகொலைகள், வெள்ளைவான் கடத்தல்கள், ஊடகவியலாளர்கள் கொலைகள் - தாக்குதல்கள் எனப்ம பல வடிவங்களில் - கோணங்களில் இன அழிப்புப் போரை முன்னெடுத்து வருகிறது ராஜபக்ஷ அரசு.



"ஜேர்மனியில் ஹிட்லர் நடத்திய ஆட்சியை விஞ்சும் அளவுக்கு இலங்கை அரசு செயற்பட்டு வருகிறது'' என்று அண்மையில் பொது எதிரணிக்கட்சிகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

உண்மையிலேயே ராஜபக்ஷவின் ஆட்சி ஹிட்லரின் ஆட்சியை விஞ்சும் வகையிலேயே அமைந்துள்ளது என்பதற்கு பல ஆதாரங்கள் இருக்கின்றன.

யாருமே எதிர்க்கருத்துச் சொல்ல முடியாத அளவுக்கு தமிழர் தாயகம் முழுவதும் இன்று இராணுவ மயமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய நேரத்தில் தமிழர்களின் நிலங்களை ஏப்பம் விடும் முன்முயற்சிகளில் இராணுவம் வரிந்து கட்டிச் செயற்படுகிறது.

எனவே, ஹிட்லரின் இராணுவ ஆட்சிக்கு ஒப்பானதொரு ஆட்சியே இலங்கையில் நடைபெற்று வருகிறது. ராஜபக்ஷ குடும்பத்தின் ஆதிக்கம் இலங்கையை இன்று ஆட்டிப்படைத்து வருகிறது என சர்வதேச மனித உரிமை அமைப்புகளே குற்றம்சாட்டுகின்றன.

சுமார் ஒரு கோடியே 20 இலட்சம் யூத இனத்தவர்களைக் கொன்றுகுவித்த கொடுங்கோலர் ஹிட்லரின் ஆட்சியை விஞ்சும் வகையில் இலங்கையில் தற்போது ஜனநாயகப் படுகொலைகள் அரங்கேறுகின்றன.

அதாவது, சட்டவிரோதப் படுகொலைகள், வெள்ளைவான் கடத்தல்கள், ஊடகவியலாளர்கள் கொலைகள் - தாக்குதல்கள், தமிழரின் நில ஆக்கிரமிப்புகள், தமிழரின் வரலாற்றுச் சின்ன அழிப்புகள், இந்துக் கோவில்களில் புத்தர் சிலைகளை நிறுவுதல், பள்ளிவாசல்களை அகற்றுதல் என பல வடிவங்களில் - கோணங்களில் இன அழிப்புப் போரை முன்னெடுத்து வருகிறது ராஜபக்ஷ அரசு.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகி ஆட்சியைக் கைப்பற்றியவுடன் சகல அதிகாரங்களையும் தனது குடும்ப ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்.

தனது சகோதரர்களையும், மகன்மாரையும், நெருங்கிய உறவினர்களையும் முக்கிய பதவிகளில் அமர்த்தினார்.

அத்துடன், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 16 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பிரித்தெடுத்து அந்தக் கட்சியின் பலத்தைச் சின்னாபின்னமாக்கினார். பின்னர் விமல் வீரவன்ஸவை விலைபேசி ஜே.வி.பியையும் உடைத்தார். இதனால் தனது ஆட்சிக்கு இருந்த அச்சுறுத்தல்களை அடியோடு தகர்த்தெறிந்தார் மஹிந்த.

தமக்கு எதிராகக் குரல் கொடுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரை ஒட்டுக் குழுக்களின் உதவியுடன் போட்டுத்தள்ளியது இந்த அரசு.

பின்னர் ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை அடியோடு அழிக்கும் நடவடிக்கையில் மூர்க்கத்தனமாக ஈடுபட்டு அதிலும் வெற்றி கண்டார் மஹிந்த.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகில் எந்த இடத்திலுமே நடைபெற்றிராத மிகப்பெரிய தமிழினப் படுகொலையை நிகழ்த்தினார் ராஜபக்ஷ.

தனது படைகளை ஏவி விட்டு லட்சக்கணக்கான தமிழ் மக்களை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தார். புலிகளுக்கு எதிரான போர் எனக் கூறி - உலக நாடுகளின் கண்களில் மண்ணைத் தூவி ஒரு தமிழின அழிப்பையே அரங்கேற்றி முடித்தார் மஹிந்தர். இராணுவத்தினருக்கு சகல அதிகாரங்களையும் வழங்கினார். அவர்கள் எது வேண்டுமானலும் செய்யலாம் என்ற உரிமையை வழங்கினார்.

இதன் மூலம் ஹிட்லரின் இடத்தைப் பிடித்துக்கொள்வதற்கு பிள்ளையார்சுழி போட்டார் மஹிந்தர்.

இதன் ஒரு கட்டமாக இறுதிப் போரில் இராணுவத்தினர் ஐ.நா. சாசனத்தின் சட்டதிட்டங்களை மீறி வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்தவர்களையும் சுட்டுக்கொன்றனர்.

இறுதிக்கட்டப்போரில் இறந்த பெண்களின் உடல்களைக்கூட நிர்வாணமாக்கி பிணந்தின்னிகள்போல் - மிருகத்தனமாக வெறியாட்டம் ஆடியது இராணுவம். அதன் மூலம் மனித குலத்திற்கே அவமானத்தை ஏற்படுத்தியது இலங்கை இராணுவம்.

எனினும், சர்வதேச நாடுகளும் இந்தக் கொடுமைகளை அன்று தட்டிக் கேட்க முன்வரவில்லை. மேலும் தமிழர்களுக்கு எதிரான போருக்கு ஆயுத உதவி உட்பட அனைத்து உதவிகளையும் வாரி வழங்கின. இலங்கையின் ஹிட்லரிஸத்தை தட்டிக்கேட்கத் தயங்கின.

மேலும் தமிழர்களின் வரலாற்றுச் சான்றுகளை அழித்து - எஞ்சியுள்ள தமிழர்களின் தனித்துவத்தையும் சிதைக்கும் கீழ்த்தரமான செயலில் இறங்கியுள்ளது மஹிந்த அரசு.

ஹிட்லரின் பாணியில், சர்வாதிகாரத்தை நிலைநாட்டும் வகையில் ஜனாதிபதி மஹிந்த சில சட்டதிருத்தங்களையும் தனக்குச் சாதகமாக்கினார்.

ஜனாதிபதித் தேர்தலில் இரு முறைக்கு மேல் போட்டியிட முடியாது என்று இருந்த சட்டத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டு அவர் மாற்றியமைத்தார்.

அதாவது 17 திருத்தச்சட்டத்தை இரத்துச் செய்து 18 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி சர்வாதிகாரத்தை சட்டமாக்கினார்.

அதன் மூலம் ஜனநாயகத்துக்கு சாவுமணி அடித்து சர்வாதிகாரப் பாதையில் பயணிக்க ஆரம்பித்தார்.

இந்த சர்வாதிகாரப் பாதையில் யார் தடையேற்படுத்த முனைந்தாலும் அவர்களை ஒழித்துக் கட்டும் நடவடிக்கையில் மும்முரமாகச் செயற்பட்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவை எதிர்த்து நின்ற ஒரே காரணத்துக்காக சரத் பொன்சேகாவை ராஜபக்ஷ குடும்பம் சிறையில் தள்ளியது.

அதுபோல் நாட்டில் ஜனநாயக வரம்புக்குட்பட்டு செயற்படும் எந்தக் கட்சிகளையும், அமைப்புக்களையும் ராஜபக்ஷ விட்டு வைக்கவில்லை.

இந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும்கூட மஹிந்த அரசு அதற்குக் கட்டுப்படமாட்டோம் என அறிவித்தது.

மேலும், சர்வதேச நாடுகளின் வற்புறுத்தல்களை மஹிந்த அரசு காதில் போட்டுக்கொள்ளாது சர்வாதிகாரப் போக்கில் நடந்து வருகிறது.

ஐ.நா. சபைக்கே சவால் விடுக்கும் வகையில் அது செயற்படுகிறது.

ஜெனிவாத் தீர்மானத்தின்படி தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் தாம் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளைக்கூட நடைமுறைப்படுத்த முடியாது என்று முரண்டு பிடிக்கிறது அரசு.

எனவே, இலங்கை அரசின் இந்தப் போக்கை ஹிட்லரிசம் என்று சொல்லாமல் எப்படிச் சொல்வது என்ற கேள்வி தற்போது அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலருமான கோத்தாபய ராஜபக்ஷ வடக்கு, தமிழருக்கு மட்டும் சொந்தமானதல்ல என்று தெரிவித்திருந்தார்.

இந்த நாட்டில் யாரும் எந்தப் பகுதிக்கும் சென்று வாழமுடியும். அப்படியிருக்கும்போது வடக்கு எப்படி தமிழர்களுக்கு மட்டும் சொந்தமாகும் என்று கேள்வியெழுப்பியிருந்தார். அதன்மூலம் தனது இன வெறியைப் பகிரங்கமாக உலகிற்கு எடுத்துக்காட்டினார் கோத்தபாய.

தமிழர்களின் அசைக்கமுடியாத பலமாகத் திகழ்ந்த புலிகள் இயக்கத்தை ஒழித்து விட்டோம் என்ற திமிரில் இலங்கையிலிருந்தே தமிழர்களை விரட்டியடிப்பதற்கு அவர் திட்டமிடுகிறார்.


ஒட்டுமொத்தமாக தமிழினத்தை இல்லாமல் செய்து விட வேண்டும் என்ற முனைப்பிலேயே ராஜபக்ஷ அரசு செயற்படுகிறது.

இன்று வடக்கில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள தமிழர்களின் காணிகளை சுவீகரிக்கும் முயற்சியில் வடமாகாண ஆளுநர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை விழுங்கி விடுவதற்கான முன்முயற்சிகளை இலங்கை இராணுவம் எடுத்து வருகிறது. நாட்டில் தற்போது எங்கு பார்த்தாலும் இராணுவ மயமே தீவிரமடைந்து வருகிறது. இருந்தாலும் இலங்கையின் இந்த ஹிட்லரிசத்தை இந்தியா, சீனா, அமெரிக்கா உள்பட உலக நாடுகள் கண்டிக்கத் தயங்குகின்றன.

# ஆயுள்வேதத்தின் ஆயுள் பற்றிய உரையாடல்

■ சோபனா



மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான மருத்துவம் பல்வேறு வழிகளில் நிறைவேற்றப்பட்டாலும் ''பாட்டி வைத்தியம்'' எனப் பெயர் பெற்ற ஆயுள்வேத வைத்தியம் பொதுமக்கள் மத்தியில் இன்றும் நிலைபெற்று இருப்பதற்கு ஆயுள்வேத மருத்துவர்களின் சேவையே முக்கிய காரணம். இந்த ஆயுள்வேத வைத்தியம் எமது முன்னோர்களின் வழித் தோன்றலில் உருவாகி தமிழ் வைத்தியம் எனும் தனித்துவத்துடன் மக்கள் மத்தியில் பேணப்படுகின்றது. வடமாகாணத்தில் ஆயுள்வேத வைத்தியத்தின் தற்போதைய நிலைப்பாடு, எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகவும் வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களப் பணிப்பாளர் திருமதி.சியாமா துரைரட்ணம் உதயனுடன் கலந்துரையாடினார். அதன் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.

**ஆயுள்வேத வைத்திய வளர்ச்சிக்கு அரசின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது?**

வடமாகாண ஆயுள்வேத வைத்தியத்தின் அபிவிருத்திக்கு அதிகளவு தேவைகள் உள்ளன. வருடத்துக்கு 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு மட்டுமே ஆயுள்வேத வைத்திய அமைச்சினால் வழங்கப்பட்டு வருகின்றது. உடனடியாக தரமான வைத்திய சேவையை வழங்கமுடியாத சூழலில் உள்ள போதும், அதனைப் படிப்படியாக முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை எமது திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. வருடாந்த நிதி ஒதுக்கீடுகளை வைத்துக் கொண்டு சகல வைத்தியசாலைகளினதும் உள்கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

**யாழ்.மாவட்டம், ஆயுள்வேத வைத்தியத்தில் கொண்டிருக்கும் நிலை என்ன?**

போர்ச்சூழல் காரணமாக யாழ்.மாவட்டத்தில் ஆயுள்வேத வைத்தியத்தில் பின்னடைவு ஏற்பட்டது. வைத்தியர்கள் தமது கையேடுகள், மருந்துகள், மூலிகைத் தோட்டம் போன்றவற்றை இழக்க நேரிட்டது. எனினும் தற்போது மீளவும் யாழ்.மாவட்ட ஆயுள்வேத வைத்தியர்கள் சிறப்பான சேவையை வழங்கி வருகிறார்கள். 70 க்கும் மேற்பட்ட ஆயுள்வேத வைத்தியசாலைகள் அரச வைத்தியசாலைகளாகவும், உள்ளூராட்சி மாகாண சபைகளுக்கு கீழ் இயங்கி வருகின்றன. போர்ச் சூழலின் போது அழிவடைந்த வைத்தியசாலைகள் தற்காலிகமாக சேவைகளை வழங்கி வருகின்றன.

ஏனைய மாவட்டங்களைவிட யாழ்.மாவட்டம் ஆயுள்வேத வைத்தியத்தில் முன்னணி சேவையை வழங்கி வருகின்றது என்றே கூறமுடியும். வைத்தியசாலைகள் போதுமானதாக இருந்தாலும் அவற்றுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் அதிகளவு நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது.

**ஆயுள்வேத வைத்தியத்தில் மக்களின் ஈடுபாடு எவ்வாறு உள்ளது?**

மேலைத்தேய வைத்தியம் உடனடித் தீர்வைத்தரும் எனும் நோக்குடனும் அவசரமான உலகுக்கு ஏற்றாற்போல் அதிகளவானவர்கள் மேலைத்தேய வைத்தியத்தை நாடினாலும், பரம்பரை வைத்தியம் எனப் போற்றப்படும் ஆயுள்வேத வைத்தியத்தை மக்கள் நாடாமல் இல்லை. முக்கியமாக ஆஸ்மா, தோல்வியாதி, மூட்டுவியாதி, அழகுசார்ந்த நோய்கள், விசக்கடி போன்றவற்றுக்கு அதிகளவான மக்கள் ஆயுள்வேத வைத்தியத்தையே நாடுகின்றனர்.

ஆயுள்வேத வைத்தியம் நாள்பட குணமாக்கும் சக்தியைக் கொண்டாலும் முற்றுமுழுதாக குணமடையச் செய்யும் எனும் நம்பிக்கை மக்கள் மத்தியில் உள்ளது. முக்கியமாக தொற்றா நோய்களுக்கு ஆயுள்வேத வைத்தியத்தையே மக்கள் நாடிவருகின்றனர்.

**ஆயுள்வேத மருத்துவர்களின் சேவை திருப்திகரமானதா?**

பிரதேச ரீதியாக பரம்பரை பரம்பரையாக வைத்தியம் செய்ய ஆயுள்வேத மருத்துவர்கள் இன்றும் உள்ளனர். கற்றுத் தேர்ந்த நிபுணத்துவம் உடைய அங்கீகரிக்கப்பட்டவர்களாக பொதுமக்களுக்கு சேவையை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பரம்பரை மருத்துவர்களை விடவும் அரசினால் பயிற்றப்பட்ட மருத்துவர்களும் சேவையை வழங்கி வருகிறார்கள்.

**ஆயுர்வேத மருத்துவர்களுக்கு எப்படி பயிற்சி வழங்கப்படுகிறது?**

ஆயுர்வேத வைத்தியர்களுக்கு சிங்கள மொழி மூலம் பயிற்சி வழங்கப்படுவது தமிழ் மருத்துவர்களுக்கு இடர்பாடாக உள்ளது. எனவே தமிழ் மொழி மூலம் பயிற்சிகளை வழங்கும் போது நிபுணத்துவம் வாய்ந்த ஆயுள்வேத மருத்துவர்களை வடமாகாணத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஆயுள்வேத வைத்தியத்தில் மூலிகை வகிக்கும் பங்கு?**

ஆயுள்வேத வைத்தியத்துக்கு ஆணிவேரைப் போன்று மூலிகைகள் உள்ளன. தற்போது பரம்பரை மருத்துவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்த மூலிகைகள் இன்றும் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் தனிப்பட்ட ரீதியாக ஆயுள்வேத மருத்துவர்கள் பலர் மூலிகைத் தோட்டங்களை அமைத்துள்ளனர். திருநெல்வேலி, அராலி, நவகிரி போன்ற இடங்களில் மூலிகைத் தோட்டம் உள்ளது. இதனைவிட விவசாயிகள் மத்தியிலும் மூலிகைத் தோட்டங்களை அமைக்க ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் பாடசாலை ரீதியிலும் இந்தச் செயற்பாடு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

**பௌதீக வளங்கள் போதுமானவையா?**

வடமாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் 4 மருத்துவ மனைகளும், யாழ்.மாவட்டத்தில் 4 மருத்துவமனைகளும், மன்னார் மாவட்டத்தில் ஒரு மருத்துவ மனையும் நிரந்தரக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதனைவிட பண்டத்தரிப்பு, கரவெட்டி, தெல்லிப்பழை ஆகிய இடங்களில் உள்ள கிராமிய மருத்துவ மனைகள் இரண்டு நிரந்தரக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

உள்ளூராட்சி சபைகளின் கீழ் 39 மருத்துவமனைகளும், 9 மத்திய மருந்தகங்களும் இயங்கி வருகின்றன.

**மருந்து உற்பத்தி எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன?**

யாழ்ப்பாணத்தில் மட்டுமே மருந்து உற்பத்தி நடவடிக்கைகள் அச்சுவேலிப் பிரதேசத்தில் நடைபெற்று வருகின்றன. இதனைவிட சில பரம்பரை மருத்துவர்களும் மருந்து தயார் செய்கிறார்கள். மன்னார் மாவட்டத்தில் மூலிகைகள் தாராளமாகக் கிடைப்பதால் அங்கும் சிலர் மருந்து உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்கள்.

**மருத்துவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் எப்படி?**

ஆயுள்வேத மருத்துவர்களுக்கான ஓய்வூதியத்திட்டம், விருதுகள் வழங்கப்படல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அத்துடன் மானிய முறையில் மருந்துகளை மருத்துவர்கள் பெறுவதற்கு மருந்துகளை விற்பனை செய்பவர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

**ஆயுள்வேத மருத்துவர்களின் நம்பகத் தன்மை குறித்து?**

ஆயுள்வேத மருத்துவர்கள் கட்டாயம் ஆயுள்வேத சபையூடாக பதிவுகள் மேற்கொண்டு ஓர் பதிவு இலக்கத்துடனே மருத்துவ சேவையை வழங்கமுடியும். பொதுமக்கள் ஆயுள்வேத வைத்தியம் பெறும் போது அவற்றை அவதானிக்க வேண்டும்.

அத்துடன் மருத்துவர்கள் பலர் அறியப்பட்டவர்களாக இருப்பதால் பொதுமக்கள் பாதுகாப்பாக மருத்துவ சேவையைப் பெறமுடியும்.

**இந்தத் துறையின் அபிவிருத்தி எப்படி நடக்கிறது?**

இதன் அபிவிருத்திக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு கட்டாயம் தேவை. அத்துடன் திணைக்களமும் இணைந்து வடமாகாணத்தில் ஆயுள்வேத அபிவிருத்தியை உயர்வடைய சேவையை வழங்கும்.

# சமூக வன்மத்தின் வெளிப்பாடாகும் பகிடிவதை

மருத்துவர்
■ சி.யமுனானந்தா

அண்மையில் வெளியான தென்பகுதி பல்கலைக்கழகப் பகிடிவதைக் காணொலி இலங்கைக் கல்வி வட்டாரத்தில் அதிர்ச்சியினை ஏற்படுத்தி உள்ளது. அந்தக் காணொலியில் உள்ள காட்சிகள் இராணுவ சித்திரவதைகள் போல் உள்ளன.

இலங்கையில் தமிழருக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டபோது, தமிழ் இளைஞர், யுவதிகள் இலங்கை இராணுவத்தாலும், இந்திய இராணுவத்தாலும், கிழக்கிலங்கையில் எஸ்.ரீ.எவ்வினாலும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். அவ்வாறே சிங்கள இளைஞர்களும் 1989இல் ஜே.வி.பிக்கு எதிரான கிளர்ச்சி அடக்கலில் சித்திரவதைக்கு உள்ளாகினர்.

இவ்வாறு சமூகத்தில் சித்திரவதைக்கு உள்பட்டச் சாட்சிகளான இளைஞர், யுவதிகள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டு கல்வி கற்கும்போது, தாம் அனுபவித்த துன்பங்களை, நனவிலி நிலையில் புதுமுக மாணவரும் அனுபவிக்கும் வகையில் பகிடிவதை என்ற பெயரால் துன்புறுத்துகின்றனர். இதில் ''மற்றவன் எதனை உனக்குச் செய்யக்கூடாதென நீ விரும்புகிறாயோ அதை நீயும் மற்றவனுக்குசெய்தல் கூடாது'' என்ற பழமொழியினை நாம் மனதில் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறாகவே அண்மைய காணொலியில் உள்ள இராணுவ ரீதியிலான பகிடிவதையும், முள்ளிவாய்க்காலில் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட சித்திரவதையும், கொலையும் ஒரே தன்மையதே. இது துன்புறுத்தலும் குணாம்சப்பிறழ்வு (Sadistic Personality Disorder) நோய் நிலையுமாகும். முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற வன்கொடூரங்களை இலங்கை அரசு மறுத்தாலும், இலங்கைச் சமூகத்தில் இதன் வெளிப்பாடு சந்ததி சந்ததியாக தொடரப் போகிறது என்பதற்கான ஆதாரமே இந்தப் பல்கலைக்கழக 'புத்திஜீவிகளின்' பகிடிவதைக் காணொலியாகும்.

இலங்கை இராணுவத்திலும், அதிகாரிகள் தரத்தில், பல்கலைக் கழகப் பட்டதாரிகள் உள்ளனர். இவர்களின் வெளிப்பாடே சனல் -4 காணொலிகள். எனவே சமூக வன்மம் குறிப்பாக முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தவை மறைக்கப்பட்டாலும், இலங்கையின் உயர் கல்வி நிலையங்களில் மனிதநேய செயற்றிட்டங்கள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். வெறுமனே போர்க் கொண்டாட்டங்களும், பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகளும் இராணுவ வக்கிர சிந்தனையையே சமூகத்தில் தோற்றுவிக்கும். மாறாக உளவளப் பயிற்சி சார்ந்த வழிமுறைகளையே நாம் இளைஞர்களுக்கு அளித்தல் வேண்டும். அடுத்து இதே வன்முறைத் தாக்கம் இவர்களது குடும்பங்களிலும் வெளிப்படும்.



**இலங்கை இராணுவத்திலும் அதிகாரிகள் தரத்தில் பல்கலைக்கழக பட்டதாரிகள் உள்ளனர். இவர்களின் வெளிப்பாடே சனல் 4 காணொலிகள்.**

எனவே பகிடிவதையினை இல்லாது செய்ய, இது தொடர்பான உளவள சிகிச்சை முக்கியமானது. இதில் முக்கியமான மந்தை நடத்தை, (Herd Behavior) அதாவது குழுவாக இருக்கும் போது சில நடத்தைகளைப்புரிவர். தனியாக உள்ளபோது அவ்வாறு நடக்கமாட்டார்கள்.

வெறுமனே சட்டத்தினால் பகிடிவதையினைக் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் 30 வருடங்களாக நாட்டில் நடைபெற்ற சித்திரவதைகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் எமது இளம் சந்ததியில் படிந்து உள்ளன. அதனை அவர்கள் தம்மிலும் நலிவடைந்தவர்கள் மீது பிரயோகித்துக்கொண்டே இருப்பர். இதில் பல்கலைக்கழகப் புதுமுக மாணவர்கள் மட்டுமல்லர் இராணுவ அடக்குமுறையில் வாழும்சிறுபான்மை மக்களும் கூடப் பாதிக்கப்படுகின்றனர். எனவே மனிதநேய விழுமியங்களைச் சரியானமுறையில் நடைமுறைப்படுத்தல் மிகவும் இன்றி அமையாதது.

# பழங்களின் பயன்கள்

கம்பராமாயணத்தில் சாப்பாடைப் பற்றி ஓர் அழகான பாடல் வருகிறது. ''முந்து முக்கனியின் நானா முதிரையின் ஒழுத்த நெய்யின்'' என்று அந்தப் பாடல் ஆரம்பமாகும். அயோத்தியில் மக்கள் என்ன என்ன சாப்பிட்டார்கள். எப்படியெல்லாம் சாப்பிட்டார்கள் என்பது பற்றி அதில் அற்புதமாகப் புனைந்துள்ளார் கம்பர்.

மா,பலா,வாழை போன்ற முக்கனிகளையும் அவர்கள் சாப்பிட்டார்கள் என்று அந்தப் பாடல் கூறுகிறது. உணவுப் பழக்கத்தில் பழங்கள் மிக முக்கியத்துவம் நிறைந்தவை என்பதற்கு இதனை ஒரு சான்றாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

பைபிளில் இருந்துகூட இதற்கான ஓர் ஆதாரத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் எல்லோரும் கேள்விப்பட்ட கதைதான் இது. ஏதேன் தோட்டத்தில் ஆதாமும், ஏவாளும் இருந்தபோது, இறைவன் அவர்களுக்கு ஒரு கட்டளை பிறப்பிக்கிறார். அவர் ஒரு கனியைச் சுட்டிக்காட்டி அந்தக் கனியைத் தவிர வேறு எதை வேண்டுமானாலும் நீங்கள் உண்ணலாம். அது விலக்கப்பட்ட கனி, அதை மட்டும் சாப்பிடாதீர்கள் என்று சொல்கிறார். இதன்மூலம் மனிதன் தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கியபோதே, கனிகளை உண்பவனாக இருந்தான் என்பது தெரியவருகிறது.

நம்மவர்கள் பழங்களை எப்படிச் சாப்பிடுகிறார்கள்? சாம்பார், ரசம், மோர் என்று வயிறுமுட்ட முட்டச் சாப்பிட்டுவிட்டு, இரண்டு வாழைப்பழங்களையும் கஷ்டப்பட்டு உள்ளே திணித்து விடுவார்கள். இப்படிச் செய்பவர்களின் கதி அதோ கதிதான்.

பழங்களை எப்படிச் சாப்பிடவேண்டும், எப்போது சாப்பிட வேண்டும். அவரவர் உடலுக்கேற்ப எந்த மாதிரியான பழங்களைச் சாப்பிடவேண்டும் என்பதற்கெல்லாம், ஒரு வரைமுறை இருக்கிறது. நீங்கள் இயற்கை மருத்துவரிடம் சென்றால் ''முதலில் பழங்களைச் சாப்பிட்டுவிட்டு அதன்பின் உணவு சாப்பிடுங்கள்'' என்றுதான் சொல்வார். இப்படிச் சொல்வதற்கு என்ன காரணம்? சாப்பாட்டின் அளவைக் குறைக்கவேண்டும் என்பதுதான்.

இதைப் பற்றி விஞ்ஞானம் என்ன சொல்கிறது? பழங்களை ஜீரணிப்பதற்குக் குடல் எடுத்துக்கொள்ளும் முயற்சி மிகவும் குறைவு. உணவுப்பொருளைக் குடல் எப்படி ஜீரணிக்கிறது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதாவது, உடலுக்கு உள்ளே வரும் உணவுப் பொருளின் மீது ஒருவித அமிலத்தைக் குடல் பாய்ச்சுகின்றது. அமிலத்தால் பாய்ச்சப்பட்ட உணவுப்பொருள், கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து, நொதிப்பொருளாகி விடுகின்றது. அதனால்தான் பழ உணவு மிகச் சிறந்த உணவாகக் கருதப்படுகிறது.


நாம் வழக்கமாகச் செய்கிற தவறு இதுதான். சாப்பாடு, இறைச்சி, இவற்றையெல்லாம் ஒரு வெட்டுவெட்டி அதன்பின் இலவச இணைப்பாகப் பழங்களையும் சாப்பிடுகிறோம். அமிலச் சுரப்பே தேவையில்லாத பழங்கள் மிக நீண்ட நேரம் குடலில் சுற்றிக் கொண்டே இருக்கின்றன. நீங்கள் வெறும் கனிகளை மட்டுமே சாப்பிட்டால் ஒரு மணி நேரத்திலேயே அந்தத் தொழிற்பாடு முடிந்துவிடும். நீங்கள் சாப்பிட்ட உணவு செரிமானம் ஆவதற்கான செயற்பாட்டு நேரம் இரண்டரை மணி நேரம் . இரண்டையும் நன்றாகச் சாப்பிடும்போது ஏற்படும் பிரச்சினை இதுதான். இரண்டரை மணி நேரம் தொழிற்பாடு செய்யப்பட வேண்டிய கடின உணவும், அரைமணி நேரத்தில் தொழிற்பாடு முடிந்துபோகிற பழங்களும் சேர்ந்து உள்ளே போகும் போது, ஒன்று அவை விரைவாக வெளியில் தள்ளப்படும் அல்லது அதுவெளியே வருவதற்கு மிக நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளும்.

உணவோடு பழத்தைச் சேர்த்துச் சாப்பிடுவது ஆரோக்கியத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, சிக்கலைத்தான் ஏற்படுத்துகிறது. எனவே பழங்களைச் சாப்பிடும்போது அவற்றைச் சாப்பாட்டுக்குப் பதிலாகச் சாப்பிடவேண்டுமே தவிர சாப்பாட்டுக்குப் பின் கூடுதலாகச் சாப் பிடக்கூடாது. அல்லது இரண்டு உணவு வேளைகளுக்கான இடை வேளை கூடும்போது சரிக்கட்டும் உணவாகப் பழங்களை உண்ணலாம்.

இயற்கை உணவு மருத்துவத்தில் 'பழநாள்' என்கிற ஒரு விடயத்தை வலியுறுத்துகிறார்கள். அதாவது ஒருநாள் முழுவதும் பழங்களை மட்டுமே சாப்பிடுவது. பழங்களைத் தவிர வேறு எந்த வகையான உணவுகளையும் எடுத்துக்கொள்ளக் கூடாது. இப்படிப் பழங்களை மட்டுமே சாப்பிடுவதன் மூலமாகக் குடலிலே இருக்கிற சகல தீய பொருள்களும் வெளியே வந்துவிடும். இரத்தத்தில் இருக்கிற நச்சுக்கள் சுத்தமாகிவிடும்.

பழநாள் என்று நாம் ஒதுக்குகிற அந்தக் குறிப்பிட்ட நாளில் அன்னாசிப் பழம், மாம்பழம், , வாழைப்பழம், அப்பிள் இப்படிப்பட்ட பழங்களைச் சாப்பிடுவதால் உடலுக்கு ஆரோக்கியம் கிடைப்பதோடு குடலுக்கும் ஓய்வு கிடைக்கிறது. அன்று ஒரு நாள் குடலுக்கு விடுமுறை அளித்தது போன்றும் இருக்கும்.

எனவே பழங்களை மட்டுமே ஒருநாள் முழுவதும் சாப்பிடுவது என்கிற உத்தமமான ஒரு வழக்கத்தை மாதந்தோறும் பின்பற்ற முயற்சி செய்யுங்கள். பழங்களைச் சாப்பிடுகின்ற விலங்கினங்கள் எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கின்றன என்பதை எண்ணிப் பாருங்கள். அதன்பின் இதை முடிவு செய்யுங்கள்.



மலச் சிக்கலற்ற பறவைகளின் சுறுசுறுப்பைக் கவனியுங்கள். பழங் களே பறவைகளின் ஆரோக்கிய இரக சியம். அதிகம் பழுத்த நிலைகுலைந்த பழங்களைத் தவிர்த்து அளவாகப் பழுத்த பழங்களைத் தேடி உண்டு பாருங்கள். கண்ணுக்குத் தெரியாத சிறகுகள் உங்களுக்கும் முளைக்கும். உங்கள் மனமே வானத்தில் பறக்கும்.

சுகி.சிவம்

# கோடி புதுமைக்கு நாயகரான பாஷையூர் புனித அந்தோனியார்



எஸ்.யேசுதாஸ்

ஒவ்வொரு கிராமங்கள், நகரங்களின் தோற்றுகையின் போதும் அந்தப் பகுதிகளில் செறிவாக வாழும் மக்களின் ஆன்மிக வழிபாட்டுத் தேவைகளை நிறைவுசெய்ய தாம் சார்ந்து நிற்கும் மதம் சார்ந்த தெய்வங்களுக்கு கோயில் அமைத்து பூஜித்து வணங்குவது மனித இனத்தின் மரபாகும்.

'கோயிலில்லா ஊரில்குடியிருக்கவேண்டாம்' 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' போன்ற மூதுரைகள் தமிழ் மக்கள் மத்தியில் வணக்கஸ் தலங்கள் தொடர்பான அடிப்படைக் கருத்தை வலியுறுத்துகின்றன. இதற்கமைய நீக்கமற நிறைந்திருக்கும் கடவுளுக்கு பிரத்தியேகமான இடத்தைப் பிரதிட்டை பண்ணி அங்கே இறைவன் உறைந்திருக்கிறான் என்ற அன்புணர்வால் உந்தப்பட்டு வழிபட்டு விழா எடுக்கிறான்.

ஆலயம் என்பது மனிதனுக்கேயன்றி கடவுளுக்குத் தேவையில்லை, ஆயினும் படைப்புக்களாகிய நாம் ஒன்று சேர்ந்து காற்று, மழை, குளிர், பனி, வெயில் போன்ற இயற்கைகளில் இருந்து பாதுகாப்புப் பெற்று கூட்டு வழிபாடு நடத்தி இறை விழுமியங்களின்படி வாழ, பக்குவமடைய ஆலயங்கள் மனிதனுக்கு உதவுகின்றன.

புனிதமான இறைவன் உறையும் இடத்தை தூய்மையுடன் பொன்னும், மணியும் கொண்டு அலங்கரித்து மனிதன் மண்ணில் தோன்றிய காலம் முதல் இன்றுவரை தான் கடவுள் என்று நம்புகிற ஒன்றின் புனித உருவத்தை வைத்து அழகிய கட்டடங்கள் அமைத்து வழிபட்டு வருகின்றான்.

இந்த வகையில் வட பகுதியில் கத்தோலிக்க மக்களுக்கென அமைக்கப்பட்ட ஆலயங்களில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் பல மத மக்களையும் கவர்ந்திருக்கும் சிறப்பு மிகு பதியாகத் திகழ்கிறது.

யாழ்.கடல் நீர் ஏரிக்கரையிலே யாழ்.நகரின் தென்கிழக்கு திசையில் கடல் வளமும், கலை வளமும், கல்வித்துறையும், விளையாட்டுத் துறையும் சிறந்தோங்கும் பாஷையூர் (பா-செய்-ஊர்.மருவி பாஷையூரானது என்றும் கூறப்படுகிறது) கிராமத்தின் அழகையும், எழிலையும் பிரதி பலிக்கும் நடு நாயகமாக புனித அந்தோனியார் ஆலயம் பல நூற்றாண்டுகளாக விளங்குகின்றது.

புனித அந்தோனியாரிடம் பல இனத்தவரும், பல்வேறு மதத்தவரும் அண்டிவந்து வேண்டுதல் புரிந்து பல வரங்களைப் பெற்றுச் செல்கின்றனர். இந்தப் புனிதர் இயேசுவின் மீது அசையாத நம்பிக்கை கொண்டவராகவும் நெருங்கிய உறவைப் பேணுபவராகவும் செயற்பட்டதுடன் மறை அறிவிப்பில் வல்லுனராக போதனை செய்ததுடன் அதை வாழ்விலும் கடைப்பிடித்தார். இதனால் வாழும் போதே பல்லாயிரம் புதுமைகள் புரிந்து இறை மகிமையை வெளிப்படுத்தும் கருவியாகும் வரமடைந்தார்.

கோடி அற்புதர் என பக்தர்களால் அழைக்கப்படும் புனித அந்தோனியார் போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரின் லீலி மலராக கி.பி 1195 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி பிறந்தார். உலகியலை வெறுத்த அவர் பிறர்நலனும் திருமறையும் இரு கண்ணெனப் போற்றி தனது 15 ஆவது வயதில் அகஸ்தீனார் துறவற சபையில் இணைந்து துறவறக் கல்வியைக் கற்றார்.

அந்தக்காலத்தில் கொள்கைப் பற்றுடன் பொதுநல தியாகச் செயல்களில் ஈடுபட்டு வந்த பிரான்சிஸ்கன் சபையின் செயற்பாடுகளால் கவரப்பட்டு 1221 இல் அந்தச் சபையில் இணைந்து குருவானார். படிப்பிலும், ஞானத்திலும், இறை அருளிலும், சிறந்தோங்கி முற்போக்கு சிந்தனையுடையவராக இருந்த போதிலும் தன்னை வெளிப்படுத்தாது அடக்கத்துடன் குருமனையில் உள்ளகப் பணிகளை ஆற்றிவந்தார்.

ஆனால் இறைவனின் திட்டம் வேறு வகையில் அமைந்திருந்தது. குரு மடத்தின் விசேட நிகழ்வொன்றில் மறையுரை நிகழ்த்தவிருந்த முக்கிய துறவியொருவர் அங்கு சமுகம் அளிக்க முடியாது போக குருமடத் தலைவர் புனித அந்தோனியாரை பேருரை நிகழ்த்துமாற கேட்டுக் கொண்டார். அவர் தாழ்மையுடன் எவ்வளவோ மறுத்தும் முடியவில்லை. தலைமைக் குருவின் கட்டளையை மதித்து பேருரையை நிகழ்த்தினார்.

மடைதிறந்த வெள்ளம் போல் அவர் ஆற்றிய நீண்ட மறையுரையின் கருத்தாளத்தையும், புலமையையும் கண்ட அனைவரும் மலைத்துப் போயினர். அவர் வழியாக தூய ஆவியின் ஆற்றல் வெளிப்பட்டது. அன்றிலிருந்து பதுவை நகரின் மறை போதகராக செயலாற்றி மக்களுக்கு பாவ மன்னிப்பு அளித்து வறியோருக்குச் சேவையாற்றி வந்தார். பல்வேறு நாடுகளுக்கும் சென்று போதித்தார்.

இறந்தோரை உயிர்ப்பிக்கவும், காணாமல் போனவை கண்டடையவும், ஒரு பொழுதில் பல இடங்களில் தோன்றவும், அறுபட்ட கூந்தல் உடனே நீண்டு வளரவும், நற்கருணையில் இறை பிரசன்னத்தை கழுதையால் வெளிப்படுத்தியமை போன்ற பல புதுமைகளைப் புரிந்தார். குறுகிய காலத்தில் நிறை பணிபுரிந்த இவரை 1231 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி இறைவன் விண்ணகத்திற்கு அழைத்துக் கொண்டார். அன்றே அவரை மக்கள் புனிதர் என அழைக்கத் தொடங்கினர். இறந்த பின்னும் அவரது புதுமைகள் தொடர்ந்தன. அடுத்த ஆண்டிலேயே புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டு சாட்சியாக விளங்குகிறார்.

**திருமறையைத் துணிவுடன் போதித்த அந்தோனியாரின் நாக்கு, இறைவன் ஏற்று வாழ்ந்த திரு இதயம் மற்றும் சில உடற் பகுதிகள் இன்று வரை அழிவுறாமல் பதுவை நகரில் காட்சி தருகிறது. இவர் இறந்த நாளான ஜூன் 13 ஆம் திகதி உலகெங்கும் பெருவிழாவாக கொண்டாடப்படுகிறது.**


திருமறையைத் துணிவுடன் போதித்த அவரது நாக்கு, இறைவன் ஏற்று வாழ்ந்த திரு இதயம் மற்றும் சில உடற் பகுதிகள் இன்றுவரை அழிவுறாமல் பதுவை நகரில் காட்சி தருகிறது. இவர் இறந்த நாளான ஜூன் 13 ஆம் திகதி உலகெங்கும் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. இவ்வாறு மனிதனும் தெய்வமாகலாம் என்பதை தனது தூய வாழ்வால் உணர்த்திப் புனிதரான அந்தோனியார் பாஷையூரிலே கோயில் கொண்ட வரலாற்றை சற்று நோக்குவோம்.

பாணனுக்குப் பரிசாக வழங்கப்பட்ட மணற்றிடல் எனப்படும் பிரதேசத்தில் பாஷையூர்ப் பகுதியும் அடங்கியிருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

அப்போது இங்கே மக்கள் குடியிருந்த சான்றுகள் கிடைக்கவில்லை. கடற்கரை பிரதேசமானதால் காலப் போக்கில் நல்லூர், சுதுமலை வாழ்ந்த மனற்றியின் கலைஞர்களுடன் பாணன் குடும்பத்தையும் ஏலேலசிங்க மன்னன் ஒன்றிணைத்தான்.

(தொடரும்)

# வாகன விபத்தில் 20 பேர் படுகாயம்



பொகவந்தலாவை,ஜூன்12

பொகவந்தலாவை - நோர்வூட் பிரதான வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம் பெற்ற வாகன விபத்தில் 20 பேர் படுகாயமடைந்த நிலையில் பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவையிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற அரச பஸ்ஸும் ஹற்றன் பகுதியிலிருந்து பலாங்கொடை நோக்கிச் சென்ற பாரவூர்தி ஒன்றும் நேருக்கு நேர் மோதியே விபத்து இடம் பெற்றுள்ளது. இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளில் பொகவந்தலாவை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

## சரஸ்வதி சிலை விவகாரம்

# மட்டு.வின்செற் பாடசாலை அதிபருக்கு திடீர் இடமாற்றம்

மட்டக்களப்பு,ஜூன்12

மட்டக்களப்பு வின்சன்ற் உயர்தர பெண்கள் தேசிய பாடசாலையில் அண்மையில் நிறுவப்பட்டு சர்ச்சைக்கு உள்ளான சரஸ்வதி சிலையின் எதிரொலியாக குறித்த பாடசாலையில் அதிபராக கடமையாற்றுகின்ற திருமதி சுஜாதா குலேந்திரகுமார் கிழக்கு மாகாணக் கல்வி அலுவலகத்துக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பாடசாலையில் அண்மையில் நிறுவப்பட்ட சரஸ்வதி சிலையானது தவறான விடயமெனக் கூறிய மெதடிஸ்த திருச்சபை தங்களது பழைய ஒப்பந்தத்தைக் காண்பித்து சிலையை அகற்றியது.

ஆனால் மீண்டும் பாடசாலை மாணவர்களால் சிலை நிறுவப்பட்டு இதற்கெதிராக திருச்சபையால் வழக்குத் தொடரப்பட்டு சிலை வைக்கப்பட்டதனால் மாணவர்களின் பாடசாலைக் கல்விக்கு பாதிப்பு இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இவ்வாறான நிலையில் சிலை நிறுவுவதற்கு உடந்தையாகச் செயற்பட்டவர் அதிபர் எனக் கருதியதால் குறித்த அதிபருக்கு எதிராக சிலர் திரைமறைவில் செயற்பட்டுள்ளனர்.

அவர்களின் முயற்சியால் மாகாணக் கல்வி அலுவலகத்துக்கு குறித்த அதிபருக்கு திடீர் இடமாற்றத்தை கல்வி அமைச்சு வழங்கி உள்ளது.

இந்த இடமாற்றம் குறித்து மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளருக்கோ அல்லது வேறு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கோ எதுவும் தெரியாது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அதிபரின் திடீர் இடமாற்ற உத்தரவினால் பாடசாலை நிர்வாகம் அதிருப்தியான நிலையில் காணப்படுவதுடன் பாடசாலைகளில் ஏற்படுகின்ற மதரீதியான செயற்பாடுகளினால் மாணவர்களின் கல்வி பாதிப்படைகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# வாழைச்சேனை புனித திரேசாள் ஆலயத்தில் திருட்டு

வாழைச்சேனை,ஜூன்12

வாழைச்சேனை புனித திரேசாள் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை ஆலயத்துக்குள் நுழைந்த திருடர்கள், உண்டியல்களை உடைத்து பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

ஆலய ஜன்னல் வழியாக உள் நுழைந்த திருடர்கள் ஆலயத்தினுள்ளே இருந்த பெரிய இரண்டு உண்டியல்களையும் ஆலயத்துக்கு வெளியில் உள்ள பெரிய உண்டியல்களையும் உடைத்து பணத்தை திருடியுள்ளனர்.

இரண்டு மாதத்துக்கு மேலாக திறக்கப்படாமல் இருந்த உண்டியல்களில் பெருந்தொகையான பணம் இருந்திருக்கலாம் என்பதுடன் அண்மையிலேயே இந்த ஆலயத்தின் திருவிழா முடிவடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயம் பிரதான வீதியில் அமைந்துள்ளதுடன் இரவில் பொலிஸாரும் வீதி ரோந்தில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இந்த ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு காளி அம்மன் ஆலயத்தில் பல லட்சம் பெறுமதியான நகைகள் திருடப்பட்டமை தெரிந்ததே. (ச)

# ரயிலில் கொள்ளை: மூவர் கைது

கண்டி,ஜூன்12

இரகசியப் பொலிஸார் என தங்களை அறிமுகம் செய்து கொண்ட இளைஞர்கள் மூவர், கண்டி, மாத்தளை நோக்கிப் பயணிக்கும் ரயில் பயணிகளிடம் கொள்ளையில் ஈடுபட்ட நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பயணிகளிடமிருந்து பணம், கையடக்கத் தொலைபேசி போன்றவற்றை இவர்கள் கொள்ளையிட்டுள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றுக்கு அமைய குறித்த சந்தேகநபர்கள் மூவரும் விசேட பொலிஸ் குழுவொன்றினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

# அருகிவரும் கிடுகு பின்னும் கைத்தொழில்

மட்டக்களப்பு,ஜூன்12

கிழக்கு மாகாணத்தின் பிரதான கைத்தொழில்களில் ஒன்றான கிடுகு பின்னும் கைத்தொழில் அருகிவருவதால் இந்தத் தொழிலில் ஈடுபட்டுவந்த பெருமளவான மக்கள் வருமானத்தை இழந்து கஷ்டத்துக்கு முகம்கொடுத்துள்ளனர்.

கிடுகுகளைப் பின்னி குடிசைகள் அமைத்தல், வேலி அமைத்தல், கூரை மேய்தல் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. தற்போது கிடுகுகளுக்குப் பதிலாக ஓடுகளும், செங்கற்களும் பயன்படுத்தப்படுவதால் கிடுகு விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கிடுகு உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (ச)

# இரத்தோட்டையில் இரு மாடிகள் வீட்டுத் திட்டம்

இரத்தோட்டை,ஜூன்12

இரத்தோட்டை நகரம் மற்றும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளில் மக்கள் நலன் கருதி புதிதாக வீடமைப்புத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள இரத்தோட்டை பிரதேச சபை திட்டமிட்டுள்ளதாக சபையின் தலைவர் டி. டி. ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த குலவாவ பாலத்துக்கு அண்மையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது.

இரண்டு மாடி வீட்டுத் திட்டமான இந்தப் புதிய திட்டத்தில் முதலில் 25 வீடுகள் அமைக்கப்படும் என்று அவர் கூறினார். (ச)

# 8 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

தம்புள்ள,ஜூன்12

தம்புள்ளயில் 8 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் சந்தேகநபர்கள் இருவரை பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கைது செய்துள்ளனர்.

தகவல் ஒன்றை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது மேற்படி இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து 8 கிலோ கிராம் கஞ்சாவும் கைப் பற்றப்பட்டுள்ளது.

குறித்த கஞ்சாவை நான்கு லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய பேரம் பேசிக்கொண்டிருந்த நிலையில் சந்தேக நபர்களை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். (ச)

# சட்டவிரோத மின் பாவனையாளர் 118 மட்டக்களப்பில் சிக்கினர்

மட்டக்களப்பு,ஜூன்12

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமாக மின் பாவனையில் ஈடுபட்டு வந்த 118 பேர் கடந்தவாரம் முதல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வரை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வரும் மக்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் இலங்கை மின்சார சபையின் கொழும்பு தலைமையக அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதன் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு கடந்த வாரம் வருகைதந்த அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்கள், பொலிஸார் ஆகியோரின் உதவியுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்று சட்டவிரோதமாக மின் பாவனையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலையில் 42 பேரும் களுவாஞ்சிக்குடி பகுதியில் 24 பேரும், வவுணதீவில் 20 பேரும், ஆயித்தியமலை பகுதியில் 12 பேரும், வாழைச்சேனை பகுதியில் 8 பேரும், கல்குடா பகுதியில் 6 பேரும், கரடியனாறு பகுதியில் 4 பேரும், மட்டக்களப்பு பகுதியில் 2 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்கள் மட்டக்களப்பு, வாழைச்சேனை ஆகிய நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டு ஒருவருக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் கொழும்பு தலைமையக ஆய்வுப் பிரிவு பொறுப்பாளர் நிஹால் தஸநாயக்க தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை சகல பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு சட்ட விரோதமான முறையில் மின்சாரத்தைப் பெறும் மக்கள் தொகையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார். (ச-31)

# மாடுகளை சட்டவிரோதமாக ஏற்றிச்சென்ற மூவர் கைது

சட்டவிரோதமான முறையில் 12 மாடுகளை ஏற்றிச் சென்ற லொறியொன்றை பொலன்னறுவை பொலிஸார் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

குறித்த மாடுகளை லொறியில் கொண்டுசெல்வதற்கு துணைபுரிந்த இரண்டு சந்தேகநபர்கள் மற்றும் லொறியின் சாரதி ஆகியோரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலன்னறுவைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)



அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது, கல்முனை ஆகிய பிரதேசங்களில் புதிய வீதிகள் அங்குரார்ப்பண ஒரு நாள் வேலைத்திட்ட நிகழ்வுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.இந்தநிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் துல்கர் நயீம் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# விவசாய உதவியாளர் நியமனம் கிடைக்குமா?

## நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் கேள்வி

அம்பாறை,ஜூன்12

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதவிக்குத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி அம்பாறை ஹாடி தொழில்நுட்பக்கல்லூரியில் நடைபெற்றது.

இந்நியமனம் வடக்கில் கடந்த காலங்களில் வழங்கப்பட்டுள்ளது என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. ஆனால், கிழக்கு மாகாணத்துக்கான இந்த நியமனங்கள் வழங்கப்படவில்லை. ஏன் இந்தத் தாமதம் என்று நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் கேள்வி எழுப் புகின்றனர்.

நேர்முகப் பரீட்சை நடந்து சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியும் இந்த நியமனங்கள் இன்னும் வழங்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? தொழில் வாய்ப்புகளுக்காகக் காத்திருக்கும் படித்த இளைஞர்கள் மிகுந்த ஆர்வத்தோடு நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்டனர்.

> நேர்முகப்பரீட்சை நடந்து சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியும் இந்த நியமனங்கள் இன்னும் வழங்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

ஆனால், இதுவரைக்கும் அதற்கொரு முடிவு கிடைக்கவில்லை. இனியும் கால தாமதமாகாமல் நேர்முகப்பரீட்சையில் தோற்றியோரில் தகுதியானவர்களுக்கு இந்த நியமனத்தை வழங்குமாறு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நல்ல சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும். தொழில் ரீதியாக சிலருடன் போட்டி போட்டு செயற்படுவீர்கள். கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். சிலர் உங்களிடம் பணம் கடன் கேட்கலாம் அல்லது கடன் கேட்கலாம். வேலைப்பளு அதிகரிக்கும்.

**இடபம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும். பெரியளவில் திட்டமிட்ட காரியம் ஒன்றை, கடைசி நேரத்தில் எளிமையாகச் செய்து முடிக்கலாம். தொழில் ரீதியான கூட்டங்கள் அல்லது நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். எதிர்பாராத வரவுகள் அல்லது தண்டச்செலவுகளைச் சந்திக்கலாம். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். குறுகிய தூரப் பயணங்கள் செல்லலாம். அயலார் சிலர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். சுயதொழில் புரிவோர் கூடுதல் முற்பதிவுகளைப் பெற்று, கடுமையாகப் பணியாற்ற நேரிடலாம். சொந்த பந்தங்கள் சிலரின் வீடுகளுக்கும் செல்லும் வாய்ப்பு உருவாகும்.

**கடகம்:** வாகன யோகத்துக்கு வாய்ப்பு உண்டு. உத்தியோகத்தர்கள் புதிய பொறுப்புகளை ஏற்றுச் செய்ய நேரிடலாம். புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். பிரியமான சிலருடன் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசனை செய்வீர்கள்.

**சிங்கம்:** குழப்பங்கள் தீர்ந்து, எதிலும் தெளிவான முடிவு எடுக்கும் நாள். சிலரிடம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்போடு செயற்படுவீர்கள். எதிர்கால ஆதாயத்தை கருத்தில் கொண்டு, சில காரியங்களைச் செய்வீர்கள். விருந்தினர்கள் வருகையை எதிர்பார்த்து சில முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள்.

**கன்னி:** மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். நண்பர்கள் சிலரைப் பாராட்டிப்பேசி அவர்கள் மூலம் காரியம் சாதிப்பீர்கள். பெண்கள் கடும் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். பலர் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். எதிர்பாராத சில வாய்ப்புகளைப் பெறலாம்.

**நாளை**

வைகாசி 31 புதன்கிழமை 13.06.2012
திதி: நவமி மு.ப 10.16 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதிசித்தும் மு.ப 10.50 வரை
சுபநேரம்: 04.23- 05.53 வரை
ராகு காலம்: 11.53- 01.23 வரை

**துலாம்:** தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். நீங்களே பணப் பிரச்சினைகளைச் சந்திக்கும் போது, உங்களிடம் நண்பர் ஒருவர் உதவி கேட்கலாம். பணிபுரிவோர் மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். வழக்கத்துக்கு மாறாக வேலைப்பளு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** பாவம், புண்ணியம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். குடும்ப உறுப்பினர்கள் தடுத்தும் கேட்காமல், சில வேலைகளைச் செய்வீர்கள். சேமித்த பணம் ஒன்றுக்கு, திடீரெனச் செலவு ஏற்படும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். பல நாள்களாக தடைப்பட்ட பணவரவு ஒன்று, இன்று கிடைக்காலம்.

**தனுசு:** ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் உதவிகளைப் பெறலாம். குடும்ப உறுப்பினர்கள் செய்ய முற்படும் காரியங்களுக்கு, நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால், அலைச்சல் ஏற்படலாம். சிலர் உங்களை ஏமாற்ற முற்பட்டாலும், நீங்கள் தந்திரமாக தப்பித்துக் கொள்வீர்களா. எதிர்பாராத பண வரவைப் பெறலாம்.

**மகரம்:** கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறலாம். பெரிய மனிதர்கள் சிலரின் நட்பு கிடைக்கலாம். எதிர்ப்பே இருக்காது என்று நினைத்த வேலை ஒன்றில், திடீரென போட்டிகள் உருவாகும். இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த வேலை ஒன்று, இன்று முடிவுக்கு வரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**கும்பம்:** மதிப்பு, கௌரவம் மேம்படும். பெரியளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த காரியம் ஒன்றில், எதுவும் கிடைக்காமல் போகலாம்.சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளுக்காக அலையலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

**மீனம்:** சிலர் மீது கோபம் இருந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நயமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். மாமன், மைத்துனர்கள் அனுசரணையாக இருப்பர். நண்பர்கள் சிலருடன் சேர்ந்து நல்ல காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில், நீங்களும் கலந்து கொள்ளலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | 7 | 4 | | | | 2 |
| 9 | | 5 | | 3 | | | 7 | |
| | | 2 | | | | 6 | 3 | |
| 5 | 3 | 9 | | 8 | | 2 | | |
| | 4 | | | 7 | | | 9 | |
| | | 1 | | 6 | | 3 | 4 | 5 |
| | 9 | 7 | | | | 5 | | |
| | 5 | | | 1 | | 9 | | 6 |
| 6 | | | | 9 | 8 | | | 3 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 4 | 3 | 6 | 2 | 1 | 5 | 9 |
| 9 | 3 | 6 | 1 | 5 | 4 | 7 | 2 | 8 |
| 2 | 1 | 5 | 8 | 7 | 9 | 4 | 3 | 6 |
| 1 | 8 | 7 | 2 | 3 | 6 | 9 | 4 | 5 |
| 3 | 5 | 9 | 4 | 1 | 8 | 2 | 6 | 7 |
| 4 | 6 | 2 | 5 | 9 | 7 | 8 | 1 | 3 |
| 5 | 9 | 3 | 7 | 2 | 1 | 6 | 8 | 4 |
| 7 | 2 | 8 | 6 | 4 | 3 | 5 | 9 | 1 |
| 6 | 4 | 1 | 9 | 8 | 5 | 3 | 7 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


புவனேஸ்வரி துணை





சீர்மேவு யாழ் - கோண்டாவில் பாரதிபுரம் திருவருள் மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான

வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2012

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் வைகாசி மாதம் 30ஆம் நாள் (12.06.2012) செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற்று 15ஆம் நாள் ஆனி உத்தர தரிசனத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் யாவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து எம்பெருமாட்டியின் இஷ்ட சித்திகளைப் பெற்று இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீர்களாக!

கிரியாகால விவரம்

| | | | |
|---|---|---|---|
| 11.06.2012 | திங்கட்கிழமை | மாலை 5.00 மணி | பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகும். |
| 12.06.2012 | செவ்வாய்க்கிழமை | முற்பகல் 10.00 மணி | கொடியேற்றம் |
| 16.06.2012 | சனிக்கிழமை | மாலை 6.00 மணி | கைலாசவாகனம் |
| 19.06.2012 | செவ்வாய்க்கிழமை | மாலை 5.00 மணி | கற்பூரத்திருவிழா |
| 21.06.2012 | வியாழக்கிழமை | மாலை 6.00 மணி | திருமஞ்சம் |
| 23.06.2012 | சனிக்கிழமை | | கெந்த உற்சவம் |
| 24.06.2012 | ஞாயிற்றுக்கிழமை | மாலை 6.00 மணி | சப்பரம் |
| 25.06.2012 | திங்கட்கிழமை | காலை 8.00 மணி | தேர்த்திருவிழா |
| 26.06.2012 | செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | தீர்த்தவாரி |
| | | மாலை 5.00 மணி | திருவூஞ்சல் |
| | | மாலை 6.00 மணி | கொடியிறக்கம் |
| | | மாலை 7.00 மணி | சண்டேஸ்வரர் பூஜை |
| | | மாலை 8.00 மணி | ஆசாரிய பூஜை |
| 27.06.2012 | புதன்கிழமை | மாலை 5.00 மணி | பூங்காவனம் |
| 29.06.2012 | வெள்ளிக்கிழமை | பிற்பகல் 3.00 மணி | தேரடிப்பொங்கல் ஆரம்பம் |

(19154)(6-9)

**குறிப்பு:**

தினமும் உற்சவம் காலை 9.00 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும். உற்சவ காலங்களில் அம்பிகை அடியார்கள் பால், பூக்கள், பழவகை, வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை அம்பாளுக்குக் கொடுத்து உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரதம குரு: வேதாகம சிரோன்மணி சிவஸ்ரீ சாமி சிறிஸ்கந்தராஜக் குருக்கள் (ஜே.பி.) கோண்டாவில்
ஆலய அர்ச்சகர்: அன்னதாசன் சிவஸ்ரீ த.ரமேஷ் ஐயா (கோண்டாவில்)

உபயகாரர்களும்,
ஆலய பரிபாலன சபையினரும்.

# ஆளும் கட்சிக்குச் சார்பாக செயற்படுகிறார் சபாநாயகர்

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன்12


நாடாளுமன்றின் சபாநாயகர் ஆளும் கட்சிக்குச் சார்பாகவும் எதிர்க் கட்சிக்கு எதிராகவும் செயற்பட்டு வருகின்றார் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் கட்சிப் பிரிவினை வாதத்தைக் காட்டி வருகின்றார். இதனடிப்படையில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற அமர்வுகளின் போது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சபை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படும் விதத்தில் நடந்துகொள்கின்றனர். ஆனால் அவர்களுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கைகளும் எடுப்பதில்லை என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் அமைச்சர் மேர்வின் சில்வா போன்றோர் சபை அமர்வுகளில் தொடர்ச்சியாக இடையூறு ஏற்படுத்தி வருகின்றனர். அவர்களுக்கு எதிராக சபாநாயகர் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ச)



பின்னவலை யானைகள் சரணாலயத்திலுள்ள 15 யானைக் குட்டிகளுக்கு பெயர் சூட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. குறித்த யானைக் குட்டிகளுக்கான பெயர்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் முன்மொழிந்தனர்.

# பதுளையில் 13 பேர் கைது

கொழும்பு,ஜூன்12

பதுளையில் சந்தேகத்தின் பேரில் 11 பெண்கள் உட்பட 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளையில் வான் ஒன்றை சோதனைக்கு உட்படுத்திய போதே அதிலிருந்த 13 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கிண்ணியா, தோப்பூர், துட்டுவெவ, மஸ்கெலியா, கினிகத்தேனை, பசறை, கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் குறித்து விசாரணைகளை பதுளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

(ச)

# கல்விசாரா ஊழியருடன் இன்று பேச்சு

## சாதகமான தீர்வு கிடைக்கும் என்கிறார் உயர்கல்வி அமைச்சின் செயலாளர்

கொழும்பு,ஜூன்12

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுடன் இன்று செவ்வாய்க்கிழமை பேச்சு நடத்தப்படும். இந்தப் பேச்சில் சாதகமான தீர்வு கிடைக்கும் என்று உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் நவரட்ண தெரிவித்தார்.

> கடந்த சனிக்கிழமை தொழில் உறவுகள் அமைச்சில் நடைபெற்ற பேச்சில் எமக்குச் சாதகமான தீர்வு கிடைக்கவில்லை.

பணிப் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு கல்விசாரா ஊழியர்கள் தமது கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும். கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொடுக்கும் அதிகாரம் உயர்கல்வி அமைச்சுக்கு இல்லை. பேச்சு நடத்துவதற்கு மத்தியஸ்தராக மட்டுமே செயற்பட முடியும் என்று அவர் கூறினார்.

தமது கோரிக்கைகளின் படி உரிய சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படாவிடின் தமது பணிப்பகிஷ்கரிப்பைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்று இலங்கை பல்கலைக்கழக எழுதுவினைஞர்கள் சங்கப் பிரதம செயலாளர் நீல் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை தொழில் உறவுகள் அமைச்சில் நடைபெற்ற பேச்சில் எமக்குச் சாதகமான தீர்வு கிடைக்கவில்லை. 875 மற்றும் 885 ஆகிய இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமே தற்போது சம்பளம் வழங்கப்படுகிறது. இதில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்பது எமது கோரிக்கைகளுள் ஒன்றாகும். இதனை ஏற்றுக்கொண்ட நிதி அமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர நடைமுறையிலிருக்கும் சுற்றறிக்கைகளை ரத்துச் செய்த பின்னர் இலக்கம் 879 சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உறுதியளித்த போதிலும் இதுவரையில் அது தொடர்பில் எவ்வித சுற்றறிக்கையும் நடைமுறைக்கு வரவில்லை என்று அவர் கூறினார். (ச)

# அரசின் தவறான கொள்கைகளுக்கு மக்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அல்லர்

## அமைச்சர் வாசுதேவ கூறுகிறார்



கொழும்பு,ஜூன்12

மக்களின் வாழ்க்கை நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இதில் இருந்து தப்பிக்க உழைக்கும் மக்கள் பல வழிகளைத் தேடி வருகின்றனர்.

அரசின் தவறான கொள்கைகளுக்கு உழைக்கும் மக்கள் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் அல்லர். உழைக்கு மக்களின் தொழிற்சங்கப் போராட்டங்களை நீதிமன்றம் மூலம் அரசு அடக்க நினைக்குமானால், அதனைத் தோற்கடிக்க வேண்டும் என்று தேசிய மொழிகள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

மகரகம பிரதேசத்தில் நடைபெற்ற உழைக்கும் மக்கள் சக்தி என்ற பெயரில் புதிய தொழிற்சங்கக் கூட்டமைப்பு ஒன்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சகல அரச ஊழியர்களுக்கும் 2500 ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுப்பது, தனியார் துறை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 12 500 ரூபாவாக அதிகரிப்பது. தோட்டத் தொழிலாளர்களின் நாள் கூலியை 750 ரூபாவாக உயர்த்துவது, அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான வரிகளை நீக்குவது உட்பட 24 கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக அரசுடன் சம்பந்தப்பட்ட 52 தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த தொழிற்சங்க கூட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளன என்று அவர் கூறினார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அரசு கடமைப்பட்டுள்ளது. மக்களின் கருத்துக்களைப் புறந்தள்ளிவிட முடியாது என்று அவர் தெரிவித்தார். (ச)

# இந்தியாவுக்குக்கூட அமைச்சர்கள் செல்லமுடியா நிலை

## அரசே காரணம் என்கிறார் கிரியெல்ல எம்.பி.

கொழும்பு,ஜூன்12

இலங்கை அரசின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குக் கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் அயல் நாடான இந்தியாவுக்கு கூட இலங்கை அமைச்சர்கள் செல்ல முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அரசின் செயற்பாடுகளே காரணம் என்று அவர் தெரிவித்தார்.

அண்மையில் இந்தியா சென்ற அமைச்சர் றெஜினோல்ட் குரே அங்கு மக்களின் எதிர்ப்பினால் நிகழ்வில் கூட கலந்து கொள்ளாமல் நாடு திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# அரசியல் கைதிகள் விவகாரம்: ஹக்கீமை நம்பினாலும் அரசை நம்பமுடியாது

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 12

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீது வைக்கக்கூடிய நம்பிக்கையை, அவர் அங்கம் வகிக்கும் அரசின் மீது வைக்க முடியாதுள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, மன்னார், அனுராதபுரம் ஆகிய இடங்களில், தமிழ் கைதிகளுக்காக விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு வழக்குகள் துரிதப்படுத்தப்படும் என்ற நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கருத்துத் தொடர்பில் மனோகணேசன் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்டகால சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். வழக்குகள் முடிவடையாத அல்லது விசாரணைகள் முடிவடையாத அனைத்துக் கைதிகளும் உடனடியாக புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றப்பட்டு, அங்கே அவர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சிகள் அளிக்கப்பட்டு , அவர்களது குடும்பத்தவர்களுடன் சேர்க்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் ஜே.வி.பி. கைதிகளுக்கு பொது மன்னிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது, அரசில் உள்ள புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு ஒருவித சலுகை வழங்கப்பட்டு, வசதி வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், ஏன் இந்த சலுகை சிறைகளில் நீண்டகாலமாக வாழும், பெண்கள், வயோதிபர்கள், அங்கவீனர்கள், நோயாளிகள், மதகுருமார் ஆகியோர் அடங்கிய தமிழ்க் கைதிகளுக்கு வழங்கப்படவில்லை என்பது தமிழ் மக்களின் கேள்வியாகும்.

அடுத்து, ஒரு தொகுதிக் கைதிகளின் மீது குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டு வழக்குகள் நீண்டகாலமாக நடக்கின்றன. இன்னும் ஒரு தொகுதியினர் தொடர்பில், பொலிஸ் விசாரணைகள்முடிவடையவில்லை அல்லது சிலருக்கு அவை ஆரம்பிக்கப்படவே இல்லை. இவர்களுக்கு ஏன், புலி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்கள் அவர்களது குடும்பத்தவர்களுடன் சேர்க்கப்படக்கூடாது என்பதும் தமிழ் மக்களின் கேள்வியாகும்.

இந்த அரசு பல்வேறு பிரச்சினைகளை ஆறப்போடுவதற்கும், காலத்தை இழுத்தடிப்பதற்கும் பெருந்தொகை விசாரணை ஆணைக் குழுக்களை அமைத்து உலக சாதனை புரிந்துள்ளது என்ற உண்மை அமைச்சருக்கு நன்கு தெரியும். இன்று இந்த விசேட நீதிமன்றங்களும், இத்தகைய முயற்சிகள் இல்லை என்பதற்கான நல்லெண்ண உத்தரவாதம் எதுவும் எமக்குத் தென்படவில்லை. அமைச்சர் குறிப்பிட்டுள்ள விசேட நீதிமன்றங்கள் தொடர்பில் காலவரையறை எதுவும் இருக்கின்றதா என்பதும் எமக்குப் புரியாத புதிராக இருக்கின்றது.

பொது மன்னிப்பு தொடர்பிலும், வழக்குகளை இடைநிறுத்திக்கொண்டு புனர்வாழ்வு அளிப்பது தொடர்பிலும், இன்றுள்ள சட்டங்கள் போதுமானவையாக இருக்க முடியாது.

இந்தநிலையில் இவற்றுக்காக, புதிய சட்ட விதிகளை அமைச்சரவை மூலமாக நாடாளுமன்றத்தில் கொண்டுவர அமைச்சர் ஆவன செய்ய வேண்டும். இதற்கு அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் நாம் நிச்சயமாக திரட்டித் தருவோம்- என்றார். (ச-சி)

# பயிற்சி வகுப்பு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூன் 12

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்துப் பூசகர்களுக்கு வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் இந்த மாதம் நடத்தப்படவிருந்த இருவார வதிவிடப் பயிற்சி வகுப்புகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் போது உரிய விண்ணப்பதாரிகளுக்கு திணைக்களத்தினால் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# உரிமைகோர அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன் 12

உரிமை கோரப்படாத பெண்கள் துவிச்சக்கர வண்டி ஒன்று சுன்னாகம் பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் உரிமையாளர் தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து எதிர்வரும் நவம்பர் மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னதாக மல்லாகம் நீதிமன்றின் பதிவாளர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(ம-14)

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு ஸ்ரீ மகா முத்துமாரியம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப 10மணி முதல் நடைபெறவுள்ளது. இதன் ஆரம்பக் கிரியைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இன்றும் நாளையும் பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும். (ம-14)

* * *

வரணி சுட்டிபுரம் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ம-122)

# விபத்துக்களில் சிக்கி ஆறுபேர் காயம்

தென்மராட்சி, ஜூன் 12

வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்த ஆறுபேர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெவ்வேறு இடங்களில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்தவர்களே அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி உடுத்துறை வடக்கைச் சேர்ந்த சிவபாலசுந்தரம் (வயது 26) என்பவரும், மற்றொரு விபத்தில் குடத்தனை மேற்கைச் சேர்ந்த செல்லப்பா அலெக்ஸ் மேசியஸ் (வயது 36) இலங்கேஸ்வரன் இந்துஷன் (வயது 20) ஆகியோரும் வரணிப் பகுதியில் வாகனமொன்றினால் மோதப்பட்டு வீதியில் காயங்களுடன் காணப்பட்ட வேளையில் படையினரால் கொண்டு வரப்பட்ட உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த கனகலிங்கம் தயான் (வயது 20) ஏ-9 வீதியில் வாகனத்திலிருந்து வீழ்ந்ததாக பளை மாகா நிறுவன தொழிலாளர்களான சரத் விஜயேந்திரா மதனப் பிரசாத் (வயது 20) வீ.ரி.சமந்த (வயது 27) ஆகியோரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட வண்ணார் பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் இடம்பெறவுள்ளது.

இந்தத் தடுப்பூசி வழங்கல் நிகழ்வுகளில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை பிறவுண் றோட், கலட்டிச் சந்தியிலும், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை வீரகத்திப் பிள்ளையார் கோயிலடி சீனியர் ஒழுங்கையிலும் இடம்பெறும்.

நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை காமாட்சி பாலர் பாடசாலையிலும், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை கலட்டி இராமநாதன் வீதி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் இடம்பெறும்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை நீராவியடி சைவ பரிபாலன சபையிலும், முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை கஸ்தூரியார் வீதி ஆரோக்கியமாதா கோயிலடியிலும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை கனகசபை வீதியிலும், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை சிவகுருநாதர் வீதி சிவகுருநாதர் கோயிலடியிலும் இடம்பெறும். (ம-14)

## மாற்றுவலுவுடையோர் ஆக்கம் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 12

கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் நூலக வலுவூட்டல் நிகழ்வில் மாற்றுவலுவுடையோர்களின் திறன்களை முன்னிலைப்படுத்தி அவர்களின் ஆக்கங்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை கோண்டாவில் மண்டபத்தில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் கோண்டாவில் பொது நூலகத்தில் மாற்றுவலுவுடையோரான வாசக வட்ட மாணவி தர்மராஜா ஜெனித்தர்ஷா கைவண்ணத்தால் உருவாக்கப்பட்ட பொருள்கள் மற்றும் சித்திரங்கள் என்பன காட்சிக்கு வைக்கப்படும் என்று கோண்டாவில் பொதுநூலகர் செல்வி. எம்.அனிதா தெரிவித்தார். (ம-14)

## உயர்தொழில் நுட்பவியல் நிறுவனப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 12

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் முதலாம் மற்றும் இரண்டாம் பருவகாலப் பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களுக்கு இந்தவருடப் பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தகுதியுடைய மாணவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். பிறவுண் வீதியில் உள்ள உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# இலவச பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

பளை, ஜூன் 12

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினர் பாடசாலைக் கல்வியினைப் பூர்த்தி செய்த இளைஞர் யுவதிகளுக்கான இலவச கணினி மற்றும் தையல் பயிற்சி வகுப்புகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பளை முல்லையடியில் உள்ள பச்சிலைப் பள்ளி அபிவிருத்திப் பேரவை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.பேரவையால் ஏற்கனவே இருதடவைகள் கணினிப் பயிற்சிவகுப்புகளும், தையல் பயிற்சிவகுப்புகளும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ம-9)


## தவறிவிட்டது

தம்பிராஜா ராஜீ என்பவருடைய தே.அ.அட்டை (651132371V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன 10.06.2012 ஞாயிற்றுக் கிழமை இரவு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பஸ்ஸில் ஓமந்தைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 0712287326, 0777034989

(19147) (2-6-9)






## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர், #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை. தொ.பே : 077 8996085

(18965)

## விற்பனைக்கு

ரொயோரா D.B.A-NZT-260 அலியோன் கார் Toyota - ALLION- CAR விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 728 3811

(19193)(6-9)

## வயறிங், AC வேலைகள் செய்து கொடுக்கப்படும்

உங்கள் வீடுகளில் வயறிங், பைப்லைன் மற்றும் AC திருத்த வேலைகள் குறைவான செலவிலும் குறுகிய காலத்திற்குள் பாதுகாப்பான முறையில் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 1970395, 021 3006140

(19186)(6-9-8)

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கிவரும் உயர் தொழில்சார் கல்வி நிறுவனம் ஒன்றுக்குச் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் மோட்டார் சைக்கிளும், அதற்கான சாரதி அனுமதிப்பத்திரமும் கொண்டிருத்தல் அவசியம். ஆர்வமுள்ளவர்கள் 13.06.2012 புதன்கிழமை நேரில் வருகை தரவும்.

(19189) (2-6-9)

தொடர்புகளுக்கு:- 021 720 0777, 0771250350

## வாகன விற்பனை

09.06.2012 அன்று விளம்பரத்தின் படி YB இலக்கமுடைய ஓட்டோ தரிப்பிடத்துடன் என்று விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. தரிப்பிடம் ஓட்டோ சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஓட்டோ மட்டும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 939 9298

(16879)(6-9)


## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா நடராசா



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும், பிரான்ஸை தற்போதைய வாழ் விடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா நடராசா (28.05.2012) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - லக்சுமி தம்பதியரின் ஏகபுதல்வியும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நடராசாவின் அன்புமனைவியும், கனகம்மா, காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் நல்லம்மா, பாலசிங்கம் (அழகர் - பிரான்ஸ்), முத்துலிங்கம் (பாலா - கனடா), சந்திரலிங்கம் (கோணேஸ் - பிரான்ஸ்), பத்மராணி (பூமா - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், வீரசிங்கம், சாந்தகுமாரி, திடவீரசிங்கம், பத்மினி, மகேஸ்வரி, திருச்சோதி, தங்கவடிவேல் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2012) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.


நாளை (13.06.2012) புதன்கிழமை அன்னாரின் மூத்தமகள் திருமதி வீ. கனகம்மாவின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜ வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
பிள்ளைகள்
தொ.பே : 0033 148521398,
0091 9940502386

(19148)(6-8-9)



5 மாவட்டங்களிலும் ஓரளவான மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# கும்மிடிப்பூண்டி அகதி முகாமில் சூறைக்காற்றால் வீடுகள் சேதம்!

கும்மிடிப்பூண்டியில் நேற்று முன்தினம் பிற்பகல் திடீரென வீசிய பலத்த சூறைக் காற்றால் கும்மிடிப்பூண்டி இலங்கைத் தமிழர் அகதிகள் முகாமில் உள்ள வீடுகள் சேதமடைந்தன.

இந்த திடீர் சூறைக்காற்றால் இலங்கை தமிழர் அகதிகள் முகாமில் வசித்து வரும் வவுனியாவைச் சேர்ந்த மங்கையர்க்கரசி, மன்னாரைச் சேர்ந்த ரவி உட்பட 4 பேரின் வீடுகள் மீது மரங்கள் விழுந்தன.

இதனால் அவர்களின் வீடுகள் முழுமையாகச் சேதம் அடைந்தன. வீடுகள் மீது மரங்கள் விழுந்தபோது வீட்டுக்குள் இருந்தவர்கள் கைக்குழந்தைகளுடன் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓட்டம் பிடித்தனர். இதனால் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

**வீடுகள் மீது மரங்கள் விழுந்தபோது வீட்டுக்குள் இருந்தவர்கள் கைக்குழந்தைகளுடன் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓட்டம் பிடித்தனர். இதனால் உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை.**

சுமார் 5 நிமிடங்கள் மட்டுமே நீடித்த இந்த பலத்த காற்றால் முகாமில் பல தெருக்களில் மின்வயர்கள் அறுந்து விழுந்தன.

கும்மிடிப்பூண்டி தாசில் தார் ராஜசேகர் தலைமையில் அகதிகள் துறை சார்ந்த அதி காரிகள் முகாமில் பாதிக்கப்பட்டுள்ள உள்ள வீடுகள் குறித்த விவரங்களைச் சேகரித்து மாவட்ட நிர்வாகத்துக்குத் தகவல் அனுப்பி வைத்துள்ளனர். (வ)

## உயர்தர மாணவருக்கு முன்னோடிப் பரீட்சை

மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ் மாணவர்களால் வருடந்தோறும் நடத்தப்படும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான (கணித/ உயிரியல்) முன்னோடிப் பரீட்சையானது இந்த வருடமும் சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

இலங்கை முழுவதும் நடத்தப்படும் இந்தப் பரீட்சையானது மாணவர்களின்தரநிலையை அறியவும் போட்டித்தன்மையை வளர்க்கவும் உதவுவதோடு உயர்தர பரீட்சைக்கான ஒரு தயார்படுத்தலாகவும் அமைகின்றது. தமிழ் மற்றும் ஆங்கிலமொழி மூலங்களில் நடைபெறும் இப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை குறித்த மாவட்டங்களிலுள்ள மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ் மாணவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். இப் பரீட்சையானது ஜூன் 23 ஆம் திகதி முதல் சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்படவுள்ளது. குறித்த மாவட்டங்களிலுள்ள குறித்த பாடசாலைகள் பரீட்சை நிலையங்களாக்கப்பட்டு பரீட்சைகள் நடைபெறும். பரீட்சை தொடர்பான மேலதிக விவரங்களை சிறப்பு இணையத்தளமான www. moramodelexams.com இல் பார்வையிட முடியும்.

## திருமண வீட்டில் உறங்கிய பெண்ணின் சங்கிலி அறுப்பு

வடமராட்சி, ஜூன் 12

திருமண வீடொன்றில் ஐந்தாம் சடங்குக் கொண்டாட்டம் முடிந்த பின்னர் பந்தலில் படுத்துறங்கிய இளம்பெண் ஒருவரின் முக்கால் பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலியை இனந்தெரியாத ஒருவர் அறுத்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளார். இந்தச் சம்பவம் அல்வாய் மேற்கு திக்கம் பகுதியில் கடந்த புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

திருமண வீட்டுக்காரர்களின் உறவினர்கள் பந்தலில் படுத்துறங்கியவேளை அதிகாலை 3 மணியளவில் அங்கு நுழைந்த இனந்தெரியாத இளைஞர் ஒருவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்தார். உடன் துடிதுடித்து எழுந்த பெண் கூக்குரலிடவே அனைவரும் ஓடிச்சென்றும் திருடனைப் பிடிக்கமுடியவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-8)

## திருவடிநிலை வாகை வைரவருக்கு மணிக்கூட்டுக் கோபுரம்

சுழிபுரம், ஜூன் 12

சுழிபுரம் திருவடிநிலை வாகை வைரவர் ஆலயத்துக்கு முன்பாக புதிய மணிக்கூட்டுக்கோபுரம் கட்டப்படவுள்ளது. முன்பு இருந்த இடத்தில் கோபுரம் அழகிய வேலைப்பாடுகளுடன் கட்டப்படவுள்ளது. ஆலய வழித்தோன்றல்களாலே கட்டப்பட்டு எதிர்வரும் ஆவணி மாதம் பாவனைக்கு விடப்படவுள்ளது. முன்பு இருந்தது போல் வாகை வைரவர் ஆலய வீதிகளும் செப்பனிடப்படவுள்ளன. (ந-28)

## வெள்ளி மாற்றத்தால் பக்றீரியாத் தாக்கம்

கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்ற வெள்ளி மாற்றத்தின் பின்னர் வெள்ளிக் கிரகத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட பக்றீரியா இனங்கள் புவி யின் வாயு மண்டலத்தில் நுழையலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. நாசாவின் கிரகங் கள் ஆராய்ச்சி தொடர்பான இலங்கைக்கான பேரா சிரியர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பிரிட்டிஷ் பக்கிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் கிரகங்கள் தொடர்பான ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் சந்திரா விக்கிரமசிங்க, இது குறித்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

சூரியனுக்கும் புவிக்கும் இடையில் வெள்ளிக் கிரகம் சென்றதன் காரணமாக சூரியக் கதிர்கள் வழியே பக்றீரியாக்கள் புவியை வந்தடையலாம். இதனால் எதிர்வரும் மாதங்களில் இந்தத் தாக்கம் காரணமாகச் சில நாடுகளில் ஒரு வகைக் காய்ச்சல் ஏற்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாகப் பக்கிங்ஹாம் பல்கலைக்கழகம் மற்றும் மேலும் பல இணையத் தளங்களில் எச்சரிக்கைத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதேவேளை வெள்ளிக் கிரக மாற்றத்தால் இலங்கைக்குத் தாக்கம் செலுத்தும் சாத்தியம் குறைவு என்று ஆதர் சி கிளார்க் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ந)

# மரண அறிவித்தல்

## மரியநாயகம் றொய்ஸ் கொன்ஸ்ரன்ரைன் (மதன்)



யாழ். குருநகரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட றொய்ஸ் கொன்ஸ்ரன்ரைன் (09.06.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார், மரியநாயகம் - ஜெயராணி(பிரான்ஸ்) தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான தேவதாஸ் - ஹெலன் தம்பதியரின் வளர்ப்பு மகனும், கியூமன் (பிரான்ஸ்), மேகலா (பிரான்ஸ்), றூபலா(பிரான்ஸ்), அல்பேர் (தயான்-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வெரோனிக்(பிரான்ஸ்), றிச்சாட் (கபூர்-ஜேர்மன்), குயின்ரன் (ரமேஸ்-பிரான்ஸ்), ஜனனி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, ஜெயரட்ணம் மற்றும் செபஸ்ரியான்(இலங்கை), அலோசியஸ் (பிரான்ஸ்), சாள்ஸ்(பிரான்ஸ்), பத்திமா (பிரான்ஸ்), ஜெயமணி(இலங்கை) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், காலஞ்சென்ற ஹெலன் மற்றும் லீலா(பிரான்ஸ்), ஞானமணி (லண்டன்), இந்திரா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சூரி மற்றும் ஜெயசீலன் (இலங்கை), குமார் (இலங்கை), ரஞ்சன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24/5, மத்தியகிழக்கு வீதி,
குருநகர்.

(19187) (2-9-6)

தகவல்: றொபின்சன் (ரஞ்சன்)
(மாமன் குடும்பத்தினர்).

# மைக்ரோசொப்ட் இமாஜின் வெற்றியாளர்கள் இவர்கள்

இலங்கையில் தகவல் தொழில்நுட்ப புரட்சியை ஏற்படுத்தும் வகையில் மைக்ரோசொப்ட் ஸ்ரீலங்கா நடத்திய இமாஜின் கப் 2012 (Imaging cup 2012) வெற்றியாளர்களாக மொறட்டுவை பல்கலைக்கழகத்தை சேர்ந்த வீ-360 அணியினர் மகுடம் சூடிக்கொண்டனர்.




துருபரன் விஜயகுமார், மலின் டி சில்வா, ருக்ஷான் லக்சித்த தன்கல்ல ஆகிய மூன்று போட்டியாளர்களை உள்ளடக்கிய வீ360 அணியினருக்கு எதிர்வரும் ஜூலை மாதம் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெறவுள்ள இமாஜின் கப் உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

அரை இறுதிப் போட்டிகளுக்கு தெரிவான ஆறு அணியினரும் தமது செயற்றிட்டங்களை முன்வைத்தனர். எனினும் அவற்றில் வீ360 அணியினர் முன்வைத்த பக் ரு ஏத் (Back2earth) திட்டம் சிறந்தது என நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கர டெலிகொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கிரேக் யங், மிலேனியம் இன்போமேஷன் டெக்னொலொஜிஸ் நிறுவனத்தின் நிறைவேற்று உப தலைவர் பாயிக் பாஸிஸ், எம்.எஸ்.டெக்னோலொஜிஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பத்மன் டி சில்வா, மைக்ரோசொப்ட் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஈ.பி.ஜி. பணிப்பாளர் இம்ரான் வில்காசிம் ஆகியோர் நடுவர் குழுவில் இடம்பெற்றிருந்தார்கள்.

தேசிய ரீதியாக நடைபெற்ற இமாஜின் கப் - 2012 இறுதிப் போட்டி மாலபையில் அமைந்துள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் கோலாகலமாக அண்மையில் நடைபெற்றது.

சீஆர் கோர்டெர்ஸ் (CR Corderz), டீம் டொட் (Team dot), கஸ்பர் கிரியேஸன்ஸ் (Casper creations) ஆகிய மூன்று அணிகள் இன்போமெட்டிக்ஸ் இன்ஸ்டியூட் ஒப் டெக்னொலொஜி சார்பாகவும் டீம் ஷார்க்ஸ் (Team sharks), வீ360 ஆகிய அணிகள் மொறட்டுவை பல்கலைக்கழகம் சார்பாகவும் இன்விக்டஸ் (Invictus) அணி சப்ரகமுக பல்கலைக்கழகம் சார்பாகவும் இம்முறை இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றுக் கொண்டது.

அனைவரையும் ஆச்சரியப்படுத்தும் வகையில் தமது திட்டங்களை முன்வைத்த வீ360 அணி சம்பியனாகவும் சீஆர் கோர்டர்ஸ் அணி இரண்டாம் இடத்தையும் டீம் ஷார்க்ஸ் அணி மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுக்கொண்ட அணிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் வெற்றிபெற்ற அணிக்கு ஆஸ்திரேலியாவில் இவ்வருடம் ஜூலையில் நடைபெறுகின்ற இமாஜின் கப் சம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். (த)

## சென்றமாத பணவீக்கத்தில் வீழ்ச்சி

இந்த ஆண்டின் மே மாதத்திற்கான இலங்கையின் பாணவீக்கத்தில் சிறியதோர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியின் ஆண்டுக்காண்டு மாற்ற விகிதத்தின் அடிப்படையில் கணிக்கப்படும் இலங்கையின் பணவீக்கம், சென்ற மே மாதத்தில் ஐந்து புள்ளி ஆறு சதவீதம் எனக் காணப்பட்டுள்ளதுடன், இதுவே முன்னைய மாதத்தில் (ஏப்ரல்) ஐந்து புள்ளி ஏழு சதவீதம் எனச் சற்று உயர்வாகக் காணப்பட்டது.

எனினும், இலங்கையின் ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் சென்ற மே மாதத்தில் ஏழு சதவீதமாகக் காணப்பட்டுள்ளதுடன் இது, இந்த ஆண்டின் மார்ச் மாதத்தில் இருந்து தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாக மத்திய வங்கியின் தரவுகள்காட்டுகின்றன.

மேற்படி பணவீக்க அதிகரிப்பில் உணவு மற்றும் மென் பாணங்களின்விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க (2.5%) அதிகரிப்பே காரணம் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (த)

## சேர்வோ ஒயில் கம்பனியின் விநியோகஸ்தர் அலுவலகம்

இலங்கை ஐ.ஓ.சி நிறுவனத்தின் சேர்வோ ஒயில் கம்பனியின் பிராந்திய விநியோகஸ்த்தர் அலுவலகம் காத்தான்குடியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை திற்ந்து வைக்கப்பட்டதுடன் சேர்வோ ஒயில் அறிமுக வைபவமும் நடைபெற்றது.

ஒயில் கம்பனியன் மட்டக்களப்பு மாவட்ட விநியோகஸ்தர்களான காத்தான்குடி இஸ்மாயில் ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் லெவ்வை கட்டடத்தொகுதியில் நடைபெற்ற இதன் ஆரம்ப வைபவத்தில் இலங்கை ஐ.ஓ.சி நிறுவனத்தின் சேர்வோ ஒயில் கம்பணியின் சிரேஷ்ட உப தலைவர் சேமன் கங்குலி இஸ்மாயில் ஸ்டோர்ஸ் ஸ்த்தாபகர் அல் ஹாஜ் ஏ.எல்.எச்.இஸ்மாயில், அதன் நிறுவன பணிப்பாளர்களான ஐ.எல்.எம்.றுபைத், ஐ.எல்.எம்.சுஹைப், ஐ.எல்.எம்.உவைஸ், மற்றும் சேர்வோ ஒயில் கம்பனியின் கிழக்கு மாகாண விற்பனை முகாமையாளர் றசீல் ஹசன், அதன் மேற்பார்வை உத்தியாகத்தர் சட்.ஹிலால் முனீர் உட்பட பிரமுகர்கள், முக்கியஸ்த்தர்கள் மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர். (த)

## 50,000ஆவது நோயாளிக்கு மருத்துவம் பார்க்கிறது எக்ஸ்போ–மெடிக்ஸ்




எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ், அதன் நிறுவன சமூக பொறுப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமான, விரைவாக வளர்ந்துவரும் குறைந்த கட்டண மருத்துவ நிலையங்களான, எக்ஸ்போ மெடிக்ஸ்' மூலம் 50,000 இற்கும் அதிகமான நோயாளிகளுக்கு மருத்துவ சேவைகளை வழங்கியுள்ளது. இது இலவச மருத்துவ ஆலோசனைகள் மற்றும் மானியத்தில் மருந்துகளையும் வழங்கும் யோசனையின் அடிப்படையில் செயற்படும் இலாப நோக்கற்ற ஒரு திட்டமாகும். மட்டக்குளி, கொம்பனித் தெரு, கிராண்ட்பாஸ், வத்தளை மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்களில் மருத்துவ சேவையை வழங்கி வரும் எக்ஸ்போ லங்காவின் மருத்துவ நிலையங்களுக்கு வாராந்தம் 200இற்கும் அதிகமான நோயாளிகள் வருகை தருகின்றனர்.

இத்திட்டம் குறித்து விளக்கமளித்த எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்சின் சந்தைப்படுத்தல், நிறுவன தொடர்பாடல் மற்றும் நிறுவன சமூக பொறுப்புணர்வு பிரிவு தலைவரான பெடி வீரசேகர, 'நாம் செயற்படும் பிரதேசங்களிலுள்ள மக்களுக்கான ஒரு சமூக நிகழ்ச்சித்திட்டமாகவே எக்ஸ்போ மெடிக்ஸ் ஆரம்பிக்கப் பட்டது. மட்டக்குளியில் சிறிய மருத்துவ நிலையத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் தற்போது தகுதி வாய்ந்த மருத்துவர்கள் மற்றும் தாதிகளைக் கொண்ட முழுமையான மருத்துவ நிலையங்களைக் கொண்டுள்ளது. இந்நிலையங்கள் மருத்துவ ஆலோசனைகள், நோய் கண்டறியும் சேவை மற்றும் சிறிய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்கின்றன. அத்துடன் மானிய விலையில் மருந்துகளையும் வழங்குகின்றன.

இலங்கை அதன் சகல பிரஜைகளுக்கும் எந்த வித்தியாசமும் இன்றி இலவச மருத்துவ சேவைகளை வழங்குகின்றது. அண்மையிலுள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை சுகாதாரத்துறையில் சிறந்த தரத்தை அடைந்துள்ளது. உயர் செலவுடைய தனியார் சுகாதார முறைமையில் மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத குறைந்த வருமானமுடைய பிரிவினரையும் உடனடிச் சுகாதார சேவைகளை திருப்திகரமாக பெற்றுக் கொள்ள முடியாதுள்ளவர்களையும் எக்ஸ்போலங்கா சந்திக்கின்றது. (த)

## குமாரிக்காவின் ஊக்குவிப்பு திட்டம்




குமாரிக்கா இயற்கைத் தயாரிப்புகளின் மூலம், தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு, முன்னெடுக்கப்பட்டிருந்த 'நெக்கத்தட தேகி' (சுப வேளைக்கு அன்பளிப்பு) ஊக்குவிப்பு திட்டத்தில் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலிகளுக்கு அன்பளிப்புகள் வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் 17ஆம் திகதி ஹேமாஸ் இல்லத்தில் இடம்பெற்றிருந்தது.

இந்த ஊக்குவிப்பு திட்டத்தில் 3 விளையாட்டுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த போட்டிகள் பேஸ்புக் ஊடாக இடம்பெற்றிருந்தது. பாவனையாளர்கள், இந்த விளையாட்டுகளில் ஒன்றில் விளையாடி, அதிகளவு புள்ளிகளை பெறுவதன் மூலம் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இந்த போட்டிகள் ராசி சக்கரம், பாரம்பரியம் தொடர்பான வினாக்கள் மற்றும் புதிர் தோற்றங்கள் எனும் தலைப்பில் புதுவருட காலத்தை பிரதிபலிப்பதாக குமாரிக்கா தயாரிப்புகளின் மூலம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த விளையாட்டுக்களில், ராசி சக்கரம் போட்டியில், திமுது உடவத்த வெற்றி பெற்றிருந்ததுடன், பாரம்பரியம் தொடர்பான வினாக்கள் விளையாட்டில் கிம்ஹானி சமரகோன் வெற்றியீட்டிருந்ததுடன், புதிர் தோற்றங்கள் விளையாட்டில் தேஷானி பண்டாரவும் வெற்றி பெற்றிருந்தார். இந்த பரிசளிப்பு வைபவத்தில் 15 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டிருந்தன.

இந்த விளையாட்டுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறித்து ஹேமாஸ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் டெரிக் அந்தனி கருத்து தெரிவிக்கையில், எமது குமாரிக்கா பேஸ்புக் இணையப் பக்கமானது, எமது வாடிக்கையாளர்களுக்கு இயற்கையாக, சுகாதாரமாக வாழ்வது குறித்த விபரங்களையும், தகவல்களையும் பரிமாறிக் கொள்வதற்கும், பெற்றுக்கொள்வதற்கும் சிறந்த அடித்தளமாக அமைந் துள்ளது. எமது தயாரிப்புகள் இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்படுவதால், இயற்கையான, ஆரோக்கியமான வாழ்க்கைத் தரத்தை கொண்டு நடத்த சிறந்த தெரிவாக அமைந்துள்ளன. அத்துடன் எமது கலாசாரம், விழுமியங்களையும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளன. இந்த இயற்கை குணநலன்களை புதுவருட காலப்பகுதியில் வாடிக்கையாளர்களுக்கு உணர்த்தும் வகையில் இந்த விளையாட்டை ஏற்பாடு செய்து, எமது நம்பிக்கையை வென்ற வாடிக்கையாளர்களை மகிழ் விக்க தீர்மானித்திருந்தோம்' என்றார். (த)

## புத்தம்புதிய ஜீப்புடன் சீடிபி அதிர்ஷ்டம்

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பீஎல்சி (சீடிபி), அதன் 'சீடிபி அதிர்ஷ்டம் 2012-13' பரிசுப் போட்டியினை ஆரம்பித்துவைத்துள்ளது. வருடத்துக்கு மூன்று முறை இடம்பெறும் இப்பரிசுப் போட்டி மூலம் ஒருவர் சேமிப்பது மாத்திரமல்லாது, அதிகமாக வெற்றிபெறவும், வருமானம் ஈட்டவும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ், வாடிக்கையாளர்கள் சீடிபி நிலையான வைப்பு கணக்கொன்றில் ரூ.10,000 அல்லது சீடிபி சேமிப்பு கணக்கில் ரூ.5,000 வைப்பிலிட்டு, நான்கு மாதங்களுக்கு ஒருமுறை புத்தம் புதிய ஜீப்பை வெல்லும் வாய்ப்பை பெறுவார்கள்.மேலதிகமாக வைப்பிலிடப்படும் உங்கள் ஒவ்வொரு ரூ.10,000 மற்றும் ரூ.5,000 இற்கும் வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும். அதுமாத்திரமல்லாது, 'சீடிபி அதிர்ஷ்டம்' உங்கள் முதலீட்டுக்கான அதிகூடிய பலனைப் பெற்றுக் கொடுப்பதுடன், உங்கள் கனவுகளையும் நனவாக்க வழிவகுக்கும்' என பிரதி சந்தைப்படுத்தல் முகாமையாளர் இளங்கோவன் கார்த்திக் தெரிவித்தார்.

'சீடிபி அதிர்ஷ்டம் 2011-12' பரிசுப் போட்டியில் புத்தம்புதிய ஜீப்களை வென்ற அதிர்ஷ்டசாலிகள் வெள்ளவத்தையைச் சேர்ந்த எஸ்.கே.கணேசன், அநுராதபுரத்தைச் சேர்ந்த யுதீர சாலிந்த மற்றும் வத்தளையைச் சேர்ந்த பீ.கே.ஈ.ஜே.றொட்ரிகோ ஆவர். 'சீடிபி அதிர்ஷ்டம் பரிசுப் போட்டியில் நான் வெற்றியாளர் என்பதை அறிந்ததும் மிகவும் பூரிப்படைந்தேன்' என வெள்ளவத்தையைச் சேர்ந்த எஸ்.கே.கணேசன் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.



'நாடு முழுவதும் வியாபித்துள்ள 'சீடிபி'யின் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களுக்கு சென்று உங்களின் வைப்பை மேற்கொள்ளலாம்.... யாருக்குத் தெரியும் அடுத்த ஜீப்பை வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலி நீங்களாகவும் இருக்கலாம்' என கார்த்திக் மேலும் தெரிவித்தார்.

தற்போது 40 வாடிக்கையாளர் சேவைநிலையங்களை தன்னகத்தே கொண்டு இயங்கி வரும் சீடிபி, பிராண்ட் பினான்ஸ் லங்காவினால் இலங்கையிலுள்ள முதல் 100 பெறுமதிவாய்ந்த முன்னணி வர்த்தக நாமங்களுள் 50ஆவது இடத்தை பெற்றுள்ளது. (த)

# கலாசார சீரழிவுக்கான அடையாளங்கள் இருந்ததாலேயே விடுதி மூடப்பட்டது

## நீதிமன்றில் மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். மாநகர சபையின் அனுமதிப்பத்திரமின்றி இயங்கி வந்ததோடு கலாசார சீரழிவுகள் இடம்பெற்றதற்கான அறிகுறிகளும் கண்டறியப்பட்டதனாலேயே யாழ். கோயில் வீதியில் உள்ள 'நாது' விடுதி இழுத்து மூடப்பட்டது என பொதுச் சுகாதார பரிசோதகர்களால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு மேலதிக விளக்கங்களுக்காக எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

கடந்த மாதம் 23 ஆம் திகதி யாழ். மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் அந்த விடுதி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அந்த விடுதி உரிய அனுமதிப்பத்திரமின்றி இயங்கிவந்தது தெரியவந்தது.

அத்துடன் அன்றையதினம் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் விடுதிக்குச் சென்ற போது அங்கிருந்த இளம்பெண் ஒருவர் விடுதிக்கு முன்பாகச் சென்று அங்கு நின்ற ஹைஏஸ் வாகனத்தில் ஏறி தப்பிச்சென்றார். அவரது நடத்தையில் சந்தேகம் கொண்டு உள்ளே விசாரணை செய்யப்பட்டது.

''குறித்த தினத்தன்று தமக்கு 27 ஆயிரம் ரூபாவை பணமாகத் தந்தால் விடுதியை தொடர்ந்து நடத்த அனுமதிக்கலாம் என்று மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர்கள் லஞ்சம் கேட்டுள்ளனர். அதற்கு மறுப்புத் தெரிவித்ததாலேயே இவ்வாறான வழக்கு தொடரப்பட்டுள்ளது. ''

அதன்போது அறை ஒன்றில் வெற்று மதுப்போத்தல்களுடன், கலாசாரச் சீரழிவுகள் இடம்பெற்றதற்கான இன்னும் சில ஆதாரங்களை இனங்காண முடிந்தது.

விடுதியின் விருந்தினர் பதிவேட்டைப் பார்வையிட்டபோது 22 வயதுடைய இளைஞன் மற்றும் 18 வயதுடைய யுவதி ஆகியோர் ஒரே அறையில் இருந்ததற்கான பதிவுகள் காணப்பட்டன.

அதனையடுத்து மாநகர சபையினால் விடுதி மூடப்பட்டு, திறப்பு மன்றில் ஒப்படைக்கப்பட்டது என மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் மன்றில் தெரிவித்தார்.

''மாநகர சபையின் விதிமுறைகளை மீறியதுடன், குறித்த விடுதியில் சமூகத்தைச் சீரழிக்கும் சம்பவங்களும் இடம்பெற்றதனை அவதானிக்கமுடிகிறது. எனவே இவ்வாறான விடுதிகள் யாழில் இயங்கினால் எமது எதிர்கால சந்ததி பாதிக்கக்கூடும்'' என அவர் வாதாடியிருந்தார்.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ''இவை வெறும் கட்டுக்கதை. அங்கு எந்தச் சீர்கேடும் இடம்பெறவில்லை. தப்பிச் சென்ற யுவதியைப் பிடித்திருக்க வேண்டுமே தவிர மன்றைத் திசைதிருப்ப பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கக் கூடாது. குறித்த தினத்தன்று தமக்கு 27 ஆயிரம் ரூபாவை பணமாகத் தந்தால் விடுதியை தொடர்ந்து நடத்த அனுமதிக்கலாம் என்று மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர்கள் லஞ்சம் கேட்டுள்ளனர். அதற்கு மறுப்புத் தெரிவித்ததாலேயே இவ்வாறான வழக்கு தொடரப்பட்டுள்ளது. '' எனத் தெரிவித்து, விடுதியை திறந்து நடத்த மன்று அனுமதிக்க வேண்டும் என்று வாதிடினார். எனினும் இதனை மனுதாரர் தரப்பு சட்டத்தரணி கடுமையாக ஆட்சேபித்து அதனை மறுத்திருந்தார்.

மாநகர சபையால் சமர்ப்பிக்கப்படவுள்ள மேலதிக விடயங்கள் மற்றும் விளக்கத்துக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ங-4)

# சண்டிலிப்பாயில் சிறுவன் கடத்தல் சந்தேகநபருக்குப் பிணை மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

சண்டிலிப்பாய் ரஜிராம் கடத்தல் தொடர்பான வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களில் 3 ஆவது நபரை பிணையில் விடும்படி விடுக்கப்பட்ட மனு நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஜீவராணி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த வருடம் சண்டிலிப்பாய் சீரணிச் சந்தியில் வைத்து ரஜிராம் (வயது-13) 'ஹை'ஏஸ்' வாகனத்தில் வந்த முஸ்லிம்களால் கடத்தப்பட்டான் என்ற குற்றச்சாட்டில் வழக்கு இடம்பெற்று வருகிறது.

இது தொடர்பான வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நான்கு பேரில் இருவர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டனர். மூன்றாம், நான்காம் சந்தேகநபர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூன்றாவது சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்கும்படி கோரியே அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், பார்த்தீபன் ஆகியோர் மனுச் செய்தனர்.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.சுகாஸ் பிணை வழங்க கடும் ஆட்சேபனை தெரிவித்தார். இவற்றைப் பரிசீலித்த நீதிவான் பிணை வழங்க மறுத்து சிறுவன் தொடர்பான மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்க உத்தரவிட்டு எதிர்வரும் திங்கட்கிழமைக்கு வழக்கை ஒத்திவைத்தார். (த-4)

# மரண அறிவித்தல்

## திருமதி வைரமுத்து கனகம்மா (கனகி)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து கனகம்மா (கனகி) நேற்று (11.06.2012) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம்-தங்கராசா மற்றும் குணம், செல்வராசா, வசந்தராசா (கண்ணாடி), புவனேஸ்வரி(கிளி), மங்களேஸ்வரி (ராசா), பரமேஸ்வரி, சரோஜாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், ராசாத்தி, சாந்தி, சரஸ்வதி, தங்கம்மா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2012) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி, பாரதிபுலம்,
திருநெல்வேலி. (19205)

தகவல்:
துசி(சுபாசினி) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி குணமணி ஞானசிகாமணி அன்னப்பா

### (மானிப்பாய்)



மானிப்பாய் லோட்டன் வீதியைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணமணி ஞானசிகாமணி அன்னப்பா நேற்று (11. 06. 2012) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற வில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா (முன்னாள் அதிபர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, முன்னாள் யாழ் தென்னிந்திய திருச்சபை ஊழியர்) அன்புமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை செல்வரட்ணம் (கூட்டுறவு ஆய்வாளர்), பொன்னுத்துரை ராஜரட்ணம் (ஆசிரியர் தெமட்டகொட புனித மத்தியூஸ் கல்லூரி), பவளமலர் குமாரசாமி, சிவமணி செல்லத்துரை, திருமதி ரட்ணமலர் ராஜேந்திரம் மற்றும் முருகையா கனகரட்ணம் (லண்டன்), திருமதி மனோன்மணி மகேந்திரநாதன் (முன்னை நாள் லிகிதர் காரைநகர் யாழ்ரன் கல்லூரி, வட்டு இந்து கல்லூரி) காலஞ்சென்ற நாகராஜா கனகரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருமதி கண்மணி லோறன்ஸ், திலகவதி செல்வரட்ணம் (ஆசிரியை, மானிப்பாய் இந்துக்கல்லூரி) மற்றும் திருமதி மைத்திலி ராஜரட்ணம் (ஆசிரியர், தெமட்டகொட புனித மத்தியூஸ் கல்லூரி), காலஞ்சென்ற இராஜேந்திரம் நமசிவாயகம்,மற்றும் திருமதி சொர்ணமலர் முருகையா (லண்டன்), காலஞ்சென்றவர்களான மகேந்திரநாதன் கந்தையா (இலங்கை நீர்ப்பாசன திணைக்களம்) திருமதி லக்கி இமல்டா நாகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி ஜயந்தி ரெனோல்ட் (குடி வரவு குடியகல்வு இணைப்பாளர் கனடா) அருட்திரு. ஜெயக்குமாரன் அன்னப்பா (முன்னாள் தலைவர் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை), அன்னப்பா ஜெயசீலன் (கொழும்பு), அன்னப்பா ஜெயராஜன் (இடைநிலை மேற்பார்வையாளர் யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), ஜெயரூபன் அன்னப்பா (முகாமையாளர் கோர்ப மருத்துவ ஸ்தாபனம்,லண்டன்), ஜெயசந்திரன் அன்னப்பா (பாதுகாப்பு அமைச்சு, கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயசீலன் ரெனோல்ட் (முன்னாள் விரிவாக்க உத்தியோகத்தர் உணவு விவசாய அமைப்பு, கனடா) திருமதி. இந்திராணி ஜெயக்குமாரன் அன்னப்பா (முன்னாள் உப அதிபர் யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை) காலஞ்சென்ற திருமதி ஜெயந்தோ ஜெயசீலன் மற்றும் திருமதி இவாஞ்சலீன் ஜெயராஜன் (ஆசிரியை யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை) திருமதி கரல் ஜெயரூபன் அன்னப்பா (முகாமையாளர் கோர்ப மனோநிலை மருத்துவ ஸ்தாபனம்,லண்டன்) திருமதி சிவானந்தி ஜெயசந்திரன் (அஞ்சல் இலாகா, கனடா) கிறிசாந்தி ராஜரட்ணம் (அவுஸ்திரேலியா), திருமதி டெலனி பத்மநாதன் (லண்டன்), திருமதி துஷ்யந்தகௌரி விஸ்வநாதன் (மலேசியா) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற ரமேஷ் ராஜேந்திரம் மற்றும் சுரேஸ் ராஜேந்திரம் (லண்டன்), ரஜினி ராஜேந்திரம் (லண்டன்), திருமதி துளசி ராமலிங்கம் (மலேசியா) ஆகியோரின் பெரிய தாயாரும், வைத்திய கலாநிதி திருமதி டிலினி ரவிராஜன், ரவிராஜன் ஷண்முகலிங்கம் (லண்டன்), வைத்திய கலாநிதி திருமதி டிலானி ராஜ்குமார், வைத்திய கலாநிதி ராஜ்குமார் விஜேந்திரதாஸ் (கனடா), வைத்திய கலாநிதி டினேஷ் ஜெயக்குமாரன், திருமதி வைதேகி டினேஷ் (கொழும்பு), டிலக்ஷன் அன்னப்பா ஜெயக்குமாரன் (கணக்காய்வாளர்), திருமதி பிறியந்தி மதுமித்தா டிலக்ஷன் (கணக்காய்வாளர்,லண்டன்) டாலிங்ரன் தபத்தா ஜெயராஜன் (அப்பிற் கல்லூரி), டிரோஷன் ஜெயசீலன் (ஸ்ரான்டர்ட் சாட்டட் வங்கி கொழும்பு), டிலீஷா ஜெயசீலன் (இந்தியா), கோர்ஸ்டி ஜெயரூபன் (சட்டத்தரணி லண்டன்), பொபி ஜெயரூபன் (லண்டன்), ஏமி ஜெயரூபன் (லண்டன்), டிலாந்தி ஜெயசந்திரன் அன்னப்பா (கனடா), விஜித்தா ராமலிங்கம், சங்கீத்தா ராமலிங்கம், கிறிஷீத்தா ராமலிங்கம் ஆகியோரின் பேர்த்தியாரும், பேபி கேஷியா டினேஷினின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வைத்தியசாலை வீதி, மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நாளை மறுதினம் (14.06.2012) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, நல்லடக்க ஆராதனை பி.ப. 3 மணிக்கு மானிப்பாய் திருச்சபையில் நடைபெற்று, மானிப்பாய் பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மானிப்பாய் வடக்கு. (19206)

தகவல்: அருட் திரு. ஜெயக்குமாரன் அன்னப்பா (மகன்).

# சட்டவிரோத மின்சாரம் செலுத்தினர் அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூவருக்கு யாழ். நீதிமன்றம் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. இந்தக் குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்து தன்னை நிரபராதியெனத் தெரிவித்த மேலும் ஒருவரின் வழக்கு விளக்கத்துக்காக ஒத்திவைக்கப்பட்டது.

யாழ். கச்சேரி-நல்லூர் வீதி, கோண்டாவில் தெற்கு, கோப்பாய் தெற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த நால்வரைப் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களை யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்னிலைப்படுத்தினர். மூவர் தங்கள் பிரதான குற்றத்தை ஒப்புக்கொண்டு தலா 10 ஆயிரம் ரூபா அபராதமும், 74 ஆயிரத்து 206 ரூபாவை மின்சார சபைக்குத் தண்டப்பணமாகச் செலுத்தினர். நிரபராதியெனத் தெரிவித்தவர் தொடர்பான வழக்கு எதிர்வரும் 5ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (16-4)

## வரணி சுட்டிபுரம் 10 ஆம் திருவிழா கலை நிகழ்வு

நாதஸ்வரக்கச்சேரி மற்றும் இலங்கை முன்னணி இசைக்குழுவான மெகா ரெனச் இசையில் தென்னிந்திய தமிழக, மலேசியா, கனடா போன்ற இடங்களில் பாடிய பிரபல பாடகர் இராஜ ராஜ சோழன் மற்றும் ஈழத்து இசைக் கலைஞர்கள் பலருடன் சுகுமாரும் இணைந்து நிகழ்த்தும் இன்னிசை கானம்.

திகதி:- நாளை (13.06.2012) புதன்கிழமை

இடம்:- வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலய முன்றிலில்.

10 ஆம் திருவிழா உபயகாரர்

(சி/572)(15-14)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ். வண்ணார் பண்ணை வடகிழக்கு கலட்டி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறவுள்ளன. 25ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவமும், 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (16)

## மோட்டார் சைக்கிள்கள் தேவை

பாவித்த மோட்டார் சைக்கிள்கள் விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். **T.P 0777705307**

(19199) (15-14)

## சிறுநீரகம் தேவை

13 வயதுடைய சிறுவனுக்கு B+ பொசிட்வ் சிறுநீரகம் தேவை. (30 வயதுக்குள்) தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

உடனடியாகத் தேவை.

தொடர்பு
0774474847 / 775243254

## மணமகள் தேவை

யாழ். இந்து 1980 ஆம் ஆண்டு திருவோண நட்சத்திரம் (பாவம் குறைந்த) சொந்தமாக தொழில் நிறுவனம் நடத்திவரும் படித்த மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.

தொடர்பு:
**0774125422**

# மரண அறிவித்தல்

## க.மு.விக்கினேஸ்வரன்

(டுசிற்றா தனியார் நிறுவனத்தினதும் எவரிஜ் ஹோல்டிங் தனியார் நிறுவனத்தினதும் முகாமைத்துவ பங்காளர்)



காரைநகர், களபூமி பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், தற்போது கொழும்பு, இல. 34, விவேகானந்தா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட க.மு.விக்கினேஸ்வரன் நேற்று முன்தினம் (10.06.2012) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எம்பெருமாள் கந்தப்பர் முத்தையாப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் புதல்வனும், சிவதாரணியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற க.மு. தர்மராஜா (தர்மராஜா நிறுவனம், கிளிநொச்சி, பரந்தன்) மற்றும் புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான பாலா கனகலிங்கம் (பாலா யசோ அன் கம்பனி யாழ்ப்பாணம்), பாலச்சந்திரன் (ஹொண்டா பாலா) மற்றும் இராஜேஸ்ரி (கனடா), தம்பிராஜா (தம்பி ஹொல்டிங் தனியார் நிறுவனம், தம்பி கொமினிக்கேசன், கொழும்பு, யாழ்ப்பாணம்), பாலேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியம் (கனடா), தியாகராஜா (கனடா), வசந்தி (கொழும்பு), அம்பிகைபாகன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (14.06.2012) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு பொறளை ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*இல 34,*
*விவேகானந்தா வீதி,*
*கொழும்பு 06*

தகவல்
*க.மு. தம்பிராஜா*
*(தம்பி)*

(19201) (15-14)

## பொதுக்கூட்டம்
## சாவகச்சேரி பெரியமாவடி உழுத்தம்புலம் விநாயகர் ஆலயம்

மேற்படி ஆலயத்தின் பரிபாலனம் தொடர்பான பொதுக் கூட்டம் 15.06.2012 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபை தெரிவும் பெரும் பொங்கல் தொடர்பான ஆலோசனைகளும் இடம்பெறும்.

*அனைவரையும் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

ஆலய பரிபாலன சபை

(சி/9321)(15,06)

## மாட்டைக் காணவில்லை

சிவப்பு வெள்ளை நிறமுடைய கறவைப் பசுவை கடந்த மூன்று நாள்களாகக் காணவில்லை. வாலில் குஞ்சம் இல்லை, கட்டை வால், தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். **தொலைபேசி எண்:- 0773087795**

57 அம்மன் வீதி, கந்தர்மடம்.

(சி/574) (15-14)

## காணி விற்பனைக்கு உண்டு

*இல.30/2, கனகரட்ணம் வீதி அரியாலையில் 03 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.*

தொடர்புகளுக்கு: **077 715 9463, 021 321 7918**

(19146)


## கிறிஸ்தவ சேமக்காலைக்குப் பொருத்தமான காணி கோரல்

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கோண்டாவில் இந்து மயானங்களுக்கு அருகில் கிறிஸ்தவ சேமக்காலை அமைப்பதற்கு பொருத்தமான காணி கொள்வனவு செய்ய சபை தீர்மானித்துள்ளது. எனவே மேற்படி பொருத்தமான காணியை விற்பனை செய்ய விரும்புபவர்கள் தலைவர், நல்லூர் பிரதேச சபை அல்லது கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்

**தொலைபேசி இலக்கம் : 021 3202207, 021 2222700**

(சி/570)(6-9-8)

# மரண அறிவித்தல்



## ராஜலக்ஷ்மி ஞானசம்பந்தன்

(இளைப்பாறிய யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜலக்ஷ்மி ஞானசம்பந்தன் 10.06.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னம்பலம், ராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஞானசம்பந்தனின் அன்பு மனைவியும், யசோ (ஆசிரியை கொ/முஸ்லிம் மகளிர் கல்லூரி) அவர்களின் பாசமிகு தாயாரும், புவிராஜ் (பிரதிப் பணிப்பாளர் - திறைசேரி, கொழும்பு), அவர்களின் அன்பு மாமியாரும், ஆர்த்தியின் அன்புப் பேத்தியாரும் மற்றும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா, நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயபாலனின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று 12.06.2012 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இறுதிக்கிரியைகளுக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

(சி/694)

தகவல் : குடும்பத்தினர்
28-2/5, வண்டவற் பிளேஸ், தெகிவளை


## அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பு திகதி மாற்றம்

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு கொடி வாரத்தை முன்னிட்டு எமது சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் 11.06.2012ஆம் திகதி நடத்தப்படவிருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 15.06.2012 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது. மேற்படி சீட்டிழுப்பு குறிப்பிட்ட தினத்தில் எமது பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்.

(19195)(6-9)

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



அன்னை மடியில்
19 ★ 05 ★ 1944

ஆண்டவன் அடியில்
13 ★ 05 ★ 2012

அமரர் **செல்லத்துரை யோகநாதன்**

கடந்த (13.05.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் செல்லத்துரை யோகநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.06.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மரணச்சடங்கில் பங்கு கொண்டோருக்கும் அவரது மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளில் உதவி செய்தவர்க்கும், அனுதாபம் தெரிவித்தவர்களும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்

குடும்பத்தினர்

(19198)(8-14)

# இஸ்ரேலில் இலங்கை அகதிகள் மூவர் கைது

இஸ்ரேலில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த மூன்று இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எனினும், அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விடயம் தெரியவரவில்லை.

இஸ்ரேலியப் பொலிஸார் நடத்திய சோதனையின் போது இவர்கள் உட்பட தென் சூடான், நைஜீரியா மற்றும் ஐவரிக்கோஸ்ட் ஆகிய நாடுகளின் சுமார் 150 அகதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இஸ்ரேலின் உள்துறை அமைச்சில் தம்மைப் பதிவு செய்துகொள்ளாமை காரணமாகவே கைதுசெய்யப்பட்டனர் என்று இஸ்ரேலின் உள்துறை அமைச்சர் எலி இசாய் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் ஒரு வாரத்துக்குள் சுயமாகவே இஸ்ரேலை விட்டு வெளியேறுவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ)

# நல்லூரில் சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்களைப் பாதுகாக்க புதிய கழகம்

## இன்று அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

நல்லூரில் சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக நல்லூர் வரலாற்றுக் கழகம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்யவுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார்.

இந்தக் கழகத்தை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூரில் பேணிப் பாதுகாக்க வேண்டிய பிரசித்தமான இடங்கள் பல உள்ளன. ஆனால் அந்த இடங்கள் தனியார் பாவனையில் உள்ளதால் அவைகளைப் பாதுகாப்பதில் சிக்கல் நிலை உள்ளது என்றார்.

அதன் காரணமாகவே இந்தக் கழகத்தை நிறுவி அதனூடாக இடங்களைப் பாதுகாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது - என்றும் முதல்வர் கூறியுள்ளார்.

எனவே இது தொடர்பாக இன்றைய கூட்டத்தில் அறிஞர்கள், ஆர்வலர்கள் பங்குபற்றி ஆலோசனைகளை வழங்குமாறு முதல்வர் கேட்டுள்ளார். (ஒ-16)

### விமானத்தில் தகராறு செய்தவருக்கு விளக்கமறியல்

துபாயிலிருந்து இலங்கைக்குப் பயணித்த விமானம் ஒன்றில் மதுபோதையில், ஏனைய பயணிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடந்து கொண்டார் என்ற குற்றஞ்சாட்டப்பட்ட நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டவேளை இவரை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

விமானப் பயணத்தின் போது மதுபோதையில் ஏனைய பயணிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாகவும் விமானத்திலுள்ள கமராவுக்கு சேதம் எற்படுத்தியதாகவும் இந்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (வ)

### குவைத்தில் ஆள்மாறாட்டம்; ஐவர் கைது

குவைத்தில் ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்ட ஐந்து இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 'த எரப் நியூஸ்' இணையத்தளம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

பொலிஸாரைப்போல் வேடம் அணிந்த குறித்த ஐந்து பேரும், ஏனைய மூன்று ஆசிய நாட்டவர்கள் தங்கி இருந்த தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றை உடைக்க முற்பட்ட வேளை கைது செய்யப்பட்டனர். அங்கிருந்து தொலைபேசி மற்றும் பணத்தொகையைக் கொள்ளையிட அவர்கள் முயற்சித்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும் குறித்த ஐந்து இலங்கையர்களுள் ஒரு பெண்ணை மூன்று ஆசிய நாட்டவர்கள் கடத்தி வைத்திருந்ததனர், அதற்கு பழிவாங்கும் வகையிலேயே அவர்கள் இவ்வாறு செயற்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# ஒலிபெருக்கி பாவனைக்கு அனுமதிப்பத்திரம் அவசியம்

## பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

ஒலிபெருக்கிகள் நிரந்தரமாக ஆலயங்களில் பொருத்தப்பட்டு பாவிப்பதாயினும் தற்காலிகமாக பாவிப்பதாயினும் உரிய அனுமதி பெறப்பட்டு உரிய நேரக்கட்டுப்பாட்டுக்கு அமைவாகவும் உரிய ஒலிச் செறிவுக்கமைவாகவும் பயன்படுத்தப்படவேண்டும். கடந்த மாதம் 25 ஆம் திகதி பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களால் மாணவர்களின் கல்விக்கும் வயோதிபர்களுக்கும், நோயாளர்களுக்கும் சத்தம் மிகுதியால் அசௌகரியம் ஏற்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதனை மீறிச் செயற்படுவோர் மீது பாதிக்கப்படுவோர் தத்தமது பிரிவிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு நேரிலோ, தொலைபேசி மூலமாகவோ முறையிட்டால் முறைப்பாடு இரகசியமாகப் பேணப்பட்டு நேரில் சென்று பொலிஸாரால் உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு (021 222 4022) அல்லது அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு (021 221 2434) அறிவிக்கலாம். (ந)

### இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது

இந்தியக் கடற்பகுதியில் அத்துமீறிப் பிரவேசித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கை மீனவர்கள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தூத்துக்குடிக் கடற்பரப்பில் இவர்கள் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர். இலங்கைக் கொடியுடன் இவர்களின் படகு நின்றபோதே குறித்த ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

அதன்பின்னர் கைது செய்யப்பட்ட மீனவர்கள் தூத்துக்குடி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டனர். இவர்கள் ஐவரும் நீர்கொழும்பைச் சேர்ந்த சிங்கள மீனவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)




ஜேர்மனில் போகுனில் மற்றும் கூகன் நகரங்களில் தியாகி பொன் சிவகுமாரனின் நினைவுநாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. நினைவு நிகழ்வில் கலந்துகொண்ட இளையோர்கள், பொதுமக்கள், தியாகி பொன் சிவகுமாரனின் திருவுருவப் படத்துக்கு சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத்தினர். அத்துடன் கூகன் நகரில் ஈழத்தமிழர்களின் சிறுவர்கள் அவல நிலை குறித்து ஜேர்மனிய மக்களுக்கு எடுத்துக்காட்டும் வகையில் 'அவர்களுக்கும் ஆசைகள் உண்டு' எனும் நிகழ்வும் நடைபெற்றது. அங்கே இந்த விடயம் சார்ந்த துண்டுப்பிரசுரம் மக்களுக்கு வழங்கப்பட்டு இளையோர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது.

# அண்ணா கலைமன்ற புதிய கட்டடத்துக்கு அடிக்கல்

சுழிபுரம், ஜூன் 12

பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினர் சங்கப் பணிமனைக்கு இருபத்தைந்து லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடப் பணிகளை ஆரம்பித்துள்ளனர். அண்ணா கலை மன்றத்தினரின் ஏற்பாட்டில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது.

அமரர் பெ. கனகரத்தினம் வழங்கிய நிலத்தில் இந்தக் கட்டடம் கட்டப்படவுள்ளது. கட்டட வளவின் சுற்றுமதில் கட்டுவதற்காக பண்ணாகம் ஓய்வூதியர் திருமதி பொன்னுத்துரை ரூபா இரண்டரை லட்சம் பணத்தை நன்கொடையாக அண்ணா கலை மன்றத்துக்கு வழங்கியுள்ளார். (ந-28)

# வைத்தியசாலையில் உண்மையில் நடந்தது என்ன?

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரும்புக் கேடர்கள் மற்றும் மின்பிறப்பாக்கி என்பன வெளியாரால் கொண்டு செல்லப்பட்ட விவகாரத்தில் முறைகேடுகள் ஏதும் இடம்பெறவில்லை என்று பணிப்பாளர் மருத்துவர் பவானி பசுபதிராஜா விளக்கமளித்துள்ளார்.

ஆனால், இந்த இரு பொருள்களும் வைத்தியசாலையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டவிதமும் அது குறித்துத் தாங்கள் கேள்வி எழுப்பியதன் பின்னர் அவை திரும்பக் கொண்டுவரப்பட்டமையும் சந்தேகத்துக்கு இடமானதாகவே இருக்கின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளையினர் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையில் இருந்து பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டமை குறித்து பணிப்பாளர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள விளக்கக் குறிப்பில் கூறியுள்ளதாவது:-

கடந்த மாதம் சுகாதார அமைச்சில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்திருந்த சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர், ஜப்பானின் நிதி உதவியில் அமைக்கப்படும் புதிய கட்டடத் தொகுதியை திறப்பதற்கு அரசியல் பிரமுகர்களும் உயரதிகாரிகளும் வருகை தரவுள்ளனர் என்று கூறியதுடன் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பணித்தார்.

அதற்கமைய வைத்தியசாலை பதவி நிலை உத்தியோகத்தர்களுடனும் அலுவலக உத்தியோகத்தர்களுடனும் 29.05.2012 அன்று அலுவலக மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இதில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவும் நிலைமையின் அவசியத்தையும் அவசரத்தையும் கருத்திலெடுத்தும் பணிப்பாளர் என்ற வகையில் எனக்குள்ள அதிகாரங்களுக்கு அமையவும் நிர்வாக உத்தியோகத்தரால் குறித்த இரும்புக் கேடர்கள் விற்பனை செய்யப்பட்டன.

தமது வாகனத் தரிப்பிட நிர்மாணத்துக்கு இவை உதவும் என்று கேட்கப்பட்டதன் அடிப்படையில் அவை திரும்பப் பெறப்பட்டன.

இதேபோன்று, கட்டடப் பராமரிப்புப் பிரிவில் நீண்ட காலமாகப் பாவனையில் இல்லாத மின்பிறப்பாக்கியும் எனது அனுமதியுடன் திருத்துவதற்காக தொழில் தகைமை பெற்ற ஒருவரிடம் அதன் இயங்கு தன்மையைப் பரிசோதிப்பதற்காக கையளிக்கப்பட்டு அதன் நன்நிலை உறுதிப்படுத்தப்பட்டு மீளப்பெறப்பட்டது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் இதில் எந்தவிதமான முறைகேடுகளும் இடம்பெறவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டு எனக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் சீரான நடைமுறைகளும் அபிவிருத்தித் திட்டங்களும் பொதுமக்களுக்கே நன்மை பயக்குபவையாகும். இதைச் சீர்குலைக்கும் வகையிலேயே ஒரு சில நபர்களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளமை வெளிப்படை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். கிளை நிர்வாகத்தினர் உதயனுக்கு வழங்கிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை யாவது:-

யாழ். போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் மருத்துவர் தேவநேசன் காலத்தில் ஜப்பானிய உதவியில் அமைக்கப்பட்ட சத்திர சிகிச்சைக்கூட கட்டமைப்பு ஆய்வு கூடம் மற்றும் கதிர் இயக்கவியல் கட்டமைப்பு என்பன பூர்த்தி செய்யப்பட்டன. அவற்றை ஆரம்பித்து வைப்பதற்காக ஜனாதிபதி வருகை தரவுள்ளார். அதை முன்னிட்டு வைத்தியசாலை சுற்றுச்சூழலை துப்புரவு செய்வது தொடர்பான கூட்டம் 29.05.2012 அன்று 11.30 மணிக்கு பணிப்பாளர் நடத்தினார்.

அன்றைய தினம் பிற்பகல் 2.55 மணிக்கு மின்பிறப்பாக்கி வைத்தியசாலை மேற்கு வாசல் ஊடாக எடுத்துச்செல்லப்பட்டது. வைத்தியசாலைக்கு தலையணைகளை எடுத்து வந்த லொறியில் மின்பிறப்பாக்கி எடுத்துச் செல்லப்பட்டது.

உண்மையில் வைத்தியசாலையில் உள்ள மின்பிறப்பாக்கி ஒன்றைத் திருத்துவதாயின் பகிரங்க கேள்வி அறிவித்தல் கோரப்படவேண்டும். ஆனால் கணக்காளருக்கு ஒருவித அறிவித்தலும் கொடுக்காமல் நிர்வாக உத்தியோகத்தரும் பணிப்பாளரும் தமக்குத் தெரிந்த ஓட்டுமடத்திலுள்ள 'பத்மா' அச்சகத்துக்கு மின்பிறப்பாக்கியை அனுப்பி வைத்துள்ளனர்.

மின்பிறப்பாக்கி அவசரமாகத் தேவைப்படுமிடத்து கணக்காளருக்குத் தெரியப்படுத்தாமலே பணிப்பாளரே இத்தகைய நடவடிக்கையை எடுக்க முடியும். ஆனால், வைத்தியசாலையில் ஒரு மின்பிறப்பாக்கி ஏற்கனவே செயற்பட்டு வருகிறது. அதே சமயத்தில் மின்சார சபை தொழில்நுட்பவியலாளர்கள் வைத்தியசாலையில் பணியில் இருக்கிறார்கள். இத்தகைய நிலையில் வெளியில் அவசரமாக அந்த மின்பிறப்பாக்கியை திருத்தக் கொடுப்பதற்கு என்ன தேவை ஏற்பட்டது?

அதே தினத்தன்று மாலை 5.45 மணியளவில் வைத்தியசாலையின் கிழக்கு வாசல் ஊடாக 10,000 ரூபா பெறுமதியான 16 இரும்புக் கேடர்கள் வெளியே கொண்டு செல்லப்பட்டன. இவற்றை விற்பதாயின் பகிரங்க ஏலம் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

31ஆம் திகதி 3 மணியளவில் இந்தக் களவுகள் தொடர்பாக வைத்தியசாலை ஊழியரினால் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது. இந்தச் செய்தியைக் கேட்டவுடனேயே கணக்காளர் அலுவலகத்திற்குச் சென்று பற்றுச் சீட்டை கேட்டபோது அவர் நிதிப் பிரிவினர் சகலரிடமும் விசாரித்த பின்னர் இவ்வாறான விற்பனை ஒன்றும் நடைபெற்றதற்கான ஆதாரம் ஏதுமில்லை என்று தெரிவித்தார். அதன் பின்னர் நிர்வாக உத்தியோகத்தரிடம் கேட்டபோது அவர் தன்னிடம் இதற்கான பணம் உள்ளது என்று கூறினார்.

இதனை அடுத்து, இத்தகைய செயல்கள் சட்டத்திற்கு முரணானவை என்று கூறிய நாம் அதே தினத்தன்று மாலை 6 மணிக்கு முன்னதாக பொருள்கள் மீளக்கொண்டு வரப்படாவிடின் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம் என்று மிரட்டியதை அடுத்து நிர்வாக உத்தியோகத்தர் உள்ளகத் தொலைபேசி அழைப்பு மூலம் பீரிஸ் மற்றும் கருணை ஆகியோரிடம் இரும்புக் கேடர்களை உடனடியாக மீளக் கொண்டுவரும்படி உத்தரவிட்டார்.

அன்றைய தினம் பணிப்பாளர் விடுப்பில் கொழும்பில் இருந்தார். மறுநாள் 01.06.2012 அன்று மின்பிறப்பாக்கியும் அதிகாலை வேளை மேற்கு வாசல் வழியாக லான்ட் மாஸ்டர் மூலம் கொண்டுவரப்பட்டு ஒருவரிடமும் உத்தியோகபூர்வமாகக் கையளிக்காமல் குப்பையான பகுதியில் போடப்பட்டிருந்தது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

# வடமாகாண மகளிர் ஹொக்கிப் போட்டி உடுவில் மகளிர் கல்லூரி சம்பியன்











வட மாகாண கல்வித்திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி 5 ஆவது தடவையாகவும் சாதனையுடன் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற உடுவில் மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம்பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளின் வீராங்கனைகளையும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன், வட மாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் எ.அண்ணாத்துரை,வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி கல்விப் பணிப்பாளர் மு.நடராசா மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம். (ங-86)

## வடமாகாண பெருவிளையாட்டுகள்

### முருங்கன் ம.வியில் எல்லே

வலி. வடக்கு, ஜூன் 12

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படவுள்ள ஆண்களுக்கான எல்லேப் போட்டிகள் எதிர்வரும் 17 ஆம் ,18ஆம் திகதிகளில் மன்னார் முருங்கன் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம் எதிர் வடமராட்சி வேலாயுதம் மகா வித்தியாலயம்.

கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலயம் எதிர் மன்னார் புனித வளனார் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை.

கிளிநொச்சி மத்திய கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

மன்னார் பாத்திமா மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு மகா வித்தியாலயம்.

கிளிநொச்சி அக்கராயன் குளம் மகாவித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு மத்திய கல்லூரி.

வவுனியா கல்மடு மகா வித்தியாலயம் எதிர் மன்னார் சென்.ஆஷா மகா வித்தியாலயம்.

முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயம் எதிர் வவுனியா இந்துக் கல்லூரி.

இரண்டாம் சுற்றில் இருந்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மோதவுள்ளது. 2011 ஆம் ஆண்டு ஹாட்லிக் கல்லூரி மாகாணச் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ங-86)

## கரப்பந்தாட்டம் மன்னார் பொது மைதானத்தில்

வலி.வடக்கு,ஜூன்12

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம்,16ஆம்,17ஆம் திகதிகளில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எதிர் கிளிநொச்சி பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை.

முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம் எதிர் மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.

யாழ்ப்பாணம் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம் எதிர் வவுனியா பரக்கும்பா மகாவித்தியாலயம்

மன்னார் எருக்கலம்பிட்டி மகாவித்தியாலயம் எதிர் கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்.

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

வவுனியா ஸ்ரீசுமணா மகா வித்தியாலயம் எதிர் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம்.

முல்லைத்தீவு அனிச்சையன் குளம் தமிழ் வித்தியாலயம் எதிர் வவுனியா கிடாய்ச்சூரி மகா வித்தியாலயம்.

இரண்டாம்சுற்றில் இருந்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மோதவுள்ளது.

இதுவரை நடைபெற்ற நான்கு போட்டிகளில் முதல் மூன்று போட்டிகளில் யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலய வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் கடந்த ஆண்டு மாகாண சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்ட போதிலும் இம்முறை இருபாடசாலைகளும் போட்டியில் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (86)

## ஹொக்கி அணித் தெரிவுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

இலங்கை பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் எற்பாட்டில் தேசிய மட்டத்திலான 17 வயதுப் பிரிவு ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் எதிர்வரும் 17ஆம் 18 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளன.



இந்தப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான யாழ் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான தெரிவுப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலை அணிகள் உடனடியாக யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவருடன் (அதிபர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி) தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ங-86)

### இன்றைய ஆட்டம்

யாழ்.மாவட்ட தாச்சிச்சங்க ஆதரவுடன் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக்கழகம் தென்மராட்சி பகுதிக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் நடத்திவரும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி கிழக்கு துர்க்கா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கைதடி மின்னொளி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ங-24)

## வலிகாம வலயத் தடகளப் போட்டிகள்

# 19 வயதுப் பிரிவில் வெற்றிபெற்ற வீராங்கனைகள்

வலி.வடக்கு,ஜூன் 12

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17வயதுப்பிரிவு பெண்களுக்கான தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-

**100 மீற்றர்**

ஜீவரத்தினம் ஆசிர்விக்சாலினி(இளவாலை புனித கன்னியர் மடம் பாடசாலை)

ஜேசுநாயகம் ஆன் ஜெசிந்தா (மாதகல் சென் ஜோசேப் மகா வித்தியாலயம்)

நாகரத்தினம் கம்சிகா (இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

**200 மீற்றர்**

அருமைநாயகம் அனெற் (மாதகல் சென் ஜோசேப் மகா வித்தியாலயம்),துரைசிங்கம் சுகன்யா (இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்),ஜேசுநாயகம் ஆன் ஜெசிந்தா(மாதகல் சென் ஜோசேப் மகா வித்தியாலயம்)

**400 மீற்றர்**

அருமைநாயகம் அனெற் (மாதகல் சென்.ஜோசேப் மகா வித்தியாலயம்), நாகரத்தினம் கம்சிகா (இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், புலேந்திரகுமார் நளாயினி(சுன்னாகம் ஸகந்தவரோதயாக் கல்லூரி).

**800 மீற்றர்**

ஆன்பற்றிசியா (மாதகல் சென் ஜோசேப் மகா வித்தியாலயம்)சிவயோகராசா றினோஜா(தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்)புலேந்திரகுமார் நளாயினி (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

**1500 மீற்றர்**

ஆன் பற்றீசியா(மாதகல் சென் ஜோசேப் மகாவித்தியாலயம்)

சுந்தரலிங்கம் சுகணி (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி)

சிவயோகராசா றினோஜா (தெல்லிப்பழை கட்டுவன் புலம் மகா வித்தியாலயம்.

**100 மீற்றர் தடை தாண்டல்**

இராச குலேந்திரன் கௌசிகா (மல்லாகம் மகா வித்தியாலயம்) ஜே. அனித்தா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), சிவபாலன் டிலாணி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

**400 மீற்றர் தடை தாண்டல்**

அருமைநாயகம் அனெற் மாதகல் சென்.ஜோசேப் மகா வித்தியாலயம்) இராச குலேந்திரன் கௌசிகா(மல்லாகம் மகாவித்தியாலயம்) இருதயதாஸ் டியூறியா (மாதகல் சென்.ஜோசேப் மகா வித்தியாலயம்).

**நீளம் பாய்தல்**

விஜயகுமார் பௌத்ரா (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம். தவகுலசிங்கம் சங்கீதா(சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)ரி.மேரிசாலினி (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**உயரம் பாய்தல்**

தவகுலசிங்கம் சங்கீதா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),துரைசிங்கம் சுஜர்னியா(இளவாலை மெய் கண்டான் மகா வித்தியாலயம்)

நவரத்தினசாமி சிவராசினி(உடுவில் மகளிர் கல்லூரி)

**முப்பாய்ச்சல்**

ரி.பிரதீபா(சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),

ஜே.அனித்தா(தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி) கே.றொசாந்தினி (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்,

**கோலூன்றிப் பாய்தல்**

மணிவண்ணன் ஹென்சிகா(அளவெட்டி அருணோதயாக் கல்லூரி)

ரி.அனித்தா(தெல்லிப்பழை,மகாஜனக் கல்லூரி), ராமேஸ்வரன் ஜனனி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி)

**குண்டு போடுதல்**

ஸ்ரீரஞ்சன் கோபிகை (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)செல்வரத்தினம் சுஜித்தா (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி), குகணேசன் மனோஜா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

**தட்டெறிதல்**

குணரத்தினம் திவாஞ்சினி (புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம்), ஸ்ரீரஞ்சன் கோபிகை(சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), ஜே.கலைவாணி)தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

**ஈட்டியெறிதல்**

ஜெயராசா சபீசனா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி)ஸ்ரீ ரஞ்சன் கோபிகை(சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி),ஜெயபாலன் அகிலா(மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

**4×100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

மாதகல் சென்.ஜோசேப் மகா வித்தியாலயம். இளவாலை புனித கன்னியர் மடம் மகா வித்தியாலயம். உடுவில் மகளிர் கல்லூரி

**4 து400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

மாதகல் சென்.ஜோசேப் மகா வித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி. (86)



# வெற்றியுடன் தொடங்கியது ஜேர்மனி

யூரோ கிண்ண கால்பந்துத் தொடரை ஜேர்மனி அணி வெற்றியுடன் தொடக்கியது. மரியோ ஹோம்ஸ் ஒரு கோல் அடித்து கை கொடுக்க, போர்த்துகல் அணியை 1-0 என்ற கணக்கில் நேற்று முன்தினம் வீழ்த்தியது.

உக்ரைனில் உள்ள லிவிவ் நகரில் நடந்த யூரோ கிண்ண கால்பந்துத் தொடருக்கான 'பி' பிரிவு லீக் ஆட்டத்தில், 'பிபா' தரவரிசையில் 3 ஆவது இடத்தில் உள்ள ஜேர்மனி அணி, 10 ஆவது இடத்தில் உள்ள போர்த்துக்கல் அணியை எதிர்கொண்டது.

ஆட்டத்தின் 44 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் பெப் அடித்த பந்து கோல் கம்பத்தில் மோதி களத்திற்குள் திரும்பியதால் ஜேர்மனி மயிரிழையில் தப்பியது. முதல்பாதி ஆட்டத்தில் போர்த்துக்கல் அணியால் உருவாக்கப்பட்ட உருப்படியான வாய்ப்பு இது மட்டுமே.

முதல்பாதியைப் பொறுத்தவரை, 63.7 சதவீத நேரம் பந்தை தன் கட்டுப்பாட்டில் வைத்து விளையாடியது மட்டுமே ஜேர்மனி வீரர்களிடம் குறிப்பிடத்தக்க விடயம். இதுவரை ஜேர்மனி விளையாடிய ஆட்டங்களில்மத்திய வரிசை இவ்வளவு மோசமாக இருந்தது இல்லை. அது மட்டுமல்ல முன்கள வீரர்கள் கடமைக்கு ஏனோதானோவென்று ஆடினார்கள். பந்தை யாருக்கு 'பாஸ்' கொடுக்கிறோம்? எதற்கு கொடுக்கிறோம்? இந்த 'பாஸை' கொடுப்பதினால் பயன் என்ன? என்பதையெல்லாம் ஜேர்மனி வீரர்கள் யோசித்ததாக தெரியவில்லை.பந்து தங்கள் காலை விட்டு சென்றால் போதும் என்ற நிலையே ஜேர்மனி வீரர்களிடம் காணப்பட்டது.

ஆட்டத்தின் 72 ஆவது நிமிடத்தில் ஜேர்மனி முதல் கோலை அடித்தது. இந்த கோலை மரியோ ஹோம்ஸ் தலையால் முட்டி அடித்தார். இதற்குப் பின்னர் வேறு கோல்கள் விழவில்லை. இந்த ஒரே கோல் மூலம் வெற்றி பெற்ற ஜேர்மனி 3 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது. [5]

**ஆட்டத்தின் போக்கு**

**கோல்கள்:**
ஜேர்மனி- 1
போர்த்துக்கல் 0
**பந்தை வசப்படுத்தி ஆடுதல்:**
ஜேர்மனி 61 சதவீதம்
போர்த்துக்கல் 39 சதவீதம்
**'கோர்னர்கள்':**
ஜேர்மனி- 2
போர்த்துக்கல் 6
**மஞ்சள் அட்டை:**
ஜேர்மனி- 2
போர்த்துக்கல்- 2

## தொடரும் வெற்றி

இந்த வெற்றியின் மூலம் 'பிபா', யூரோ போன்ற பெரிய தொடர்களில், ஜேர்மனி அணி, போர்த்துக்கல் அணிக்கு எதிராக விளையாடிய கடைசி மூன்று ஆட்டத்திலும் வெற்றி பெற்றது. கடைசியாக 2006 இல் நடந்த உலகக் கிண்ணத் தொடரின் 3 ஆவது இடத்துக்கான ஆட்டம் மற்றும் 2008 இல் நடந்த யூரோ கிண்ண காலிறுதியில் வென்றது.



ஜேர்மனி, போர்த்துக்கல் ஆட்டத்தில்...

# பதற வைத்தது இத்தாலி

யூரோ கிண்ணத் தொடரில், நடப்பு சம்பியன் ஸ்பெயின், இத்தாலி அணிகள் மோதிய விறு விறுப்பான லீக் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஸ்பெயின் அணி சுலப கோல் வாய்ப்புக்களை வீணாக்கியதால், வெற்றியை வசப்படுத்த முடியவில்லை.

ஐரோப்பிய அணிகள் பங்கேற்கும் 14 ஆவது யூரோ கிண்ண கால்பந்து தொடர் போலந்து, உக்ரைனில் நடக்கிறது. போலந்தில் உள்ள ஜிடன்ஸ்கில் நேற்று முன்தினம் நடந்த 'சி' பிரிவு லீக் ஆட்டத்தில் உலகின் நட்சத்திர அணிகளான ஸ்பெயின், இத்தாலி அணிகள் மோதின. முதல் பாதியில் இரு அணிகளும் ஆக்ரோஷமாக போராடிய போதும், முடிவு சரியாக இல்லாததால் கோல் அடிக்க முடியவில்லை.





**ஆட்டத்தின் போக்கு**

**கோல்கள்:**
இத்தாலி- 1
ஸ்பெயின்-1
**பந்தை வசப்படுத்தி ஆடுதல்:**
இத்தாலி- 35 சதவீதம்
ஸ்பெயின்- 65 சதவீதம்
**'கோர்னர்கள்':**
ஸ்பெயின்- 7
இத்தாலி- 2
**மஞ்சள் அட்டை:**
ஸ்பெயின்- 2
இத்தாலி -3



ஆட்டத்தின் 11 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் டேவிட் சில்வா அடித்த பந்து, இத்தாலி கோல் காப்பாளர் ஜியான்லுகி பப்பன் கையில் தஞ்சம் புகுந்தது. 13 ஆவது நிமிடத்தில் இத்தாலி வீரர் பிர்லோ அடித்த பந்தை ஸ்பெயின் கோல் காப்பாளர் இகெர் கெசிலாஸ் துடிப்பாக தடுத்தார். தொடர்ந்து இரு அணி வீரர்களும் வாய்ப்புக்களை வீணாக்க, முதல் பாதி கோல் எதுவும் அடிக்கப்படாமல் முடிந்தது. முதல்பாதியின் 45 ஆவது நிமிடத்தில் இத்தாலி வீரர் தியோகோ மோட்டா தலையால் முட்டி கோல் அடிக்க முயற்சித்தார். கோலை நோக்கி சென்ற பந்தை ஸ்பெயின் கோல் காப்பாளர் இகெர் கெசிலாஸ் அபாரமாக விழுந்து தடுத்துவிட்டார். ஸ்பெயின் மற்றும் இத்தாலி கோல் காப்பாளர்களால் வாய்ப்புக்கள் தகர்த்து எறியப்பட்டன.

இரு அணி வீரர்களாலும் முதல்பாதியில் கோல் அடிக்க முடியவில்லை. இரு அணியிலுமே அனுபவமிக்க ஜியான் லுகி பப்பன் (இத்தாலி, ஜுவான்டஸ்) இகெர் கேசிலாஸ் (ஸ்பெயின்,ரியல்மாட்ரிட்) கோல் காப்பாளர்களாக பணியாற்றியதால் கோல் அடிப்பது பெரும் சவாலாகவே இருந்தது.

இரண்டாவது பாதியில் ஆட்டம் சூடு பிடித்தது. 54 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் செர்ஜியோ ரமோஸிடம் இருந்து பந்தைக் கைப்பற்றிய பொலிட்டலி கோலை நோக்கி முன்னேறினார். இகெரும் பொலிட்லியும் நேருக்கு நேர் நிற்க, பந்தை அடித்தால் கோல் என்ற நிலை. அனுபவமில்லாத பொலிட்டலிக்கு எப்படி கோலாக்குவது என்ற தடுமாற்றம். இந்தச் சமயத்தில் பந்தைக் கோட்டை விட்ட ரமோஸ் பின்னாலேயே விரட்டி வந்து பொலிட்டலியிடம் இருந்து பந்தை கைப்பற்ற, ஸ்பெயின் மயிரிழையில் தப்பியது. ஆட்டத்தின் 56 ஆவது நிமிடத்தில் இத்தாலி அணியில் அதிரடி மாற்றம் செய்யப்பட்டது. பல கோல் வாய்ப்புக்களை கோட்டைவிட்ட பொலிட்டலிக்கு பதிலாக அன்டோனியா டி நடாலி களமிறக்கப்பட்டார். இதற்கு கைமேல் பலன் கிடைத்தது. பம்பரமாக சுழன்று விளையாடிய நடாலி, ஆட்டத்தின் 61 ஆவது நிமிடத்தில், ஒரு 'சூப்பர்' கோல் அடிக்க, இத்தாலி அணி 1-0 என்று முன்னிலை பெற்றது.

இந்த மகிழ்ச்சி சில நிமிடங்கள் மட்டுமே நீடித்தது. ஸ்பெயின் வீரர்கள் பதில் தாக்குதலுக்கு தயாராகினர். இனியஸ்டா, டேவிட் சில்வா, பாப்ரிகாஸ் அடங்கிய கூட்டணி புயல் என்று புறப்பட்டது. ஆட்டத்தின் 64 ஆவது நிமிடத்தில் சக வீரர் டேவிட் சில்வா கொடுத்த 'பாஸை' பெற்ற பாப்ரிகாஸ் ஒரு அற்புதமான கோல் அடிக்க, போட்டி 1-1 என்று சமநிலையை எட்டியது. இதற்கு பின்னர் இரு அணிகளும் கோல் அடிக்க கடும் முயற்சி மேற்கொண்டன.

பிற்பாதியில் 71 ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் செஸ்க் பெப்ரிகாஸ் வெளியே எடுக்கப்பட்டு செல்சியின் பெர்னான்டோ டார்ரஸ் களம் இறக்கப்பட்டார். ஆனாலும் ஸ்பெயினுக்கு பலன் கிடைக்கவில்லை. இறுதியில் ஆட்டம் 1-1 என்று சமநிலையில் முடிந்தது. இரு அணிகளும் தலா ஒரு புள்ளியை பகிர்ந்து கொண்டன. கடைசிக் கட்டத்தில் முரட்டு ஆட்டத்தில் ஈடுபட்டு, நடுவருக்கு அதிக வேலை கொடுத்தனர். [5]



## இவர்களுக்காக நிர்வாணம்

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் ஐரோப்பிய நாடுகளை சுழன்றடித்துக் கொண்டிருக்கும் நிலையில், மொடல் அழகி மிக்சோலா ஜேர்மன் அணிக்கு ஆதரவு தெரிவித்து நூதன முறையில் நிர்வாண போஸ் கொடுத்துள்ளார்.

யூரோ கிண்ண கால்பந்து தொடர் விறுவிறுப்பாக நடந்து வருகின்றது. இந்த ஆட்டத்தில் தனது நாட்டு அணி கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற கோரிக்கையுடன், ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த மொடல் அழகி மிக்சோலா நூதனமான முறையில் நிர்வாண போஸ் கொடுத்துள்ளார்.

மேலும் தனது கையில் தேசியக் கொடியை ஏந்தியபடி, பொதுமக்கள் முன்பு காட்சி அளித்து அனைவரையும் பரபரப்பில் ஆழ்த்தி உள்ளார் மிக்சோலா. [5]

# சாய்னா சம்பியன்





தாய்லாந்து திறந்த பட்மின்ரன் தொடரில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இறுதிப் போட்டியில் உலகின் 5 ஆம் நிலை வீராங்கனையான அவர் 19-21, 21-15, 21-10 என்ற கணக்கில் தாய்லாந்தை சேர்ந்த ராட்ஷானோக்கை வீழ்த்தினார்.

இந்த ஆண்டு அவர் கைப்பற்றிய 2 ஆவது சம்பியன் பட்டம் இதுவாகும். மார்ச் மாதம் 'சுவிஸ் திறந்த கிராண்ட் பிரீ'யில் தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது. [5]



# களிமண் ராஜா சாதனைச் சம்பியன்

பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் தொடரில் ஏழாவது முறையாக சம்பியன் பட்டம் வென்று புதிய வரலாறு படைத்தார் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால். நேற்றும், நேற்று முன்தினமும் என இருநாள்களாக நடந்த இறுதிப் போட்டியில் செர்பியாவின் ஜோகோவிச்சை வீழ்த்தி, அவர் இந்தச் சாதனைப் பட்டத்தை வென்றார்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில், பிரெஞ்ச் பகிரங்க கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் நடந்த ஆடவர் ஒற்றையர் இறுதியில் உலகின் நம்பர்-1 வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், நம்பர்-2 இடத்தில் உள்ள ஸ்பெயினின் ரபேல் நடாலை சந்தித்தார். விறுவிறுப்பான இந்தப்போட்டியில் நடால் 6-4, 6-3, 2-6, 1-2 என முன்னிலை வகித்திருந்த போது, மழை காரணமாக ஆட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று மீண்டும் ஆட்டம் நடைபெற்றது. இதில் அபாரமாக ஆடிய நடால், 4வது செற்றை 7-5 என போராடிக் கைப்பற்றினார். இறுதியில் நடால் 6-4, 6-3, 2-6, 7-5 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, ஏழாவது முறையாக (2005-08, 2010-12) சம்பியன்

**பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் தொடர்ந்து ஆறாவது முறையாக சம்பியனாகி சாதனை படைத்தார் ரபேல் நடால்.**

பட்டம் வென்றார். இந்த வெற்றியின் மூலம் தானே இன்னமும் களி மண் தரையின் மன்னன் என்பதை நடால் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளார். (ங)




# தலைமைக்குத் தகுதியானவர் டோனி

டெஸ்ட் தொடரில் அணித் தலைவராக டோனி பதவி வகிப்பதற்கு ராகுல் டிராவிட் ஆதரவு தெரிவித்துள்ளார். உலகக் கிண்ணம், 'ரி-20' கிண்ணம், ஒரு நாள் தொடரில் வெற்றி கண்ட டோனி, சமீபத்தில் நடைபெற்ற ஆஸ்திரேலியா, இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் தொல்வியைத் தழுவினார்.

இதன் காரணமாக டெஸ்ட் தொடருக்கான அணித் தலைவராக டோனி நீடிப்பதில் எதிர்ப்புகள் உருவானது. இந்த நிலையில் முன்னாள் வீரர் ராகுல் டிராவிட், வெற்றிக்கும், தோல்விக்கும் அணியின் செயற்பாடுதான் காரணம்.

டோனிக்கு இது மிகவும் சவாலான காலமாகும். ஆனால் தோல்வியில் இருந்து அவர் பல பாடங்களை கற்று வெற்றியை பெறுவார் என்ற நம்பிக்கை உள்ளது.

டெஸ்ட் தலைவராக அவருக்கு இன்னும் ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும். அதற்கு அவர் தகுதியானவர்.

டெஸ்டில் எனது இடத்தை நிரப்புவது யார் என்பதற்கு ஒருவரின் பெயரை மட்டும் கூற விரும்பவில்லை. அது நல்லதும் அல்ல. தற்போது உள்ள இளம் வீரர்கள் திறமையானவர்கள். இளம் வீரர்களில் 3 அல்லது 4 வீரர்கள் சிறப்பாக ஆடுகிறார்கள். அவர்களில் ஒருவர் எனது இடத்தை நிரப்பலாம் என்றார்.

(5)

**மாபெரும் கருத்தரங்கு**
**A/L 2012 பரீட்சைக்கானது**

ஒவ்வொரு பாடமும் 30 மணித்தியாலங்கள்

ஆரம்ப தேர்ச்சியிலிருந்து இறுதி தேர்ச்சி வரை

குறிப்பாக எம்மிடம் கல்வி பயிலாத எமது வழிகாட்டலில் இணையவிரும்பும் மாணவர்களுக்கானது

MCQ மற்றும் மாதிரி வினாக்களின் மீட்டல்

ஆரம்பம் : 16.06.2012 சனி. பி.ப. 2 மணி

பதிவுக்கான இறுதி நாள்
15.06.2012 மாலை 6 மணிவரை

கணக்கீடு R.சுகிர்தன் (Bcom) | பொருளியல் K.பிரதீபன் (B.B.A)

CAC
கந்தர்மடம் சந்தி, பலாலி வீதி, யாழ்...

(19194)(6-8-14)

Group Class
(மஞ்சவனப்பதி கொக்குவில்)

2013 A/L
மின்னியல்
14.06.2012 - 5.00pm
(வியாழன்)

2014A/L
பொறியியல்
13.06.2012 - 5.00pm(புதன்)

By:- M. கருணாநிதி
(0776183064)

**டொச் மொழி**

Deutsch language

ஜேர்மன்,சுவிஸ் நாட்டு மொழிகளை இலகுவான வழியில் கற்போம் வீடியோ, ஓடியோ மூலம் துறை சார் ஆசிரியர்களால் இலகுவான முறையில் கற்றுக்கொள்வோம்.

அறிமுக வகுப்பு இலவசம்

DMI COMPUTER EDUCATION

மேலதிக விபரங்களுக்கு.

(19143)

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம்
No.113, கன்னாதிட்டி வீதி.
Tel.: 021-222 4403

நெல்லியடி.
M.M.V. வீதி,
(மத்திய மகாவித்தியாலயம் முன்பாக)
Tel. : 021-226 2470

**அலுவலர் தேவை**

MyWay நிறுவனத்தில் பணிபுரிய O/L அல்லது A/L படித்த 18 முதல் 28 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் 13.06.2012 புதன்கிழமை காலை 9.00 முதல் 10.00 மணிவரை சுயவிபர கோவையுடன் நேரில் வரவும்.

சம்பளம் : 8000 இற்கு மேல்

MyWay
182, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

(19145)

077 33 63 456

**நேற்றுவரை 21 குடும்பங்கள் ஆஸ்திரேலியா பறந்தன**

கடந்த ஒருவருடத்தில் எமது சட்ட ஆலோசனையைப் பெற்று இது வரை 21 குடும்பங்கள் ஆஸ்திரேலியா சென்றமை எமது தன்னிகரில்லா சாதனையாகும்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV82703)
(முன்மாதிரியான விசா ஆலோசனை

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016.
115எ இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.
0212285544.
22 A FRANK FORT PLACE,
BAMBALAPITTY
0112508443



(19190) (15-06)

504HAMPTON
STREET,
MALBORNE
AUSTRALIA
0061390437100

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து திருஞானசம்பந்தன்

(முன்னாள் மூளாய், கூட்டுறவு வைத்தியசாலை ஊழியர்)



தொல்புரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து திருஞானசம்பந்தன் (சம்பந்த மூர்த்தி) நேற்று (11.06.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - நாகமுத்து தம்பதியரின் மூத்த புதல்வனும் தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சுபாகரன் (டென்மார்க்), சுபாஜினி (மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை), சுபரூபன் (முன்னாள் முகாமையாளர் சங்கானை பல.நோ.கூ.சங்கம்- காரைநகர், சிற்றூர்தி சேவை மினிபஸ் உரிமையாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியதேவி (டென்மார்க்), திருமால் (வைத்தியர், கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை), சோமநிதி (ஆசிரியை, யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமனும் கிசோன், கீர்த்தன், கிமோனிசா, கிரிசன், கிமோசன், பகீரதன், கேருஜன், கிருசாந், கேனுஜா, சாருஜன், மோகீசன், யூகேசன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, இராசலிங்கம், இராசலட்சுமி, கருணாகரன் மற்றும் மகாமனி ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வரட்ணம், மகேஸ்வரி, சிவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2012) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுபரூபன் (மகன்)

தொல்புரம் மேற்கு, சுழிபுரம். (சி/571)

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரகுமாரி விஜயகுமார்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், மல்லாகம் சோடாக்கொம்பனி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரகுமாரி விஜயகுமார் நேற்று (11.06.2012) திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் விஜயகுமாரின் (லண்டன்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராசா மற்றும் மங்கையர்க்கரசு தம்பதியரின் அன்புப்புதல்வியும் காலஞ் சென்ற பாலசிங்கம் மற்றும் இராசமணி தம்பதியரின் அன்பு மருமகளும் கவிதா, கஜன் (கனடா), சுமன் (நில அளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும், யோகராசா (ஓய்வுபெற்ற மருந்தாளர்), காலஞ் சென்ற சந்திரகாந்தி மற்றும் ஸ்ரீபாலன் (கனடா), சந்திரவதனா, மதிவதனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தயானந்தன் (ஆ.வளவாளர், வ.மா.கல்வித் திணைக்களம்), தார்மிகா (கனடா), சுகன்யா ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயபத்மினி, இராசகுலேந்திரன் (இளைப்பாறிய பிரதி அதிபர், மகாஜனக்கல்லூரி), வசந்தாதேவி (கனடா), செல்வநாதன் (நகுலன் - நியூ லக்சுமி றேட்ஸ்), கனகராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அபிநயன், பிரவீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2012) செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சப்பட்டியான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோடாக்கொம்பனி ஒழுங்கை,
மல்லாகம்.

தகவல்:
வி.சுமன் (மகன்)

(19197) (15 - 06)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.